R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road , London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential , Commercial Conveyancing ,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
புதினம்
PUTHINAM

செல்வராஜா கோல்டு ஹவுஸ்
தங்கத்தின் விலைக்கே தாலிக் கொடிகள்!
கூறைப் புடவைகள், பட்டுப் புடவைகள் அனைத்தும் 40 வீத விலைக்குறைவில்!
162 B, Mitcham Road London SW17 9NJ
Tel: 020 8767 3795 / 07825 005 269

மலர் 18 JUNE 2015 இதழ் 5

SNM PAWN BROKERS
அனைத்து தங்க நகைகளும் இங்கே அடகு பிடிக்கப்படும்.

MITHUS JEWELLERS
லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகைமாளிகை
நியாயமான விலை, உறுதியான வேலைப்பாடு
பழைய நகைகளுக்கு அதிக விலை அல்லது புதிய நகை
322 LONDON ROAD, CROYDONCRO 2TJ 020 8683 1756

வித்தியா

மாணவி வித்தியாவின் படுகொலை உலகத் தமிழினத்தினை கடும் கோபத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

வட கிழக்கு எங்கும் மாணவர்களும், பொதுசனங்களும் நீதி கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மிகவும் குரூரமான முறையில் வித்தியா கொல்லப்பட்ட செய்தி, தமிழினத்தின் ஆன்மாவில் ஆழமான வடுவினை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

முள்ளிவாய்க்காலில் இது போன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட சம்பவங்கள் அரச படைகளால் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவை யாவும் மக்கள் மனத்தில் தீரா வடுவாக பதிந்திருக்கும்.

ஆட்சி மாற்றத்தின் பின் ஏற்பட்டுள்ள சிறிய ஜனநாயக வெளியில் மக்கள் தமது ஒட்டுமொத்த உணர்வுகளை வெளிப்படுத்தி உள்ளார்கள்.

மக்கள் போராட்டங்களை குழப்பும் வகையில், வன்முறைக் கும்பலொன்று திட்டமிட்ட வகையில் இறக்கி விடப்பட்டுள்ளது.

ஒட்டுக் குழுக்களும், புலனாய்வாளர்களின் கையாட்களும் இணைந்ததுதான் இக் கும்பல்.

95 இலிருந்து இற்றை வரை கொழும்பின் ஆட்சியே யாழ். குடாவில் நடக்கிறது.

வடமாகாண சபை பெயருக்கு இருந்தாலும் ஆளுநர் பளிக்கக்காரவை மிஞ்சி எதுவும் அசையாது.

காவல்துறையைக்கூட கொழும்புதான் கட்டுப்படுத்துகிறது.

95 இலிருந்து இராணுவப் புலனாய்வாளர்களோடு இயங்கும் உள்ளூர் நபர்களே, தொடர்ச்சியாக யாழ். குடாவில் நடக்கும் பல சமூக விரோதச் செயற்பாடுகளின் பின்னால் இருக்கின்றார்கள் என்பதுதான் நிஜம்.

பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டாலும், கொலை செய்தாலும், தமது புலனாய்வு எசமானர்கள் தம்மைக் காப்பாற்றுவார்கள் என்ற துணிவு இவர்களிடம் இருக்கும்வரை படுகொலைகள் தொடரும்.

தொடர்ச்சி 23ம் பக்கத்தில்

குடிவரவு விண்ணப்பங்கள் & மேன்முறையீடுகள்
Immigration Application and Appeals
- அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் Fresh Applications
- உங்கள் உறவினர்களை வரவழைக்கும் விண்ணப்பம்
- இலங்கை-இந்தியாவில் பிரித்தானிய விசா நிராகரிப்புக்கு எதிரான மேன்முறையீடு
- குழந்தைகள் 7 வருடம் தொடர்ச்சியாக வசித்திருப்பின் வதிவிட விசா விண்ணப்பம்
- பிரித்தானிய குடியுரிமை விண்ணப்பங்கள்– நிரந்தர குடியுரிமை விண்ணப்பங்கள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்
- ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருவோர், திருமணம் செய்வோருக்கான EEA விண்ணப்பங்கள்

Visitors & Dependent Visa – Human rights Claim – Immigration Detention Matters – Bail Applications

- Social Welfare Benefits –Visa Extension
- Entry Clearance Applications (Spouse – Family Reunion Visitor – Settlement – Student – Prospective Student)
- Point based Applications :Tier 1 –Tier 5 (Student / Entrepreneur Visas)

மொழிபெயர்ப்பு சேவை தமிழ் - சிங்களம்

Kulendran Immigration Law Chambers, 90 High Street, Colliers Wood, SW19 2BT, 0208 682 4494 / 0208 542 8222 / 07769185592, email: kilc_work@yahoo.co.uk

CALL US 24x7 on 0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
LycaFly
PLUS £20 FREE
LYCAMOBILE TOP-UP WHEN YOU BOOK WITH US

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

ELAKKIA
Brand

SAVOURIES

FROZEN SNACKS

FROZEN MEALS

FROZEN CURRIES

+44 (0) 208 799 7180, www.elakkia.com, sales@elakkia.com

Ruby's Food Products Limited, Unicorn House, Unit 4, Walmgate road, Perivale, UB6 7LH, UK.

A Brand From RUBY'S

வித்தியா... ஒரு தொடர்கதை

இந்தக் குடும்பத்தினருக்கு ஆறுதலும் கூறிய இவர்களே வித்தியா மீது பாலியல் பலாத்காரம் புரிந்து கொலை செய்தவர்கள்

தமிழ்த் தேசத்தின் சப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவில் பிறந்து வளர்ந்து உயர்வகுப்பில் கற்று வந்தவர் வித்தியா சிவலோகநாதன்.

நடுத்தர வர்க்கக் குடும்பத்தில் கடைக்குட்டியாகப் பிறந்த செல்ல மகளான வித்தியா ஏன், எவ்வாறு, எதற்காகக் கொலை செய்யப்பட்டாரென்பது கல்நெஞ்சையும் கரைய வைக்கும் ஒரு கதையாகிவிட்டது.

பாரிசவாதத்தால் முடங்கியிருக்கும் தந்தை, குடும்ப பாரத்தைச் சுகமான சுமையாகச் சுமந்து நிற்கும் தாயார், வவுனியாவில் கல்வி பயின்று வரும் அக்கா, இந்தக் குடும்பத்தின் அச்சாணியாக உழைத்து வரும் அண்ணன். இந்தச் சின்னஞ்சிறு கூட்டின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவரே பதினெட்டு வயதான வித்தியா.

2015 மே மாதம் 13ம் திகதி வழக்கம்போலவே ஒரு புதிய நாளாகப் பிறந்தது. அந்த நாளே வித்தியாவின் இறுதிநாளாகும் என்று யாருமே எண்ணியிருக்க மாட்டார்கள்.

காலை 7 மணிக்கு பாடசாலைச் சீருடையில் வீட்டிலிருந்து புறப்பட்ட வித்தியா, இரவாகியும் திரும்பவில்லை. பிள்ளையைக் காணாத தாயார் அதுபற்றி விசாரித்தபோது வித்தியா அன்று பாடசாலைக்குச் செல்லவில்லை என்பது தெரிய வந்தது. அன்று இரவே ஊர் காவற்துறை காவல் நிலையம் சென்ற வித்தியாவின் தாயாரும் அண்ணனும் முறையிட்டனராயினும், காவல்துறையினர் இதில் கரிசனை காட்டவில்லை.

14ம் திகதி காலை வித்தியாவின் குடும்பத்தினரே அவரைத் தேடும் துர்ப்பாக்கிய நிலைக்கு இலங்கையின் இன்றைய அரசு இயந்திரம் அமைந்திருப்பது துர்ப்பாக்கியமானது.

குடும்பத்தினரின் தேடுதல் முயற்சியில் முதலில் அவர்கள் கண்களில்பட்டது வித்தியாவின் ஒற்றைப் பாதணி. அந்த இடத்திலிருந்து சில மீட்டர்கள் தூரத்தில் வித்தியாவின் அண்ணன் நிசாந்தன் கண்ட காட்சி... அவரை மயக்கமடையச் செய்து நிலத்தில் வீழ்த்திவிட்டது. புதர் நிறைந்த அப்பகுதியில் பனையோலை ஒன்றினால் மூடப்பட்டிருந்த வித்தியாவின் உடல் கிடந்த கோலம் அவருக்கு என்ன நடந்தது என்பதைக் காட்டிற்று.

கால்களும் கைகளும் கட்டப்பட்டு, வாய்க்குள் ஏதோ திணிக்கப்பட்டு... இளம் பூ ஒன்று இதழ் விரித்து மணம் பரப்பும் வேளையில் கருக்கப்பட்டது போன்றது அந்தக் காட்சி.

அதன் பின்னரே காவற்துறையினர் அங்கே வந்தனர். ஊர் கூடி அவர்களிடம் நீதி கேட்டது. அதன் பின்னரே விசாரணை நடத்தப்படுவது போன்ற ஒரு தோற்றம் காணப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த பூபாலசிங்கம் என்பவரின் புதல்வர்களான இந்திரகுமார் (40), ஜெயக்குமார் (34), தவக்குமார் (32) ஆகிய மூன்று சகோதரர்கள் கைதாகினர் என்பது நம்ப முடியாத அதிர்ச்சியளித்தது.

இவர்களில் இருவர் சம்பந்தப்பட்ட திருட்டு வழக்கொன்றில் அவர்களைக் காட்டிக் கொடுத்த சாட்சியாக வித்தியாவின் தாயார் இருந்தார் என்ற பகைமையின் எதிரொலியே இக்கொலை என்று காவற்துறைத் தரப்பினர் முதலில் தெரிவித்தனர். கைதான மூவரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைத்து விசாரிக்கப்பட்டபோது, மேலும் ஐவரின் பெயர்களை இவர்கள் வழங்கினர். இதில் ஒருவர் வேலணை பிரதேச சபையில் சாரதியாகக் கடமையாற்றுபவர். மற்றைய நால்வரும் கொழும்பில் தொழில் புரியும் இளைஞர்கள். குடித்துக் கும்மாளமிடவென மாதம் ஒரு தடவை இவர்கள் வேலணை நண்பர்கள் வீட்டிற்கு வந்து செல்வது வழக்கமாம்.

வித்தியாவின் இறுதிச் சடங்கிலும் கலந்துவிட்டு, பின்னர் வீடு சென்று இந்தக் குடும்பத்தினருக்கு ஆறுதலும் கூறிய இவர்களே வித்தியா மீது பாலியல் பலாத்காரம் புரிந்து கொலை செய்தவர்கள் என்பது தெரிய வந்தபோது புங்குடுதீவு மக்கள் அதிர்ச்சியில் விறைக்கவில்லை. மாறாக, ஆத்திர மேலீட்டால் உக்கிரமடைந்து, அவர்களைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு காவற்துறையினர் முன்னால் திரண்டெழுந்தனர்.

இவ்வேளையில் சுவிஸிலிருந்து புங்குடுதீவு வந்து வித்தியா படுகொலையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட இன்னொருவர் கொழும்பிலிருந்து சுவிஸிற்கு விமானமேற முயற்சித்த வேளையில் கைதானார்.

முதலில் கைதான மூன்று சகோதரர்களும் இவர்கள் ஐவரிடமே இக்கொலையை ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைத்ததாக விசாரணையில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

வித்தியாவின் இறுதிச் சடங்கில் ஆரம்பமான கண்டன ஆர்ப்பாட்டங்கள் தமிழர் தாயகத்திலுள்ள பாடசாலைகளுக்கு விரிந்து, சகலரையும் இதன்பால் ஈர்த்து பணிப்புறக்கணிப்பு, கடையடைப்பு, வீதி மறியல், பூரண கர்த்தால் என்று படிப்படியாக வியாபித்தது.

சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கொண்டு செல்லப்பட்ட வேளையில் அங்கு குவிந்திருந்த மக்கள் நீதிமன்றக் கட்டிடத்தைத் தாக்கினர். அங்கு நின்ற வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இறுதியில் அதிரடிப்படையினர் விரைந்து சென்று கண்ணீர் புகைப்பிரயோகமும் ஆகாய வேட்டுகளும் தீர்த்து நிலைமையைச் சுமுகமாக்கினர்.

ஆனால், மக்களின் மனநிலை அதற்கும் அப்பாலாகி விட்டது.

– தொடர்ச்சி 23ம் பக்கத்தில்

புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 18 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான 25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொக்குவில் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள 4 பரப்பில் உள்ள 3 படுக்கையறை யுடனான காணியும் வீடும் விற்பனைக்கு.

கொக்குவில் புகையிரத நிலையம் மருத்துவக்கல்லூரி முதலியவற்றுக்கு அருகாமையில் அமைந்துள்ளது. விலை பேசித்தீர்க்கப்படும்.

தொடர்புகளுக்கு: 07466466178

சங்கானையில் வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சங்கானையில் (சங்கானை றோட்டில்) ஆறரைப் பரப்பு காணியில் வீடு விற்பனைக்கு. நான்கு அறை, இரண்டு குளியல் அறை, கிணறு, தண்ணீர் டாங்கு, வேலையாட்கள் தங்க இரண்டு அறை வீடு, சுற்று மதில் ஆகியன அமையப் பெற்றவை. விபரங்களுக்கு லண்டனில்

0785 264 7957

அச்சகத் தொழில் செய்வோர்,
பத்திரிகை நடாத்துபவர்கள்,
புத்தகங்கள் வெளியிடுவோர்,
மாதாந்திர சஞ்சிகை
நடாத்துபவர்களுக்காக....

புத்தக வடிவமைப்பு, டி.டி.பி.,
திருமண அழைப்பிதழ்கள், சிறப்பு மலர்கள், உங்கள் வீட்டு விஷேச நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள்
என சிறந்த வேலைகளை இந்தியாவிலிருந்து வழங்குகிறோம்

Call: 9551395516
www.satyanlayout.com

Looking for an
ACCOUNTANT ?
We are next to you!
We provide solutions for your Accountancy needs

உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months

P & K ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER

183. Burnt Oak Broadway,
Edgware. Middlesex.
HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)

www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com

Nandika's Sarees
நந்திகாஸ் சாரீஸ்

FREE UK Delivery

வீட்டில் இருந்தபடியே உங்கள் மனதுக்குப் பிடித்தமான அனைத்து வகையான புடவைகள், பிளவுஸ்கள் மற்றும் :பான்ஸி அணிகலன்கள் வாங்குவதற்கு நாட வேண்டிய ஒரேயோரு இணையதளம்

www.nandikasarees.co.uk

- Indian Sarees
- Fashionable Stiched Blouses
- Fancy Jewellery
- Bindis
- and many more

Visit our online store www.nandikasarees.co.uk

Contact
Email: nandikasarees@yahoo.co.uk Phone: 07944094691

விமலின் பக்கம்

'தில்லானா மோகனாம்பாள்' படத்தில் நையாண்டி நாதஸ்வரக் கலைஞராக நடிக்கும் மனோரமா, நாதஸ்வர மேதை சண்முகசுந்தரமாக நடித்த சிவாஜிகணேசனிடம் கேட்பார்: "இனிமையான இசை உங்க நாயனத்திலை மட்டும்தான் வருமா?" சிவாஜி பதில் சொல்வார்: "நாயனத்தில் ஒன்றுமில்லை. எல்லாம் நாபிக் கமலத்திலிருந்து வரவேண்டும்"

இதே போல, பல வருடங்களுக்கு முன் ஜேர்மனியில், என் குடும்ப நண்பர்கள் டாக்டர் ரூபிணி செல்வநாதன் தம்பதிகளின் புதல்வியின் வயலின் அரங்கேற்றத்திற்குத் தலைமை தாங்க வயலின் வித்தகர் குன்னக்குடி வைத்தியநாதன் அழைக்கப்பட்டிருந்தார். அரங்கேற்ற நிகழ்ச்சித் தொகுப்பாளராக நானும் அழைக்கப்பட்டிருந்தேன்.

அரங்கேற்றத்திற்கு முன்னையநாள் ஒத்திகைகளை குன்னக்குடியார் கவனித்துக் கொண்டிருந்தார்.

வயலின் மேதை குன்னக்குடி

எம்.கே.தியாகராஜ பாகவதரின் 'நீனகருணாகரனே நடராஜா நீலகண்டனே' போன்ற பாடல்களையும், கே.பி. சுந்தராம்பாளின் பாடல்களையும் மற்றும் ஏராளமான பாடல்களையும் வயலினில் இசைத்து வெளியிட்டு மக்கள் மனங்களை குன்னக்குடியார் கொள்ளை கொண்டிருந்த காலம் அது. அவருடைய வயலினில் மட்டும்தான் அந்த இனிமை வரும் என்று நான் எண்ணியிருந்த காலம்.

செல்வநாதன் தம்பதிகளின் புதல்வியின் கையிலிருந்து வயலினை வாங்கிய குன்னக்குடியார், ஐந்து நிமிடங்கள் வாசித்து குடும்பத்தினரைப் பரவசப்படுத்தினார்; என்னையும் வியக்க வைத்தார்!

"நாளைக்கு அரங்கேற்றத்திலை இந்தப் பாட்டை நீதான் வாசிக்கப் போறே! நான் சொல்லித் தாறேன்" என்று அந்தப் பெண் குழந்தைக்கு நம்பிக்கையூட்டியது எனக்கு இன்னும் வியப்பாக இருந்தது.

மறுநாள் மாலை செல்வநாதன் தம்பதிகளின் புதல்வியர் அரங்கேற்றம். பெருந்திரளாக கூட்டம். முன் வரிகையில் பிரதம விருந்தினர் வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதன். நிகழ்ச்சித் தொகுப்பாளராக நான். இடைவேளைக்குப் பின் அந்தச் சிறுமி, நிகழ்ச்சி நிரலில் இல்லாத ஒரு பாடலை (முதல் நாள் இரவு குன்னக்குடியார் பயிற்றுவித்த ஒரு பாடலை) வாசித்து முடிக்கிறார். சபையோர் கரகோஷம் மண்டபத்தை அதிர வைத்தது. ஒரு கலைஞனின் திறமை அவன் கையிலோ அவனது வாத்திய இசைக் கருவியிலோ இல்லை. அந்தத் திறமை, இறை அருளால் பூர்வ ஜென்மப் பயனாக, பெற்றோரின் தவப் பயனால், பிரார்த்தனைகளினால் போய்ச்சேருகிறது.

எனது இந்தக் கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்துவதுபோல அமைந்திருந்தது லயஞான குபேரபூபதி தட்சணாமூர்த்தி என்ற இசைச் சக்கரவர்த்தியின் வாழ்க்கை, 42 ஆண்டுகாலம் மட்டுமே இந்த மண்ணில் வாழ்ந்திருந்தாலும் நாடுகனின் எல்லைகளையும் கடந்து ஒலித்தது அவரது தவில்!

தவில் ஒரு பக்க வாத்தியம்தான். தனியாக 'தனித் தவில்' கச்சேரி செய்ய முடியாது என்ற மரபை மீற மறுத்து வந்த பண்பாளர் அவர். "நாதஸ்வரம் ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள். அவர் வந்து வாசித்து பின் நான் வந்து 'தனி' வாசிக்கிறேன்" என்று தன் கொள்கையில் உறுதியாக இருந்தவர் தட்சணாமூர்த்தி.

அவரது தவிலில் எழும் நாதம் ஒலி, குரல் அவரது தவிலில் இருந்து மட்டும்தான் எழுப்பக் கூடியதா? இல்லை என்று நிரூபித்தவர் தட்சணாமூர்த்தி!

தட்சணாமூர்த்தி இந்தியாவுக்கு அடிக்கடி விமானம் மூலம் செல்வார். தனது தவிலை அவர் கொண்டு செல்ல மாட்டார். யாருடைய தவிலையாவது வைத்துச்சாதிப்பாராம். கேரளாவில் கலைச்சேரி ஜகந்நாதர் கோவிலில் கச்சேரி நடத்தவிருந்த தட்சணாமூர்த்திக்கு தவில் கொண்டு வருவதாகச் சொல்லியிருந்தவர்கள் கை விரித்து விட்டார்கள்.

தவில் மேதை தட்சணாமூர்த்தி

கோயில் பூஜை நேரத்தில் தவில் வாசித்த கோயில் கலைஞரிடம் தட்சணாமூர்த்தி நேரில் கேட்டார். ஆனால், கோயில் கலைஞரோ- "தம்பி இது கோயிலில் பூசையின்போது தினசரி தட்டும் மேளம். நீங்கள் வாசிக்கக்கூடிய தவில் அல்ல" என்று மறுத்தாராம். "பரவாயில்லை! எனக்கு இது போதும்!"என்று கேட்டு வாங்கிக் கொண்டாராம் தட்சணாமூர்த்தி.

கச்சேரி தொடங்கியது. மன்னார்குடி பரமசிவம்பிள்ளை நாதஸ்வரக் கலைஞரும், அவரது தவில் கலைஞர்களும் 'மல்லாரியில்' ஒரு பிடி பிடித்தபடி நின்றார்கள். அரை மணி நேரத்தில் தட்சணாமூர்த்தி வாசித்த 'கோயில் மேளம்'உரத்து ஒலித்து மக்கள் கவனத்தை ஈர்த்தது!

"இது எனது கோயில் மேளம்தானா?" என்று மேளம் இரவல் கொடுத்த கலைஞர் வியப்படைந்தாராம்.

இறைவனின் திருவருட்கடாட்சம் அவரது கைகளில் பொங்கி வழிந்ததுதான் காரணமே தவிர, மேளத்தில் எதுவுமே இல்லை!

தங்கள் பிள்ளையை எப்படியும் உயர் பதவியில் அமர்த்த ஆவன செய்ய வேண்டும் என்று கனாக்காணும் மேனாட்டுத் தமிழ் பெற்றோர், தமிழ் பாடசாலை, யமஹா கிளாஸ், யூடோ வகுப்பு, சயன்ஸ் ரியூஷன் இப்படித் தமது பொழுதையும் பணத்தையும் செலவிட்டு மகிழ்கிறார்கள். தட்சணாமூர்த்தியின் தந்தையார் தவில் விஸ்வலிங்கம்பிள்ளை, தனது மகனை ஒரு மாபெரும் தவில் கலைஞனாக்க வேண்டும் என்று கனவுகள் கண்டார். காலை 5 மணி முதல் தவில் பயிற்சி, தினமும் 16 மணி நேரம் தவில் சாதகம் செய்யப்பட்டது.

தங்கள் கிராமத்துக்குப் பிரபல கலைஞர்கள் வந்தால், அவர்கள் தனித் தவில், லயவின்யாசம் செய்வதை மகனுக்குக் காட்ட குட்டி தட்சணாமூர்த்தியைத் தோளில் சுமந்தபடி மணிக்கணக்காக நின்றபடி அந்தத் தவில் வாசிப்பை மகனைக் கேட்க வைப்பார். வீட்டுக்கு வந்ததும் அந்தத் தவில்காரரின் நுட்பங்களையும் சிறப்பு அம்சங்களையும் தனக்கு வாசித்துக் காட்டுமாறு பணிப்பாராம் அப்பா விஸ்வலிங்கம்பிள்ளை!

பின்னர் இந்தியாவிற்குச் சென்று நாச்சிமார் கோயில் ராகவப்பிள்ளையின் பொறுப்பில் மகனை ஒப்படைத்து விட்டுச் சென்றார் தந்தையார். ஒன்றரை ஆண்டுகள் கழிந்ததும் குரு ராகவப்பிள்ளை சொன்னாராம்: "உனக்கு இனியும் சொல்லித் தர என்னிடம் ஒன்றுமில்லை. ஒரு விஷயம் காதில் விழுந்ததும், அது உடனே உன் கைகள் மூலம் ஒலிக்கும்படியான கடவுள் வரப்பிரசாதம் உனக்குக் கிடைத்துள்ளது. நீ ஊருக்குப் போ! மகோன்னதமான பேரும் புகழும் உன்னை வந்து சேர இன்னும் அதிக காலம் இல்லை!"

-குரு ராகவப்பிள்ளையின் இந்த ஆசியுரை தட்சணாமூர்த்தியின் வாழ்வில் பலிக்க ஆரம்பித்தது. விண்ணிலிருந்து தேவர்கள் இளைஞன் தட்சணாமூர்த்தியின் மீது மலர் சொரிந்து, "உன் குருவின் வாக்கு இன்று முதல் நிஜமாகும்"என்றார்கள்.

சென்னையில் மார்கழி சங்கீத சீசனில் தமிழிசைச் சங்க இசை விழாவில் காருக்குறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வரத்துக்கு தவில் வாசிக்க தட்சணாமூர்த்தியை ஏற்பாடு செய்தமை அவரது வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. காருக்குறிச்சியின் நட்பையும் உறவையும் இதனால் உருவாக்கியவர் தட்சணாமூர்த்தியின் நண்பர், தவில் வித்துவான் நீடமங்கலம் ஷண்முகவடிவேலு. இதனைத் தொடர்ந்து ஷேக் சின்ன மௌலானா, மதுரை சேதுராமன் சகோதரர்கள், சாவகச்சேரி பஞ்சாபிகேசன் உட்படப் பலருக்குத் தவில் வாசித்து அவர்களால் பாராட்டப்பட்டவர் தட்சணாமூர்த்தி!

தெய்வீகவரம் பெற்ற இந்தத் தவில் மேதையின் நினைவாக நடைபெற்ற அவரது நண்பர் நற்குணம் தலைமையில், பாடகர் சத்தியமூர்த்தி - பத்மநாப ஐயர் - தட்சணாமூர்த்தியின் புதல்வர் உதயசங்கர் ஆகியோருடன் வேறு பலரும் இணைந்து, அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு, ஆவணப்பட வெளியீட்டு விழா ஒன்று கடந்த ஏப்ரல் மாதம் லண்டன் நட்சத்திரா கலை அரங்கில் நடத்தப்பட்டது.

1933 முதல் 1975 வரை வாழ்ந்து சாதனைகள் புரிந்து 42 வயதில் மறையும்வரை அவரது கச்சேரிகள், சந்திப்புகள் பற்றிய எழுத்துப் பதிவுகள், ஒலிப்பதிவுகள், காணொளிப் பதிவுகள் எவையுமே போதியளவு இல்லை என்று அறிந்த போது என் மனம் வேதனைப்பட்டது. கொழும்பில் 1965 முதல் 70 வரையிலான காலப் பகுதியில் வெள்ளவத்தையில் ஆடி மாதத்தில் 'வேல்விழா' மயிலாப்பூர்போல இசைக் கச்சேரிகள் நடக்கும். இலங்கை வானொலி அதனை அஞ்சல் செய்யும். தட்சணாமூர்த்தியின் தவில் என்றால் ஒரு குறிப்பிட்ட ஒரு ரசிகர் தனது 'ஸ்பூல்' நாடா ஒலிப்பதிவு யந்திரத்தை கொண்ட வந்து வைத்து ஆரம்பம் முதல் முடிவு வரை ஒலிப்பதிவு செய்வார். அவர் வெள்ளவத்தை போலீஸ்நிலைய பொறுப்பதிகாரி சிவபாதம். போலீஸ் பிரிவில் எஸ்பியாகப் பதவி உயர்வு பெற்று இப்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வருகிறார்.

விண்ணுயர புகழ் பெறுபவர்களை விரைவில் விண்ணுக்கே அழைத்துக் கொள்வது அந்தப் பரமனின் விளையாட்டுக்களில் ஒன்று போலும். எனது நினைவுக்கு வந்த பெயர்களையும் அவர்கள் இறையடி சேர்ந்த வயதையும் கீழே குறிப்பிட்டுள்ளேன்.

பிரிட்டிஷ் நாடகத் தந்தை ஷேக்ஸ்பியர் - 52. பிரிட்டிஷ் இளவரசி லேடி டயானா- 39; கறுப்பு மனிதன் இன்று அமெரிக்க அதிபராக வரக் கனவு கண்டு குரல் எழுப்பிய மார்ட்டின் லூதர் கிங் - 39; இளம் உள்ளங்களைத் தன் பாடல்களால் சுண்டி இழுத்த எல்விஸ் பிரஸ்லி - 42; தமிழ் மொழியில் புதுமைமிகு பாடல்களை இயற்றிய மஹாகவி சுப்பிரமணிய பாரதியார் - 39; தன் தவிலால் இணுவில், அளவெட்டி, யாழ்ப்பாணம் பெயர்களை உலக வரைபடத்தில் பதித்த தெய்வீகக் கலைஞன் தட்சணாமூர்த்தி- 42. ■

ரூபினி செல்வநாதன்

Charity No : 1125884

ஈழபதீஸ்வரர் ஆலயம் - வெம்பிளி

Union Road, HA0 4AU, Tel : 020 8902 3238

பிரும்மோற்சவ விஞ்ஞாபனம் 2015

(14.06.2015 - 30.06.2015)

சிவ மெய்யடியார்களே!

எல்லாம் வல்ல ஸ்ரீ பர்வதவர்தினி அம்பிகா சமேத ஈழபதீஸ்வர பெருமானின் ஆலய பிரும்மோற்சவ விழா மங்களகரமான ஸ்ரீ மன்மத வருடம் ஆனி மாதம் 1ம் நாள் 15.06.2015, திங்கள்கிழமை அன்று ரோகினி நட்ஷத்திரமும் சதுர்த்தசி திதியும் கூடிய சுபதினத்தில் அன்று காலை 10.30 மணியளவில் கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பித்து 15 தினங்கள் பிரும்மோற்சவ விழா நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

பிரும்மோற்சவ நிகழ்ச்சிகள்

14-06-15	ஞாயிறு	காலை 9.00 மணி	கணபதி ஹோமம்
		மாலை 6.00 மணி	சாந்தி வழிபாடு, விநாயகர் வீதி உலா
15-06-15	திங்கள்	காலை 10.30 மணி	கொடியேற்றம்
		மாலை	விநாயகர் யாக ஆரம்பம்
17-06-15	புதன்	காலை	விநாய்கர் யாக நிறைவு
		மாலை	முருகன் யாக ஆரம்பம்
20-06-15	சனி	காலை	முருகன் யாக நிறைவு
		மாலை	பக்தி முத்தி பாவனோற்சவம் சிவமஹாயாகம் ஆரம்பம்
24-06-15	புதன்	மாலை	மாம்பழத் திருவிழா
26-06-15	வெள்ளி	மாலை	பஞ்சமுகார்ச்சனை கைலாச வாகன காட்சி
27-06-15	சனி	மாலை	சப்பறத்திருவிழா
28-06-15	ஞாயிறு	காலை 10.30 மணி	சித்திர தேரில் வீதி உலா
29-06-15	திங்கள்	காலை 10.00 மணி	தீர்தோற்சவம் மஹாயாக நிறைவு
		மாலை	கொடியிறக்கம்
30-06-15	செவ்வாய்	மாலை 07.00 மணி	திருக்கல்யாணம்
01-07-15	புதன்	மாலை	வைரவர் மடை

பிரும்மோற்சவ நிகழ்ச்சி நிரல்

காலை	
08.30	அபிஷேகம்
10.30	பூஜை
10.45	ஸ்தம்ப பூசை
11.30	வசந்த மண்டப பூசை
12.00	சுவாமி திருவீதி உலா
01.00	பிரசாதம் வழங்கல்

மாலை	
06.00	பூஜை
06.30	ஸ்தம்ப பூசை
07.00	கலை நிகழ்ச்சி
07.30	வசந்த மண்டப பூசை
08.00	சுவாமி திருவீதி உலா
09.30	பிரசாதம் வழங்கல்

விசேட நாட்களில் பூஜை நேரம் மாற்றப்படும்

சிவ அடியார்கள் அன்பர்கள் அனைவரும் பிரும்மோற்சவ விழாவில் பங்குபற்றி பூஜைக்கு தேவையான பொருட்களை கொடுத்து சிவபுண்ணிய பேறு பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டுகிறோம்.

பிரும்மோற்சவ குருக்கள் ஆலயகுருக்கள்

சிவஸ்ரீ ஹரிஹர சுப்ரமணிய குருக்கள், சிவஸ்ரீ சுரேஸ்வர குருக்கள், சிவஸ்ரீ ராஜசேகரக் குருக்கள்

இங்ஙனம் : ஆலய தர்மகர்த்தாக்களும், நிர்வாக சபையினரும்.

ஹரோ நகர புதிய மேயர் லண்டன் பாபா!

தாயக உணர்வாளருக்கு ஆங்கில மண்ணில் உயர் பதவி

தாய்த் தமிழின் விடுதலை உணர்வோடு, உலகமெல்லாம் வாழும் தமிழ் பேசும் மக்களின் அன்பைத் தனதாக்கிக் கொண்டு, ஆங்கில மண்ணில் இருபது ஆண்டுகளாக இங்கிலாந்து அரசியலோடு இரண்டறக் கலந்து, பொது வாழ்வோடு தன் வாழ்வை இந்த நாட்டோடு இணைத்துக் கொண்ட சுரேஷ் கிருஷ்ணா என்ற லண்டன் பாபா லண்டனில் ஹரோ மாநகரின் அதிஉயர் மேயராகப் பதவி ஏற்றார்.



ஹரோ பகுதியில் வாழும் தமிழர்கள் மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகமே பெருமைப்படக்கூடிய இந்நிகழ்வு, மே 19ம் திகதி மாலை 6 மணிக்கு ஹரோ மாநகர சபையின் வருடாந்திரக் கூட்டத்தில் நடந்தேறியது.

ஹரோ சிவிக் சென்ரரில் கவுன்சிலர்கள் கூடும் மண்டபத்தில், அழைப்பாளர்கள் சிலர் கலந்துகொண்ட 2015-2016 ஓராண்டுக்கான சம்பிரதாயபூர்வமான மேயர் தெரிவு வைபவம் நடைபெற்றது.

கவுன்சிலர் BARRY KENDLER மேயர் பதவிக்கு சுரேஷ் கிருஷ்ணாவின் பெயரைப் பிரேரித்தார். கவுன்சிலர் GRAHAM HENSON அவரை ஆமோதித்தார்.

கடந்த ஓராண்டு காலம் பதவி வகித்த AJAY MARU புதிய மேயர் தெரிவு நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், யாழ்ப்பாணத்தில், நெல்லியடியில் சுரேஷ் கிருஷ்ணா பிறந்தவரென்றும், அவரது நடிப்பு மூலம் உலக ரசிகர்களுக்கு "லண்டன் பாபா" என்று அறிமுகமாகியுள்ளாரென்றும் குறிப்பிட்டார்.

"ஹரோ மேயராக சுரேஷ் கிருஷ்ணா வரப்போவதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். சமூகத்திற்காக உழைக்கும் கடின உழைப்பாளி இவர். கடந்த இருபது வருட காலமாக இங்குள்ள மக்கள் சமூகத்திற்காக சேவை செய்து வருகிறார். எந்த விஷயத்திலும் எதிர்மறையான கருத்துக்களுமற்றவர். எதையும் சாதிப்பேன் என்ற மனப்பான்மை கொண்டவர். நினைப்பதை முடிப்பவர். எதிலும் நல்ல பக்கங்களைப் பார்க்கிற தன்மை உள்ளவர் என்றும் கூறினார்.

சமூகத்தின் வெற்றிக்கு வழிகாட்டி என்று கவுன்சிலர் KENDLER புகழ்ந்துரைத்தார்.

இங்கிலாந்தின் தொழிற்கட்சியோடு தன் அரசியல் வாழ்வை இணைத்துக்கொண்டு, தாய்த் தமிழ் மண்ணையும் மறக்காது தன் பங்களிப்பை வழங்கி வரும் சுரேஷ் கிருஷ்ணா புதிய மேயராக 32 வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். ஆனாலும், எதிர்க்கட்சியிலிருந்து அவருக்கு எந்த எதிர்ப்பும் தெரிவிக்கப்படாதது குறிப்பிடத்தக்கது.

சம்பிரதாயபூர்வமாக மேயர் பதவியிலிருந்து விலகுகின்ற AJAY MARU வைத் தொடர்ந்து, மேயர் பதவியை புதிய மேயர் சுரேஷ் கிருஷ்ணா ஏற்றுக் கொண்டார்.

மேயர் பதவிக்கான பிரகடனத்திலும் அவர் கையெழுத்திட்டார். ஈழத்தமிழர் ஒருவர், அதுவும் தமிழீழ விடுதலை உணர்வுள்ள ஒருவர்; ஆங்கிலேயர்களின் இதயங்களை வென்று, அந்நிய மண்ணில், ஆங்கிலேய மக்கள் மன்றத்தில், செங்கோல் ஏந்திய ஒருவர் அழைத்து வந்து மேயர் இருக்கையில் அமர்த்தியபோது, சிலிர்த்தது.

அந்தச் சபையிலே பல தடவை கவுன்சிலராகவும், துணை மேயராகவும் பேசிய சுரேஷ் கிருஷ்ணா, மேயராகப் பதவி ஏற்ற பின்னர் முதல் தடவையாக சில நிமிடங்கள் நன்றி கூறி பேசினார்.

"இன்றைய பொழுது எனக்குப் பெருமை அளிக்கும் நாள். எனக்கு மட்டுமல்ல, என் குடும்பத்துக்கும். நீண்ட காலமாக நான் நினைத்து வந்தது நிறைவேறியிருக்கிறது. குறிப்பாக ஹரோ மக்களுக்கு எனது சேவை தொடரும்" என்று குறிப்பிட்ட புதிய மேயர், தனது இரு தரும காரியங்களை அறிவித்தார். ஹரோவிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டம் ஒன்றையும், ஹரோவில் உள்ள வளரும் இளம் இசைக் கலைஞர்களுக்கான திட்டத்தையும் வெளியிட்டார்.



அழைப்பை ஏற்று, வைபவத்தில் கலந்து கொண்ட நண்பர்கள், குடும்பத்தினர்களுக்கு, குறிப்பாக இலங்கை, கனடாவிலிருந்து வந்தவர்களுக்கு மேயர் சுரேஷ் கிருஷ்ணா நன்றி தெரிவித்தார்.

மூன்றாவது தடவையாக, ஹரோ கவுன்சிலராக பணியாற்றுகின்ற திருமதி சுரேஷ் கிருஷ்ணாவுக்கு புதிய மேயரின் பாரியாள் என்ற அந்தஸ்த்தைக் குறிக்கும் விதமாக பதக்கம் சூட்டப்பட்டு, பூங்கொத்தும் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப் பட்டது. ■

கண்டத்திலிருந்து மீண்ட ஜெயா!

மேல்முறையீடு: கர்நாடக கைவிரிப்பு?

முதல்வராக இருக்கும்போது இரண்டுமுறை பதவியை பறிகொடுத்தும் மீண்டும் மகுடம் சூட்டிக் கொண்ட ஒரே முதல்வர் என்கிற வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கிறார் ஜெயலலிதா. ஐந்தாவது முறையாக மீண்டும் தமிழக முதல்வராகப் பதவி ஏற்று கருணாநிதி சாதனையைச் சமன் செய்திருக்கிறார்.

ஏழு மாதங்களில், சரியாகச் சொல்லப்போனால், 217 நாட்களின் பின்னர் ஜெயலலிதா அவரது போயஸ் தோட்டத்து "தனிமைச் சிறை"யிலிருந்து வெளி உலகத்துக்கு மீண்டு(ம்) வந்திருக்கிறார். அவரது அதிமுக பக்த கோடிகளுக்கு அம்மா எதிர்த்த அரசியல் புலிகள், வெறும் காகிதப் புலிகளாகிவிட்டன! எத்தனை குற்றச்சாட்டுகள், அடுத்தடுத்த வழக்குகள், பத்தொன்பது ஆண்டுகள் சட்டப் பயணம் என்றாலும், ஜெயலலிதா "பீனிக்ஸ்" பறவையாக மீண்டு வருவார், பலருக்கு அம்மா, "ஜான்சிராணி" அவதாரமாக காட்சி கொடுப்பார் என்று சில இதழ்களுக்கு முன்னர் இப்பத்தியில் நான் குறிப்பிட்ட மாதிரி, உங்களுக்கு ஜெயா வழக்கின் - தீர்ப்பின் பின்னணி பற்றி சுருக்கமாக கூறியாக வேண்டும்.

ஜெயா கடந்து வந்த 19 ஆண்டு வழக்கு

ஒரு நீண்ட பயப் பயணத்தின் பின்னணி!: ஜெயலலிதா 1991 முதல் 1996 வரை முதல்வராக இருந்த போது, வருமானத்துக்கு அதிகமாக 66 கோடி 65 லட்சம் ரூபாய மதிப்புள்ள சொத்து சேர்த்தார் என்று 1996-ம் ஆண்டு ஜூன் மாதம் சுப்பிரமணியன் சுவாமி ஒரு புகார் மனுவை காவல்துறையில் பதிவு செய்தார். இதன் அடிப்படையில், 1996-இல் தி.மு.க ஆட்சியில் பொதுச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன் மேலும் ஒரு வழக்கை பதிவு செய்தார். இவ்வழக்கில், ஜெயலலிதாவுடன், அவரது தோழி சசிகலா, வளர்ப்பு மகன் சுதாகரன், இளவரசி ஆகிய நால்வர் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கலாகி, 1997-இல் சென்னையில் அமைக்கப்பட்ட தனி நீதிமன்றத்தில் விசாரணை ஆரம்பமானது. 2001-இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க தோல்வி பெற்றது. அ.தி.மு.க மீண்டும் ஆட்சிக்கு வந்ததால், இவ்வழக்கில் அதிமுக தலையீடு இருக்கும் என்பதால் வேறு ஒரு மாநிலத்துக்கு வழக்கை மாற்ற வேண்டும் என்று தி.மு.க. பொதுச்செயலாளர் க.அன்பழகன் உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்தார். இதனை ஏற்றுக் கொண்டு 2003-இல் வழக்கை கர்நாடக மாநில தலைநகர் பெங்களூர் தனி நீதிமன்றத்துக்கு உச்ச நீதிமன்றம் மாற்றியது. கர்நாடக அரசு வழக்கறிஞராக, மூத்த வழக்கறிஞர் ஆச்சார்யா நியமிக்கப்பட்டார். விசாரணை சூடுபிடித்தது. ஆச்சார்யாவின் சட்ட கிடுக்குப் பிடியில், பெரும் சிரமத்தில் முதல்வர் ஜெயலலிதாவும் மற்ற மூவரும் 2011-ல் நீதிமன்றத்தில் ஆஜராகி கேள்விகளுக்குப் பதில் அளித்தனர். இதனைத் தொடர்ந்து ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர்கள் தொடர்ச்சியாகக் கொடுத்த பய நெருக்கடி களினால் மனம் நொந்த ஆச்சார்யா தமது பதவியை ராஜினாமா செய்தார். இவரது இடத்துக்கு வழக்கறிஞர் பவானிசிங் வந்தார். அரசு வழக்கறிஞர்கள் மாறினர். இவர்களைப்போல் நீதிபதிகளும் மாறிக் கொண்டனர்.

கடைசியாக சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜோன் மைக்கல் டி குன்ஹா விசாரணை செய்து, கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 27-ம் திகதி நான்கு பேருக்கும் தலா நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனையும், ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபாய், மற்றைய மூவருக்கு தலா பத்துக்கோடி ரூபாய் அபராதமும் விதித்தார். நான்கு குற்றவாளிகளும் பெங்களூர்

பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டனர். நீதிபதி குன்ஹாவின் தீர்ப்பை எதிர்த்து நால்வரும் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடு மறுக்கப்படவே உச்ச நீதிமன்றத்தில் ஜாமீன் பெற்று, மீண்டும் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு (அப்பீல்) செய்தனர். இதனை விசாரணை செய்ய, தனி நீதிபதி சி.ஆர்.குமாரசாமி ஜனவரி முதலாம் திகதி நியமிக்கப்பட்டு, அதே மாதம் ஐந்தாம் திகதி விசாரணையை ஆரம்பித்து, மார்ச் பதினோராம் திகதி வரை மொத்தம் 41 நாட்கள் நடத்தினார்.

கடந்த (மே) மாதம் பதினோராம் திகதி காலை பதினோரு மணிக்கு நீதிபதி குமாரசாமி நீதிமன்றத்தில், மிக மிக மெதுவான குரலில், ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேரின் வழக்கு எண்களையும் வாசித்து விட்டு "4 பேர் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிராகரிக்கப்படுகிறது. இவ்வழக்கு விசாரணை நீதிமன்றம் (டி குன்ஹா) வழங்கிய தீர்ப்பு ரத்துச் செய்யப்படுகிறது. குற்றம்சாட்டப்பட்டவர்களின் சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது..." என்று மூன்றே நிமிடங்களில், பத்தொன்பது வருட கால வயது வழக்கை முடித்து வைத்தார். தீர்ப்பு நாளன்று நால்வரும் நீதிமன்றம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாததால், அவரவர்கள் இல்லத்திலிருந்தே விடுதலைத் தீர்ப்பை அறிந்து கொண்டனர். வெற்றிக்களிப்பினால், தமிழ்நாடு பட்டாசு வெடிகளின் தொடர் சத்தங்களினால் காதுகளைப் பொத்திக் கொண்டது. அ.தி.மு.க. தவிர்த்த தமிழக அரசியல் தலைவர்களின் இல்லங்கள் சோகத்தில் மூழ்கிக் கொண்டன!

மேல்முறையீடு கர்நாடக அரசு கடும் மௌனம்! ராகுலும் எதிர்ப்பு!

மேல்முறையீடு வழக்கில் நீதிபதி குமாரசாமி தீர்ப்பளித்ததும், முதலில் குற்றம் கண்டுபிடித்த "நக்கீரர்" கர்நாடக அரசு வழக்கறிஞர் ஆச்சார்யா, நீதிபதியின் தீர்ப்பில் பக்கத்துக்கு பக்கம் இமயமலை அளவு பிழைகளும், தவறுகளும் காணப்படுகிறது. மேல்முறையீடு செய் போதுமான ஆதாரங்கள் உண்டு என்று கொதித்தெழ; கர்நாடக அரசு தலைமை வழக்கறிஞர் ரவிவர்மகுமார், சட்ட அமைச்சர் ஜெயச்சந்திரா, சட்டத்துறை செயலாளர் செங்கப்பா, அட்வகேட் ஜெனரல் உட்பட காங்கிரஸ் தலைவர்கள் சிலரும் (கர்நாடகாவில் காங்கிரஸ் ஆட்சிதான் நடைபெறுகிறது), தமிழகத்தில் அ.தி.மு.க தவிர்த்த அத்தனை எதிர்க்கட்சிகளும் ஜெயலலிதா தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தின. தொடர்ந்து இதில் மூக்கு நுழைக்க வேண்டிய அவசியம் இல்லை எனும் சில காங்கிரஸ் தலைவர்களின் கருத்தை வரவேற்ற காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல்காந்தி, மேல்முறையீடு தேவை இல்லை என்று கடுமையாக எதிர்ப்புக்காட்டியுள்ளார். இந்தச் சூழலில்தான், கடந்த மாதம் 25-ம் திகதி கர்நாடக அமைச்சர்கள் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று முதல்வர் சித்தராமையா செய்தியாளர்களிடம் தெரிவித்தும், மேல் முறையீடு சம்பந்தமாக அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படவே இல்லை! இது எப்படி இருக்கிறது? ஆக ஜெயலலிதா சட்ட ஆறுதல் அடைய தொடங்கியிருக்கிறார்! மேல் முறையீடு செய்ய இன்னும் இரண்டு மாதங்கள் இருப்பதால் ஏன் அவசரம் என்று நடுநிலையாளர்கள் கேட்கிறார்கள். கஞ்சி கூட ஆறினால் அது பழையது தானே! இதுவுமா புரியவில்லை! ■

Since 1999

FAST CASH
SEND TODAY - COLLECT TODAY

The Most Trusted Name in Money Transfer to

Sri Lanka

Central Bank Approved Money Transfers from the UK

Collect your money immediately at any Commercial Bank or have your funds credited swiftly to any bank account

Open 7 Days

SEND FASTCASH FROM BRANCHES 30

OUR PROMISE
Your Money is Sent from the UK and not Credited Locally by Unknown Sources.
Official Transfers

Credit our account online with & call us for immediate transfer BARCLAYS

A/C Name : C.E.C. LTD // A/C No : 70713945 // Sort : 20-36-47

0208 886 4488

www.cecltd.com

FCA Fastcash is a FCA & HM Customs and Excise / registered business. MSB 12112819 / FCA -PI 540536.

HNB BOC PEOPLE'S BANK NSB Sampath Bank SEYLAN NDB bank Nations TrustBank HSBC Standard Chartered DFCC Vardhana Bank PAN ASIA

BEST DEALS TO SRI LANKA

Do not book your air ticket with any other travel agent until you speak to us!

QUALITY 1,2 & 3 BED APARTMENTS

for Rent in
Mt.Lavinia
Sea Side - Close to St. Thomas & Mt.Lavinia Hotel

Prices From £25 Per Day *

- Fully Furnished with AC & Lift
- 3 min to Galle Rd, 5 Min to Beach

Contact : Mike on 07733 261 999
Visit our website
www.stayatmount.com

SriLankan
£475
Including Taxes
from London Heathrow

LIMITED SEATS AVAILABLE!

Baggage 30kg + 7kg

Outbound Travel : 12th May - 30th June 2015 / 1st September - 30th November 2015
02 Months valid Ticket. Subject to Availability*

ETIHAD AIRWAYS	TURKISH AIRLINES	KUWAIT AIRWAYS	Emirates	QATAR AIRWAYS
from £445 incl. taxes	from £420 incl. taxes	from £490 incl. taxes	from £495 incl. taxes	from £495 incl. taxes
30kg Baggage + 7kg H. Carry	30kg Baggage + 7kg H. Carry	35kg Baggage + 7kg H. Carry	30kg Baggage + 7kg H. Carry	40kg Baggage + 7kg H. Carry

All fares are valid on off-peak season, Subject to availability. Terms and conditions apply..

130 High Street, Barnet, EN5 5XQ | www.holidayair.com

ATOL PROTECTED 9435 IATA

0208 440 0770

HA HolidayAir
A Travel Experience to Remember

தொடர்கதை

'புனித யாத்திரை'

சிவ. தியாகராஜா

நிழல் வேட்டை

1

கீரி மலையிலிருந்து தெற்குத் திசை நோக்கிச் சென்ற கற்பாதையில் ஜெயராணி விரைந்து சென்றதையும், அப்பாதையைக் குறிவைத்து தேடல் விளக்கு வெளிச்சத்தைப் பாய்ச்சிக் கொண்டு இரு ஹெலிகாப்டர்கள் வானத்தில் வந்து கொண்டிருந்ததையும் சென்ற அத்தியாயத்தில் பார்த்தோமல்லவா?

கீரிமலையை ஊடுருவிச் செல்லும் பிரதான வீதி கிழக்குத் திசை நோக்கியும், மேற்கு நோக்கியும் சென்ற போதிலும் இக் ஹெலிகாப்டர்கள் அவற்றை முதலில் தேடுவதை விடுத்து, தெற்கு நோக்கிச் சென்ற சிறிய கற்பாதையில் தேடுதலை ஆரம்பித்திருப்பது ஆச்சரியம். மேலும், அவள் இராணுவ ஜீப் வண்டியை ஓட்டிக் கொண்டு மேற்கு நோக்கிச் சென்றதை அறிந்திருந்தும், அவர்கள் அவ்வழியில் தேடிப்போகாமல் முக்கியமில்லாத இக்கற்பாதையால் வருவது விந்தையாக இருந்தது.

இத் தேடலை நிர்வகிப்பவர் எவரோ அவர் மனித உளவியல் பற்றி அறிந்தவராக இருக்க வேண்டும். பெரும்பாலும் தப்பியோடுபவர்கள் முக்கிய பாதைகளைத் தவிர்த்து மனித நடமாட்டம் குறைவாக உள்ள குச்சுப் பாதைகளைத் தெரிவு செய்வது மனித இயல்பு.

அக் கற்பாதையைக் குறிவைத்து ஹெலிகாப்டர்கள் வந்து கொண்டிருப்பதைக் கவனித்த ஜெயராணி எதிரே பாதையை நோக்கினாள். அவள் நடந்து வந்த பிரதேசம் ஒரே பொட்டல் வெளி, தொலைவில் காணப்பட்ட ஓரிரு பனை மரங்களைத் தவிர வேறு மரங்களேதும் இல்லை; ஒரே பற்றைகளும் பூடுகளுமே பரவியிருந்தன.

மனித மூளை மிகவும் அதிசயமானதொரு உறுப்பு. ஆபத்தை எதிர்கொள்ளும் சமயங்களில் அது துரிதமாக-அதிவேகமாக இயங்க ஆரம்பிக்கிறது. பயமுற்று திகிலடையும் போதிலும், ஆபத்திலிருந்து தப்பி ஓடும் போதும், சமருக்குத் தயாராகும் போதும் (Fright, Flight, Fight) - மூளையின் இயக்கத்தால் 'அட்றினலின்' என்ற சுரப்பு இரத்தத்தில் பெருக்கெடுக்கிறது. இச் சுரப்பின் பணி மனிதனுக்குத் தான் எதிர்கொள்ளும் ஆபத்தை எதிர்க்கக் கூடிய வலுவைக் கொடுப்பதேயாகும்.

அவள் சென்று கொண்டிருந்த கற்பாதையில் சற்று முன்னால் ஒரு பாலத்தைக் கடந்து அப்பாதை சென்றது. பாலத்தின் இரு பக்கத்திலிருந்த தடைச் சுவர்கள் என்றோ இடிந்துபோய் விட்டமையால், அங்கே அப்பாலம் இருப்பதை அருகில் வந்து பார்த்தால் ஒழிய, கண்டுகொள்ள முடியவில்லை. மழைநீர் வடிந்து ஓடுவதற்கான ஒரு வாய்க்காலின் மேல் அமைக்கப்பட்டிருந்த கற்பாலம் அது. ஜெயராணி சடுதியாகப் பாதையை விட்டு விலகி கரையோரமாக ஓடிச் சென்று கால்கள் சேற்றில் புதைய பாலத்தின் கீழே குனிந்து கொண்டாள். ஹெலிகாப்டர்களின் தலைவிளக்குகள் அப்பாதையை வெளிச்சம் போட்டுக் காட்டிய வண்ணம் அப்பால் சென்று மறைந்தன.

தூறல் மழையில் மேலும் அரைமணி நேரம் நடந்து சென்றபின் அவள் நடந்து வந்த கற்பாதை தார் ரோடாக மாறியது. அந்த தார்ப்பாதையின் இரு பக்கங்களிலும் வீடுகள் வர ஆரம்பித்தன. ஓடு போட்ட கல் வீடுகள், அஸ்பெஸ்ரோஸ் பலகை அடித்த மர வீடுகள், ஓலைக் கூரை வேய்ந்த மண் குடிசைகள்.

இந்த இரவில், இந்த இருளில், தூற்றிக் கொண்டிருக்கும் மழையில், இனம் தெரியாத இந்த இடத்தில், இனி மேலும் செல்ல இயலாது என அவள் உணர்ந்தாள். இன்றிரவு இங்கிருக்கும் வீடுகளில் ஒன்றில் தங்கவேண்டும்.

கல் வீடுகள் சற்று வசதியானவர்கள் வாழும் வீடுகள். முன்பின் தெரியாத ஒரு பெண்ணிற்கு இம்மாதிரியான வீடுகளில் எப்படிப்பட்ட வரவேற்புக் கிடைக்குமோ என எண்ணிய ஜெயராணி ஒரு ஓலை வேய்ந்த மண் குடிசையைத் தேர்ந்தெடுத்தாள்.

ஒரு சிறிய வளவின் மத்தியில் அமைந்திருந்த மண் குடிசை அது. வளவைச் சுற்றி வர பனை ஓலைகளால் கட்டி மறைக்கப்பட்ட வேலி. வீதிக்கரையிலிருந்த ஓலைத் தட்டியைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள் அவள்.

அந்தக் குடிசை இருளில் மூழ்கியிருந்தது. கையிலிருந்த டோர்ச் லைட்டை அடித்தாள். குடிசையின் வாசலுக்கு இரு புறமும் மண்ணிலால் அமைத்து சாணம் பூசிய இரு திண்ணைகள். அவற்றில் ஒன்றில் ஒரு மண்பானையும் அதன் கழுத்துப் பகுதியை மூடிய ஒரு மண் குவளையும் காணப்பட்டன.

குடிசைக்கு வெளியே நின்று 'அம்மா, அம்மா' என்று குரல் கொடுத்தாள்.

குடிசையின் உள்ளேயிருந்து "யாரம்மா இந்த நேரத்திலை-அது குஞ்சரியா?" என்ற பெண் குரல் கேட்டது.

"இல்லையம்மா நான் வேரை ஆள், ஒரு உதவி கேட்டு வந்திருக்கிறேன்."

கையில் லாந்தர் விளக்கைப் பிடித்துக்கொண்டு வயதான ஒரு பெண் அக்குடிசையின் வாசலுக்கு வந்தார். வெளியே மழைக்கோற் அணிந்து ஒரு இளம்பெண் நிற்பதை விளக்கை உயர்த்திப் பிடித்துக் கவனித்தார்.

"யார் பிள்ளை அது; மழையிலை நனைஞ்சு கொண்டு நிற்க வேண்டாம்; ' உள்ளை வாங்கோ"

விளக்கை இறக்கிப் பிடித்த அப்பெண்-

"காலெல்லாம் சேறாகக் கிடக்கு; திண்ணையில இருக்கிற பானையிலை தண்ணீர் இருக்கு. கால்களை நல்லாக் கழுவிப்போட்டு உள்ளை வாங்கோ" என்றார்.

மண் குவளையில் தண்ணீரைப் பானையிலிருந்து ஊற்றி கால்களைக் கழுவியபின் தான் அணிந்திருந்த மழைக் கோற்றையும் தொப்பியையும் கழற்றி வெளித் திண்ணையில் போட்டுவிட்டு உள்ளே சென்றாள் ஜெயராணி.

"முன் பின் தெரியாத என்னை இந்த அர்த்த ராத்திரியில உள்ளே வர விட்டதற்கு மிக்க நன்றி அம்மா" எனக் கூறிய வண்ணம் தனது முதுகில் மாட்டியிருந்த கன்வஸ் பையைக் கழற்றி அக்குடிசையில் மூலையில் போட்டுவிட்டுத் திரும்பியபோது -

"ஆபத்திற்குப் பாவமில்லை; இங்கை என்னை ஏமாத்தி எடுத்துப் போவதற்கு ஒண்டுமில்லை. யார் பிள்ளை நீங்கள்? இளம் பெண்ணாக இருக்கிறியளே, இவ்வளவு நேரம் கழிச்சு எங்கேயிருந்து வாறியோ? எங்கே போகிறியோ? என்ன வேணும்?"

"நான் ஒரு இக்கட்டிலை மாட்டிக் கொண்டிருக்கிறேன் அம்மா; என்னை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கடத்திக் கொண்டு போய் கீரிமலையிலை வைத்திருந்தார்கள். நான் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு வாறேன்."

விவரமாய்க் கூறினாள்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாலை ஆமி ஹெலிகாப்டர்கள் வீட்டுக்கு மேலாலை பறந்து போச்சு"

"அவர்கள் என்னைத்தான் தேடுகிறார்கள்"

"நீ என்ன புலிப்படையைச் சேர்ந்த பெண்ணா? உன்ர பேரென்ன?"

"இல்லையம்மா, நான் புலிப்படைப் பெண்ணல்ல; பள்ளிக்கூடத்திலை படித்துக் கொண்டிருக்கிறேன்; என் பெயர் ஜெயா."

"எங்கே படிக்கிறாய்?"

"மகாஜனாக் கல்லூரியிலை படிக்கிறேன்."

"மகாஜனாக் கல்லூரி . கிட்டத்திலைதான் இருக்குது. இங்கையிருந்து ஒரு மைல்தான் இருக்கும்."

"இது எந்த ஊர் அம்மா?"

"இது கொல்லங்காட்டி; மகாஜனாவுக்குப் பின்பக்கமாக, தென்மேற்காக இருக்கும் ஊர். நீ எங்கேயிருந்து வாறாய்? எந்த ஊர்?"

"நான் தெல்லிப்பழை; இங்கே தனியாகத்தான் இருக்கிறீர்களா?"

"ஓம் பிள்ளை; நான் தனியாகத்தான் இருக்கிறேன். எனது கணவர் இரண்டு வருசத்துக்கு முன்னாலை நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். ஒரு மகன் கல்யாணம் செய்து கொண்டு இங்கே கொல்லங்கலட்டியில் தான் இருக்கிறான். வாடகைக் கார் வைத்து ஓட்டும் டிரைவராக வேலை செய்யிறான். அடிக்கடி இங்கே வந்து போவான்; என்ர பேர் கனகம்மா."

"நீங்கள் தனியாக இருக்காமல் மகனுடன் போய் இருக்கலாமே?"

"அது பிரச்சனை, எனது மருமகளோடு பெரிசா ஒத்துவராது. தனியாக இருந்துவிட்டால் எல்லாருக்கும் நல்லது. ஏதாவது சாப்பிட்டியா பிள்ளை?"

"இல்லையம்மா"

"பழைய சோற்றில் தண்ணீர் ஊற்றி விட்டேன். பிழிந்து தந்தால் கீரைக் கறியோடும் தயிரோடும் சாப்பிடுவியா?"

"மிக்க நன்றி அம்மா, சாப்பிடுகிறேன்."

அன்றிரவு கனகம்மா கொடுத்த பழைய சோறும், கீரையும், தயிரும் ஜெயராணிக்கு அமிர்தமாக இருந்தது.

படுப்பதற்கு ஒரு பாயும் தலையணையும் கிடைத்தது.

கனகம்மா கொடுத்த ஒரு பழைய துணியால் தலையையும் உடலின் ஈரத்தையும் துவட்டிக் கொண்டு உறங்கப் போனாள்.

உறக்கம் சுலபமாக வருவதாயில்லை. கடந்த நாற்பது மணி நேரத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் நினைவில் நிழலாடின. அவளது வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவங்கள் அல்லவா அவை!

2

தெல்லிப்பழை கிராமம் அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது. ஸ்ரீலங்கா இராணுவ காப்டன் குணசேனா, தெல்லிப்பழை இராணுவ கந்தோரிலிருந்து ஒரு கல்லூரி மாணவியை விசாரணைக்காக அழைத்துப் போனது, காங்கேசன்துறை இராணுவ முகாமின் அதிகாரி மேஜர் சந்திரா சில்வாவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அந்தப் பெண்தான் காப்டன் குணசேனாவைச் சுட்டுவிட்டு தப்பித்துத் தலைமறைவாகப் போயிருக்கிறாள் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவளைப் பற்றிய விபரங்கள் பதியப்பட்ட பத்திரத்தை காப்டன் குணசேனா எடுத்துக் கொண்டு போய்விட்ட படியால் அவளைப் பற்றிய மேலதிக விபரங்களைப் பெற முடியவில்லை.

அவள் எப்படியும் திரும்பித் தெல்லிப்பழைக்கு வருவாள் என்ற யூகத்தில் கிராமத்தை இராணுவ வீரர்கள் சல்லடை போட்டுக் கொண்டிருந்தார்கள். தெல்லிப்பழைச் சந்தியில் நிலை கொண்ட இராணுவ வீரர்கள் வீதியால் வந்த இளம் பெண்களை விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வாசலிலும், யூனியன் கல்லூரி வாசலிலும் நிலை கொண்ட இராணுவ வீரர்கள் கல்லூரிக்கு வரும் மாணவிகளின் விபரங்களைச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பெயர், வதிவிட விலாசம், படிக்கும் வகுப்பு, முக்கியமாக நேற்று இரவு எங்கே இருந்தார்கள் - அவர்கள் எங்கே இருந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள்-ஆகியன பதிவு செய்யப்பட்டன.

அன்றைய நாள் முடிவில் அவர்கள் தேடிக் கொண்டிருக்கும் பெண்ணைப் பற்றிய எந்த விவரமும் பெறமுடியவில்லை. அப்பெண்ணைப் பற்றிய அங்க அடையாளங்களோ, வேறு தகவல்களோ இல்லாத நிலையில் அவளைத் தேடிப் பிடிப்பது வீண் முயற்சியாயிற்று; அவளது பிம்பம் அவர்களுக்கு ஒரு நிழலாகவே பட்டது. அன்று இரவு மேஜர் சந்திரா சில்வா அப்பெண்ணைத் தேடுவதை நிறுத்துமாறு உத்தரவிட்டார். இராணுவ வீரர்கள் செய்ய வேண்டிய மற்றும் பல வேலைகள் அதனால் தடைப்பட்டு நின்றன.

இரு நாட்கள் கழித்து கட்டுவனில் ஒரு வீட்டில் இரண்டு இராணுவ வீரர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டது மேஜரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கட்டுவனூரையே தீக்கிரையாக்கி மக்களெல்லாம் அங்கிருந்து வெளியேறிய பின்னர் அங்கே விசாரணை நடத்துவதற்கு ஆட்களே இல்லை என்ற உண்மை தெரியவந்தது. கட்டுவனூர் ஆக்கிரமிப்பை காப்டன் குணசேனா முன்னின்று நடத்தியமையால் அவன் சுடுபட்டதற்கும் கட்டுவனூர் தகனத்திற்கும் தொடர்பு இருக்குமோ என்ற ஐயம் தோன்றியது. இரண்டு நாட்கள் கழித்து அப்பெண்ணைத் தேடும்படி மீண்டும் இராணுவத்தினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

3

விடிந்து வெகுநேரமான பின்னரே ஜெயராணி கண்விழித்தாள். வழமையாக அவள் தனது வீட்டின் அறையில் கட்டிலிலிருந்து கண் விழிக்கும்போது கூரை ஓட்டின் கீழ் அடிக்கப்பட்ட அஸ்பெஸ்ரோஸ் வெண்பலகையும், அதன் நடுவில் பொருத்தப்பட்டிருக்கும் சூழற் காற்றாடியும்தான் கண்களுக்குப் புலனாகும். இன்று அவள் கண்விழித்து அக்குடிசைக் கூரையின் தென்னோலைக் கீற்றுக்கள் கண்களுக்குப் புலனான போதே தனது தற்சமய நிலையை அவளால் முழுமையாக உணர முடிந்தது.



நிழல் வேட்டை

வெளியே மழை முற்றாக நின்றுபோய் காலை வெய்யில் காய்ந்து கொண்டிருந்தது. படுத்திருந்த பாயைச் சுருட்டி வைத்துவிட்டு அவள் நிமிர்ந்தபோது-

அங்கே வந்த கனகம்மா -

"பிள்ளை, பின் வளவிலை கழிவறை இருக்கு; கிணற்றடியிலை வாளியும் தண்ணியும் எடுத்துக்கொண்டு போகலாம்" என்றார்.

அக்குடிசையின் அடி வளவில் ஒரு கிணறு. கிணற்றினருகில் ஒரு காய்கறித் தோட்டம். தக்காளி, கத்தரி, வெண்டிக்காய், கீரை என்பன செழித்து வளர்ந்திருந்தன. ஓலைக் கொட்டிலில் ஒரு பசுவும், கன்றும் நின்றன. கோழிகளும், குஞ்சுகளும் ஓடித் திரிந்தன. இந்தக் கனகம்மா தன்னைத்தானே பராமரித்துக் கொள்ளக்கூடிய பிரயாசையும், ஆற்றலும் கொண்டவர் என்பதை இவை எடுத்துக் காட்டின.

ஜெயராணி காலைக் கடன்களை முடித்துக் குளித்துவிட்டு, கனகம்மா கொடுத்த ஓர் ஆடையை அணிந்து கொண்டு, தான் அணிந்து கொண்டு வந்த உடுப்புக்களைக் கழுவிக் காயப் போட்டாள். அவள் உள்ளே வந்ததும் "அடுத்து என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார் கனகம்மா.

"எனது உறவினர்கள் சாவகச்சேரியில் இருக்கிறார்கள்; நான் அங்கே போகவேண்டும்"

"பிள்ளை நீ தனியாகப் போகவேண்டாம். மத்தியானம் எப்பிடியும் என்ர மகன் தேவநாதன் இங்கை வருவான். அவன் டிரைவர், சொந்தமாகக் கார் வைத்திருக்கிறான். அவனோடை உன்னை அனுப்பி வைக்கிறேன்.

இப்ப தோசை சுடப் போறேன். வந்து சாப்பிடு"

அன்று பிற்பகல் மகன் தேவநாதன் அங்கே வந்தபோது ஜெயா பற்றிய விபரங்களைக் கூறி அவளைச் சாவகச்சேரியில் கொண்டு போய் விட்டுவிட்டு வரும்படி கேட்டுக் கொண்டார் கனகம்மா.

அன்று தெல்லிப்பழையிலும், யூனியன் மகாஜனாக் கல்லூரிகளுக்கு முன்னாலும் இராணுவத்தினர் கூடாரம் போட்டு வயதான ஒவ்வொரு மாணவியையும் விசாரணை செய்து வருவதாயும், அன்று பயணம் போவது உசிதமல்ல என்றும் அவன் தெரிவித்தான்.

மறுநாள் அதிகாலையில் ஜெயாவைக் கூட்டிக் கொண்டு போய் சாவகச்சேரியில் விட்டுவிட்டு வருவதாக வாக்களித்த தேவநாதன் அவளை வழக்கமான ஸ்கேட்-பிளவுஸ் அணிய வேண்டாம் என்றும், தனது தாயாரின் சேலை ஒன்றை உடுத்திக் கொண்டு வருமாறும் கேட்டுக் கொண்டான்.

அவன் வாக்களித்தபடி தேவநாதனின் கார் அக்குடிசைக்கு முன்னால் வீதியில் அதிகாலை நேர்த்தில் வந்து நின்றது.

கனகம்மாளிடமிருந்து பெற்ற சேலையை உடுத்திக்கொண்ட ஜெயராணி தனது வயதிற்கு அதிகமான தோற்றம் கொண்டவளாகக் காணப்பட்டாள். இந்த உடையில் அவளை ஒரு கல்லூரி மாணவி என எவரும் கூறமாட்டார்கள்.

தனது கான்வஸ் தோள் பையை எடுத்து அதிலிருந்து ஒரு கற்றை பண நோட்டுக்களை உருவிய ஜெயராணி அதை ஏற்றுக்கொள்ள கனம்மா மறுத்தபோதும் அதை வலுக்கட்டாயமாக அவரது கைகளில் திணித்தாள்.

"நேற்றைய தினம் அகால இருளில் முன்பின் தெரியாத எனக்கு அடைக்கலம் தந்த தெய்வம் அம்மா நீங்கள். மனிதர்களில் ஒரு சிலர்தான் இப்படித் தெய்வங்களாக வாழ்கிறீர்கள். உங்களது பெரிய மனசுக்கு இது ஒரு சிறிய காணிக்கைதான்" என்றாள் ஜெயராணி.

கனகம்மாவின் கண்களில் நீர் கசிந்தது. ஜெயராணியைக் கட்டித் தழுவி விடைகொடுத்தார்.

காரை ஓட்டிச் சென்ற தேவநாதன் ஜெயராணியைப் பார்த்துச் சொன்னான்.

"அந்த ஆமி காப்டனைச் சுட்டது நீங்கள்தானா என்று கேட்கமாட்டேன். அது உண்மையாக இருந்தால் உங்களைப் பற்றிப் பெருமைப்படுவேன். எங்கடை எத்தனை எத்தனை பெண்களை இந்த அரக்கர்கள் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். ஏதோ ஒரு சிறு எச்சரிக்கையாக இது இருக்கும்."

அவன் தொடர்ந்து கூறினான்.

"கே.கே.எஸ் வீதியில் இன்று இராணுவ நடமாட்டம் அதிகமாக இருக்கும். நான் உங்களை அளவெட்டி - சங்கானை-மானிப்பாய் வழியாக யாழ்ப்பாணம் கொண்டு போய், அங்கிருந்து சாவகச்சேரியில் கொண்டு போய் விடுகிறேன்."

அன்றைய தினம் இராணுவக் கெடுபிடி ஏதும் இருக்கவில்லை. அவளது அதிர்ஷ்டம் அன்று இராணுவத்தினர் அவளைத் தேடுவதைக் கைவிட்டிருந்தார்கள்.

அன்று மதியம் பன்னிரண்டு மணியளவில் ஜெயராணி சாவகச்சேரியில் தனது சித்தியின் வீட்டைச் சென்றடைந்தாள்.

- தொடரும்

அரண்மனை 2 படத்தில் சித்தார்த், திரிஷா!

சித்தார்த், திரிஷா இணைப்பில் 'அரண்மனை 2' படத்தை உருவாக்க திட்டமிட்டு இருக்கிறார் இயக்குநர் சுந்தர்.சி.

வினய், சந்தானம், ஹன்சிகா, லட்சுமிராய், ஆண்ட்ரியா உள்ளிட்ட பலர் நடிப்பில் சுந்தர்.சி இயக்கத்தில் வெளியான படம் 'அரண்மனை'. இப்படம் வசூலில் பெரும் வரவேற்பை பெற்றது.

'அரண்மனை' படத்தைத் தொடர்ந்து 'ஆம்பள' படத்தை இயக்கினார் சுந்தர். சி. தற்போது மீண்டும் பேய் + கொமெடி கூட்டணியில் 'அரண்மனை' படத்தின் இரண்டாம் பாகத்தை எடுக்க திட்டமிட்டு இருக்கிறார்.

இப்படத்தில் திரிஷா நாயகியாக நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். அவனி சினி மேக்ஸ் நிறுவனம் மூலம் இப்படத்தை குஷ்பு தயாரிக்க இருக்கிறார். சித்தார்த் நாயகனாக நடிக்க இருக்கிறார்.

வடிவேலு ஜீனியஸ்! நடிகை சதா ஐஸ்!

'தெனாலிராமன்' பட இயக்குனர் யுவராஜ் தயாளனுடன் மீண்டும் 'எலி' படத்தில் வைகைப் புயல் கைகோர்த்திருக்கிறார். 'எலி' படத்தில் வடிவேலுவுடன் நடிகை சதா ஒரு பாடலுக்கு டான்ஸ் ஆடும் படங்கள் வெளியிடப்பட்டு நல்ல வரவேற்பைப் பெற்றன. மீண்டும் திரையுலகில் கால் பதிக்கும் சதாவுக்குப் பாராட்டுகளும் குவிந்தன.

ஆனால், திரையுலகிலுள்ள சக நடிகைகள் சும்மா இருப்பார்களா? கொமடியனுடன் ஒரு பாடலில் நடனமாடுவதில் என்ன பெருமை இருக்கிறது என்று பேசியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் நக்கலுக்குப் பதில் அளிக்கும் விதமாகச் சதா, "நான் ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடவில்ல. படத்தில் என்

கதாபாத்திரம் மிகப் பலமான கதாபாத்திரம். 'எலி' படத்தின் கதையும் சாமான்யமானது அல்ல. வடிவேலுவும் சாமான்யமானவர் அல்ல. அவர் ஒரு ஜீனியஸ்" - என்று கூறியிருக்கிறார்.

சிவகார்த்திகேயனுக்கு ஒரு பெரும் பிரச்சனை!

'மெரினா'வில் சிவகார்த்திகேயனை அறிமுகப்படுத்தி, சினிமாவுக்கு வழி காட்டியவர் பாண்டிராஜ். அடுத்த அவரது படம், 'கேடி பில்லா, கில்லாடி ரங்கா' விலும் சிவாவை நடிக்க வைத்தார். இந்த இரண்டு படத்திலும் குறைவான சம்பளத்தில்தான் நடித்துக் கொடுத்தார். ஆனால், தற்போது இவரது சம்பளம் ஐந்து கோடியாம். மீண்டும் சிவகார்த்திகேயனை வைத்து படமெடுக்க முடிவு செய்திருக்கிறார், பாண்டிராஜ். ஆனால், எப்படிச் சம்பளத்தைப் பற்றி பேசுவது என்பது சிவாவுக்கு ஒரு பெரும் பிரச்சனையாக உள்ளதாம். குருநாதர் அல்லவா?.

இத்தனை 'கொமெடி' பட்டாளம்!

ஆகக் கூடினது மூன்று கொமடி நடிகர்கள் ஒரு படத்தில் நடிப்பார்கள். ஆனால், இந்தப் படத்தில் கொமடி நட்சத்திரப் பட்டாளமே நடிக்கிறது. என்ன படமாக இருக்கும்? அவர்கள் விழி பிதுங்கப் பார்க்கிற பார்வையே, அது ஒரு பேய்ப் படம் என்பதைச் சொல்கிறது. 'கோப்பெரும்தேவி'யில் தான் இந்தக் கொமடி பட்டாளம் தோன்றி அசத்துகிறது!

பாக்கியராஜ் மகனுக்கு திருமணம்

பிரபல டைரக்டரும், நடிகருமான கே.பாக்கியராஜ் மகனும், நடிகருமான சாந்தனு, "மானாட மயிலாட" தொகுப்பாளர் கீர்த்தியை காதலிப்பது பழைய செய்தி. புதுச் செய்தி, இரு குடும்பமும் ஓ.கே. சொல்ல, ஆகஸ்ட் 21ம் திகதி திருமணம் நடக்கிறது.

காதல் முறிவுக்குப் பிறகு திரிஷா காட்டில் மழை!

தயாரிப்பாளர் வருண் மணியனுடன் காதல் முறிந்துவிட்டது என்று சொல்லிவிட்டு தனது வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் திரிஷா. திருமணம் இல்லை என்று அவர் அறிவித்த பிறகு திரிஷாவிற்கு அதிக பட வாய்ப்புகள் வந்திருக்கின்றன.

சுந்தர். சி. யுடன் ஒரு படம், கௌதம் மேனனுடன் ஒரு படம் என்று திரிஷா காட்டில் மழைதான்! ஆனால், வருண் மணியனோ கோபத்தில் கொப்பளித்துக் கொண்டிருக்கிறார் டுவிட்டரில். அதற்கு எந்த 'ரியாக்ஷனும்' காட்டாமல், 'நான் சிங்கிள்' எனச் சொல்லிவிட்டு, திரிஷா தன் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்.

ஹன்சிகாவுக்கு வயசு குறைவு; மனசு பெரிசு!

நடிகை ஹன்சிகா நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு 6 லட்சம் ரூபா நிவாரண நிதியாக வழங்கியுள்ளார். வயசு குறைவு; ஆனால், மனசு பெரிசு ஹன்சிகாவுக்கு.

தனது பிறந்த நாளில், ஆதரவற்ற குழந்தைகளைத் தத்தெடுப்பார். 25 குழந்தைகளை வளர்த்து விடுகிறார். மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ள 10 பெண்களின் மருத்துவச் செலவை ஏற்றுக் கொண்டுள்ளார். மார்பகப் புற்று நோய் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறார். நேபாள நில நடுக்கத்தால் பலியானவர்கள் இதுவரை 8 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

படம் பணம் காதலி; சகலத்தையும் இழந்தேன்! - சிம்பு

"கடந்த இரண்டரை ஆண்டுகளில் படம், பணம், காதலி எனச் சகலத்தையும் இழந்துவிட்டேன்! என் வாழ்க்கையில் எல்லாமே போய்விட்டது!" என்றார் நடிகர் சிம்பு.

"சரி நமக்காக ஒரு பெண் இருக்கிறாள். கடைசிவரை அந்தக் காதலி நம்முடன் இருப்பாள் என்று நினைத்தேன். அவளும் போய்விட்டாள்! கல்யாணமாகி, குழந்தை பிறந்து அதன் சிரிப்பைப் பார்த்தாவது கஷ்டம் போய் விடும் என்று நினைத்தேன். அதுவும் இல்லாமல் கடவுள் என்னைச் சோதித்துவிட்டார்!" என்றும் கூறினார் அவர்.

நகைச்சுவை நடிகர் சந்தானம் தயாரித்து ஹீரோவாக நடித்துள்ள 'இனிமே இப்படித்தான்' படத்தின் இசை வெளியீட்டு விழாவில்தான் இப்படி உருக்கமாகப் பேசினார் சிம்பு.

சென்னை சத்யம் தியேட்டரில் இந்த விழா நடந்தது.

"மே 9ம் திகதி நான் நடித்து வெளியாக இருந்த 'வாலு' படம் வெளியாகவில்லை. இப்போது என் அப்பா வாங்கி வெளியிட இருக்கிறார். எனக்கு எல்லாமே அப்பாதான். அவரும், என் உயிரும், எனது ரசிகர்களும் இருக்கும் வரை வாழ்வேன்" என்று தன் பேச்சில் குறிப்பிட்டார்.

'வெள்ளாவி' பெண்ணுக்கு விளையாட்டு வீரர் மீது காதல்!

இப்போது தமிழ் படவுலகில் முன்னணி நடிகையாக வலம் வந்து கொண்டிருக்கும் டாப்சி, வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு பாட்மிண்டன் வீரரைக் காதலிக்கிறாராம்! அவரின் பெயர் மத்தியாஸ்போ, அவர் எங்கு சென்றாலும், அங்கெல்லாம் பறந்து போய் விடுகிறாராம்!

டாப்சி நடித்து வெளி வந்த 'காஞ்சனா-2', 'வை ராஜா வை' ஆகிய இரு படங்களும் வசூல் ரீதியாக வெற்றி பெற்றுள்ளன.

"ஆடுகளம்" படத்தின் மூலம் அறிமுகமானார். அப்படத்தில் இவருக்காகவே எழுதப்பட்டுப் படப்பட்ட, "உன்ன வெள்ளாவி வச்சுத்தான் வெளுத்தாங்களா?" என்ற பாடல் வரிகள் நினைவுக்கு வருகிறதா?

இவரது காதலன் யார் தெரியுமா? டென்மார்க் பாட்மிண்டன் வீரர்தான்! 34 வயதான இந்த வீரர் மீது டாப்சி பைத்தியமாக இருக்கிறாராம்!

நயன்தாராவின் மூன்றாவது காதல்!

'நானும் ரவுடிதான்' படத்தில் நயன்தாராவை இயக்கி வரும் இயக்குநர் விக்னேஷ் சிவன் தற்போது அவருக்கு, மிகவும் 'நெருக்கமான' நண்பராக உருவாகி இருக்கிறார்.

சிம்பு நடிப்பில் வெளியான, 'போடா போடி' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் விக்னேஷ் சிவன். அப்படத்தைத் தொடர்ந்து 'நானும் ரவுடிதான்' படத்தை இயக்கி வருகிறார்.

அப்படத்தில் விஜய் சேதுபதி, நயன்தாரா, பார்த்திபன் உள்ளிட்ட பலர் நடித்து வருகிறார். அனிருத் இசையமைத்து வரும் இப்படத்தை தனுஷ் தயாரித்து வருகிறார்.

சிம்பு, பிரபுதேவா ஆகியோருடன் ஏற்பட்ட காதல் பிரிவைத் தொடர்ந்து யாரையும் நெருங்கிய நட்பு வட்டத்தில் சேர்த்துக்கொள்ளவில்லை நயன்தாரா. ஆனால், விக்னேஷ் சிவன் தற்போது நயன்தாராவின் மிகவும் நெருக்கமான நண்பராக வலம் வர ஆரம்பித்திருக்கிறார்.

நயன்தாராவின், நெருங்கிய நண்பராக விக்னேஷ் சிவன் மாறியிருப்பது உண்மைதான். விக்னேஷ் சிவனுக்கு அண்மையில் கார் ஒன்றை பரிசளித்திருக்கிறார் நயன்தாரா என்ற செய்தியின்படி மூன்றாவது காதலில் நயன்தாரா விழுந்து விட்டாரா?

திருமணமான ஒரே ஆண்டில் விவாகரத்து கேட்கும் ரம்யா!

ரம்யாவை உங்களுக்குத் தெரியாமல் இருக்காது! விஜய் டி.வி. தொகுப்பாளினி ரம்யாதான்! ஒரு வருடமாகியிருக்கும் அவருக்குத் திருமணம் நடந்து!

முடிந்தது கதை, கடந்த வருடம் பெப்ரவரியில் அபராஜீத் என்பவரைத் திருமணம் செய்தார். திருமணத்துக்கும், திருமண வரவேற்புக்கும் மொத்த தமிழ் திரையுலகமே திரண்டது. அந்தளவுக்கு தமிழ் சினிமா தொடர்பு மிகுந்தவர்.

திருமணத்தின் பின் குடும்பப்பாங்கானவராக செயல்பட மறுத்துவிட்டார் ரம்யா. மாலை நேர விருந்துகள், நிகழ்ச்சிகள் என்று இருந்தது ஆச்சாரமான கணவர் குடும்பத்துக்குப் பிடிக்கவில்லை. மணிரத்தினத்தின் சமீபத்திய 'ஓ காதல் கண்மணி' யிலும் முக்கியமான வேடத்தில் நடித்தார் ரம்யா.

திருமண வாழ்க்கைக்கு 'குட்பை' சொல்லி விட்டார் ரம்யா! விவாகரத்துக்கு ஏற்பாடு செய்யும்படி கூறிவிட்டு, அம்மா வீட்டுக்கு போய்விட்டார் ரம்யா!

நயன்தாராவுக்காக ஸ்ருதி ஹாஸன்!

முதல் முறையாக நயன்தாராவுக்காக குரல் கொடுத்திருக்கிறார், ஸ்ருதி ஹாஸன்! வேறொன்றுமில்லை. அவருக்காக ஒரு பாடலுக்குக் குரல் கொடுத்து உள்ளார்.

எப்போதோ ஆரம்பித்து இன்னும் இழுத்து அடித்துக் கொண்டிருக்கும் சிம்பு-நயன்தாரா நடித்துள்ள 'இது நம்ம ஆளு' படத்துக்காக, இந்தப் பாடலைப் பாடியுள்ளாராம்.

இசையமைத்துள்ளவர் சிம்புவின் தம்பி குறளரசன். ஏற்கனவே இளையராஜா போன்ற பல இசையமைப்பாளர்களின் இசையில் ஸ்ருதி பாடியுள்ளார்.

இந்தப் படத்தில் ஸ்ருதியுடன் இணைந்து டியட் பாடியவர் குறளரசனேதான்.

சிம்பு, குறளரசனின் ஒத்துழைப்பு இல்லாததால் இந்தப் படத்தை விட்டு விட்டு, சூர்யாவின் 'ஹைக்கூ' படத்தை இயக்கி முடித்து விட்டார், பாண்டிராஜ்.

இப்போது பிணக்குகள் தீர்ந்து மீண்டும் படத்தை முடிக்கும் வேலை மும்முரமாக நடக்கிறது.

சிம்பு - கௌதம் மேனன் படத்தில் நாயகியாக நடித்து வந்த பல்லவி சுபாஷ் அப்படத்தில் இருந்து நீக்கப்பட்டு இருக்கிறார்.

சிம்பு - கௌதம் மேனன் இணைப்பில் நீண்ட நாட்களுக்கு முன்பாக பெயரிடப்படாமல் படம் ஒன்று தொடங்கப்பட்டது. அப்படத்தில் நாயகியாக பல்லவி சுபாஷ் நடித்து வந்தார்.

இடையே அஜித் படத்தை இயக்க கௌதம் மேனன் ஒப்பந்தமானதால், சிம்பு படத்தின் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டது. அஜித் படமான 'என்னை அறிந்தால்' முடித்தவுடன், சிம்பு படத்தை இயக்குவேன் என்று கௌதம் மேனன் அறிவித்தார்.

'என்னை அறிந்தால்' வெளியான உடன், சிம்பு படத்தை துவக்கினார் கௌதம் மேனன். படத்துக்கு 'அச்சம் என்பது மடமையடா' என்று தலைப்பிட்டார்.

இந்நிலையில், அப்படத்தில்

கௌதம் மேனன் படத்திலிருந்து நாயகி நீக்கம்!

நாயகியாக நடித்து வந்த பல்லவி சுபாஷை படத்தில் இருந்து நீக்கியிருக்கிறார்கள்.

வட இந்தியாவில் பல்வேறு நாடகங்களில் நடித்து வந்திருக்கிறார் பல்லவி சுபாஷ். அஜித் படத்துக்காக சிம்பு படம் நிறுத்தப்பட்டதால், பல்லவி சுபாஷ் கொடுத்த தேதிகள் வீணானது. தற்போது தேதிகள் கேட்டபோது, நாடகங்களில் நடிக்க தேதிகள் ஒதுக்கி ஒப்பந்தம் போடப்பட்டதால் பல்லவி சுபாஷால் சிம்பு படத்துக்கு தேதிகள் ஒதுக்க முடியவில்லை. இதனைத் தொடர்ந்து படக்குழு, பல்லவி சுபாஷை படத்தில் இருந்து நீக்கியுள்ளது.

அதனைத் தொடர்ந்து சிம்புவுக்கு ஜோடியாக பல்வேறு முன்னணி நாயகிகளுடன், பேச்சுவார்த்தை நடத்தினார்கள். தேதிகள் பிரச்சினையால் யாருமே நடிக்க முடியவில்லை. இதனைத் தொடர்ந்து தற்போது படக்குழு சிம்புவுக்கு ஜோடியாக புதுமுக நடிகை ஒருவருக்கு வலை வீசி வருகிறது! சிம்புவுக்கு பரவாயில்லை!

கர்ப்பிணிகள் வாழ்வில் முதல் மூன்று மாதங்கள்!

ஹோமியோபதி டாக்டர் ஆர்.தியாகராஜன் பேசுகிறார்

கோடி கோடியாக சம்பாதிக்கலாம். ஆனால், குழந்தைச் செல்வம் போன்று வருமா? அந்தச் செல்வத்துக்காக ஏங்கி, தவமிருந்து பெற்றவர்களுக்குத்தான் தெரியும் அதன் அருமை பெருமை!

கடந்த 'புதினம்' இதழில், குழந்தைச் செல்வம் பற்றிய ஹோமியோபதி வைத்திய நிபுணர் டாக்டர் ஆர்.தியாகராஜனின் குறிப்புகள் தொடர்பாகப் பலரும் தொலைபேசியில் தம்முடன் தொடர்பு கொண்டு பேசியதாகவும், சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டதாகவும், ஆலோசனைகள் பெற்றதாகவும் கூறினார்.

கர்ப்பம் தரித்தும், பின் கர்ப்ப காலத்தில் கருக்கலைந்து போகிற நிலைமையை எப்படி நிவர்த்தி செய்யலாம் என்பது குறித்து இந்த இதழில் பயனுள்ள விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

"திருமணத்தின்பின் ஒரு பெண்ணுக்கு கரு உண்டான பிறகு கருவைச் சரியான முறைப்படி வளர்த்தெடுத்து சுகப்பிரசவமாக குழந்தையாகப் பிரசவித்து, அதைக் கையிலெடுத்துக் கொஞ்சும்போது ஏற்படுகிற ஆனந்தத்துக்கு அளவேயில்லை. ஆனாலும் பலருக்கு குழந்தை உண்டாகி, அந்த மகிழ்ச்சி நீண்ட நாள் நீடிக்காமல், கருக்கலைந்து போய்விடுகிறது. உருவான கருவை பக்குவமாகப் பேணி காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அந்தப் பெண்ணுக்கு ஏற்படுகிறது. கணவனும் ஒத்துழைக்க வேண்டும்.

மகப்பேறு காலத்தை அறிவியல் முறைப்படி ஒன்பது மாதமும் பத்து நாட்களும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. 280 வது நாள் பிரசவம் நடக்க வேண்டும். இந்தக் காலத்தை மூன்று, மூன்று மாதங்களாகப் பிரித்துப் பார்க்கப்படும் (Primasters) இந்தக் காலப் பகுதியில் மாற்றங்கள் வரும். கவனிப்புத்தான் முக்கியம்.

கரு உண்டாகி முதல் மூன்று மாத காலத்தில், அது கலைய வாய்ப்புகள் நிறைய உள்ளன. அதாவது இந்தப் பகுதியில், 50 வீத வாய்ப்பு இருக்கும்.

அதனை அடுத்து வருகின்ற மூன்று மாத காலப் பகுதியில் 30 வீத வாய்ப்பு இருக்கிறது. கடைசி மூன்று மாத காலப் பகுதியில் 10 வீதம் மட்டுமே.

மகப்பேறு காலத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு, இயற்கையாக ஏற்படக்கூடிய மாற்றங்களைத் தெளிவாக அறிந்து கொண்டால் கருவுக்கு இடையூறு உண்டாகாமல் கருவளர்ச்சிக்கு தடை வராது பார்த்துக்கொள்ளலாம்.

முதல் மூன்று மாதத்தில், அந்தக் கருவானது கர்ப்பப்பையின் (UTERUS) உள் சுவரில் ஒட்டிக் கொண்டு, கரு வளரத் தொடங்குகிறது. ஒட்டிக்கொண்டிருக்கும் கரு தாயின் உடல் அசைவுகளால், பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். இந்தக் காலப் பகுதியில் வேகமாக நடப்பது, அதிக தூரம் வாகனங்களில் பயணிப்பது, பாரம் தூக்குவது போன்றவை கருக் கலைவதற்கு காரணங்களாகி விடுகின்றன.

ஒரு கொடி சுவற்றில் ஒட்டிக்கொண்டு படரும்போது பலமான காற்று அடித்து அதை விழுத்தி விடுவது போல, தாயின் வேகமான உடல் அசைவுகள் (BODY JERKS AND FAST MOVEMENT) கர்ப்பம் வளரத் தொடங்கும்போது அதனை

வீழ்த்திவிடும் அபாயம் இருக்கிறது!

. முதல் மூன்று மாதத்திலும் தாயின் நடை உடைகள் மிகவும் நிதானமாக இருக்க வேண்டும்.

சில பெண்களுக்குக் கர்ப்பப் பையின் உட்சுவர் மிகவும் பலவீனமாக இருந்தாலும், கரு ஒட்டிக் கொண்டு வளர இயலாமல் போகும். தகுந்த மருத்துவ சிகிச்சை மூலம் கர்ப்பப்பையைப் பலப்படுத்தி, ஹோமியோபதி மருத்துவ சிகிச்சை மூலம் கரு வளர்ச்சிக்கு (Strenthening Uterus) ஏதுவான சூழ்நிலையை அமைத்துக் கொடுக்கலாம்.

முதல் மூன்று மாத காலப் பகுதியில் 'மசக்கை' எனப்படும் உணர்வு, பொதுவாகக் காலை நேரத்தில் உணவு உட்கொள்ள விருப்பமில்லாது வாந்தி வருவது போன்று இருக்கும். இது கரு வளர்ச்சி ஹார்மோன்களால் இயற்கையாக ஏற்படும் ஒரு பிரச்சனை. இது காலையில் உண்டாகி, பிற்பகல் குறைந்து, மாலையில் முற்றாகத் தீர்ந்துவிடும்.

காலையில் ஏற்படக்கூடிய இந்தப்பிரச்சனையை சில பெண்கள் இரவு வரை தக்க வைத்துக்கொள்வார்கள். அவர்களது கற்பனா சக்திதான் இதற்குக் காரணம். மேலதிகமாக கற்பனா சக்தி உள்ளவர்கள் குழந்தை பிறக்கும்வரைகூட இந்த வாந்தி உணர்வினை விடாப்பிடியாகத் தக்க வைத்துக் கொள்வார்கள். இதனால் சரியாக உணவு உட்கொள்ளாது, பலவீனமாகி விடுகிறார்கள். இயற்கையாக கர்ப்பிணிப் பெண்கள் இரண்டு மடங்கு சத்தான உணவு உட்கொள்ள வேண்டும். உணவு உண்பதில் கவனமில்லாவிட்டால், ஆரோக்கிய குறைபாடு ஏற்படும். இதனால் பிள்ளையின் வளர்ச்சி பாதிக்கப்படும். இந்த 'மசக்கை'ப் பிரச்சனையிலிருந்து மீள்வதற்கு, பக்கவிளைவுகளற்ற சிறந்த சிகிச்சை ஹோமியோபதி வைத்தியத்தில் உள்ளது.

இந்த முதல் மூன்று மாதத்தில் கருக்கலைவது ஏற்படுவதற்கு இன்னொரு முக்கிய காரணம், கர்ப்பம் தொடர்பான அறியாமையினால் உண்டாகும் அச்ச உணர்வும் (Pregnency Phobia) மன உளைச்சலும் (STRESS) இதற்குச் சிறந்த அனுபவமிக்க மருத்துவரின் ஆலோசனைகள் தீர்வாக அமையும்.

கர்ப்ப காலத்தில் ஏற்படும் அனுபவங்களும், பிரச்சனைகளும் ஒருவருக்கு ஒருவர் மாறுபடும். வேறு ஒரு கர்ப்பிணியின் ஆலோசனை இன்னொரு கர்ப்பிணிக்குப் பொருந்தாது. சில நேரங்களில் இலேசான இரத்தப்போக்கு ஏற்படுவதுகூட ஒரு சாதாரண விஷயம். எனவே, எது இயற்கை! (Normal) எது பிரச்சனை? (Ubnormal) என்பதைத் தெளிவாக வரையறுத்து, பிரச்சனைகளுக்கு மட்டும் தீர்வு காண முயற்சிக்க வேண்டும். தற்கால தகவல் தொழில்நுட்பம் (Internet And Phones) மற்றும் தொலைக்காட்சி, ஊடகங்கள் மூலமாக நமக்குக் கிடைக்கும் அபரிமிதமான தகவல்கள் மட்டும் குழப்பத்தை உண்டாக்குகின்றன. இவற்றின் மூலம் பெரும்பாலான கர்ப்பிணிப் பெண்கள் அடுத்து என்ன நடக்கும், அடுத்து என்ன செய்யலாம் என்ற மன உளைச்சலுடன் (Mental Stress) நாட்களை நகர்த்துகின்றனர். தமது கற்பனா சக்தியினால் சிறு விஷயங்களைக்கூட பெரிதாக்கி நித்திரைக்குறைபாடு, உடல் சோர்வு, சரியாக உணவு உட்கொள்ளாமை போன்ற சூழ்நிலைகளுக்குள்ளாகி கர்ப்ப காலத்தில் தேவையற்ற பெரும் அழுத்தங்களை சந்திக்கின்றனர்.

இந்த அழுத்தங்களாலும் கருக்கலையும் ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

ஹோமியோபதி வைத்தியத்தின் மூலம் கர்ப்பமானவர்களுடைய கரு பலப்பட்ட சூழ்நிலையில் வளர்வதற்கு சிகிச்சை அளித்திருக்கிறேன். ஆனாலும், 2010ம் ஆண்டு நோர்வே நாட்டில் வாழும் 32 வயதான தமிழ் பெண்மணிக்கு ஏற்பட்ட கருச்சிதைவும், பின்னர் சிகிச்சை மூலம் ஏற்பட்ட பலனையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இரண்டு முறை அவர் கருத்தரித்தும் அறுபது நாட்களுக்குள் கரு கலைந்துவிட்டது. இதன் பின்னர் என்னிடம் சிகிச்சை பெற்றார். மீண்டும் கர்ப்பம் தரித்து, அந்தக் கரு கலையாமல் குழந்தை வளர்ச்சி நன்றாக அமைய ஆலோசனை கேட்டு சிகிச்சை அளித்தேன். கர்ப்பப்பை பலப்படும் சிகிச்சை வழங்கினேன். மீண்டும் கர்ப்பமானார். மகப்பேறு காலத்தில் பிள்ளை வளர்ச்சி நன்றாக அமையவும், கரு தங்கு தடையின்றி வளர்ச்சி பெறவும் ஹோமியோபதி சிகிச்சை நல்ல பலனை அவருக்கு அளித்தது. இரண்டு வயது பெண் குழந்தை பெற்று மகிழ்ச்சியான குடும்பமாக வாழ்கிறார்கள்.

கர்ப்ப காலத்தில் ஹோமியோபதி மருந்துகள் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஹோமியோபதி சிகிச்சை மேற்கொள்வது கர்ப்பத்திற்கு உதவிகரமாக இருக்கும்."

டாக்டர் தியாகராஜனின் இலவச ஆலோசனைகளுக்கு: 020 81441553. -ஈகேஆர் ■

ஆஸ்துமா

ஹோமியோபதி மருத்துவம்

+

உங்கள் ஒத்துழைப்பு

100% தீர்வு

ஆஸ்துமா நோயாளிகள் ஏற்கனவே உட்கொள்ளும் ஆங்கில மருந்துகளுடன் ஹோமியோபதி மருந்துகளையும் உட்கொண்டால் கண்பாதிப்பு, தோல் மற்றும் பிறப்பு உறுப்பு அரிப்பு, நரம்புகள் பாதிப்பு, ஆண்மை குறைபாடு, கிட்னி பாதிப்பு போன்றவைகளை தவிர்க்கலாம்.

உயர்தர மருத்துவம் ▪ பாதுகாப்பான மருந்துகள் ▪ விரைவான சேவை

சிறப்பு சிகிச்சைகள்

- **உயர் இரத்த அழுத்தம்** (B.P/HyperTension)
- **கொலஸ்ட்ரால்** (Cholesterol)
- **சிறுநீரக கோளாறுகள்** (KidneyDiseases)
- **மூட்டு வலி** (Arthritis)
- **தோல் வியாதிகள்** (SkinDiseases)
- **ஹார்மோன் பிரச்சனைகள்** (HormoneDisorders)
- **மாதவிடாய் கோளாறுகள்** (MensesDisorders)
- **செக்ஸ் பிரச்சனைகள்** (SexDisorders)
- **குழந்தையின்மை** (Infertility)
- **டயாபட்டிஸ்** (Diabetes)

இலவச மருத்துவ ஆலோசனைக்கு

0208 144 1553

HOMOEO CARE

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

போன்: 0208 144 1553

வெப்சைட்: www.homoeocare.com

இமெயில்: homoeocare@rediffmail.com

ஸ்ரீமதி யோகா தில்லைநாதனின்

கானக்குயில்-2015

22 ஆவது ஆண்டாக இலண்டனில்

நிகழ்ச்சி ஜூன் 27 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

"கானக்குயில்-2015" நிகழ்ச்சிக்கு ஆதரவு வழங்கி கௌரவிப்போர்

Aynkaran International | Tharani Jewellery | Ratna & Co. Solicitor
VeeKay Autos | London Baba Suresh Krishna | Vaishna Super Foods
A Lanka Travels | Portland Estate Agents | Rathy Jewellers
Surbiton Ceylon Silks | Lilley Sports | Thinesh Jewellers
Southall South Harrow ABI Fast Food

சுவையான சிற்றுண்டி, உணவு வகைகளை சுடச்சுட நியாயமான விலையில் விற்று உங்களை திருப்திப்படுத்தக் காத்துள்ளார்கள்.
Southall South Harrow ABI Fast Food

1. சிறந்த பாடகர்களை ரசிகர்களின் வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யும் முறையை 1993-ஆம் ஆண்டு முதன்முறையாக இலண்டன் இரசிகர்களுக்கு அறிமுகப்படுத்திய பெருமை "கானக்குயிலுக்கே" உரித்தானது. நிகழ்ச்சியை பார்க்கவரும் இரசிகர்களின் அதிகூடிய வாக்குகளைப் பெறுவோர் 2015ஆம் ஆண்டின் பால கானக்குயில், இளைய கானக்குயில், ஆண் கானக்குயில், பெண் கானக்குயில்களாக தெரிவு செய்யப்படுவர்.
2. பெருமைக்குரிய "சித்ராலயா இசைக்குழுவினரின்" இனிய இசையில் போட்டிப் பாடகர்களும், கடந்த ஆண்டுகளில் ரசிகர்களால் தெரிவு செய்யப்பட்ட பால, இளைய, சிரேஸ்ட கானக்குயில்களும் உங்கள் செவிக்கு மெருகூட்ட உள்ளார்கள்.

Saturday 27th June 2015 at 6.00pm

Greenford Assembly Hall, Ruislip road, Greenford, Middx UB6 9QN
(Nearest Tube Station - Greenford)

டிக்கெட் விவரங்களுக்கு :

02034898309 / 07903327708

டிக்கெட் : 12 வயதுக்குட்பட்டோர் ரூ.10 பெரியவர்கள் ரூ.15

ஆக்கத்துக்கு ஊக்கம் கொடுப்போம்!

மனித சமுதாயம் நாகரீகமடைந்த காலம்தொட்டு, அவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறக்கம் என்பன மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

உணவை எடுத்துக்கொண்டால் உலகம் முழுவதும் பரந்து பட்டு வாழுகின்ற வெவ்வேறு சமுதாயத்தினர் பல வேறுபட்ட உணவுப்பழக்கங்களை கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

இன்று 21ம் நூற்றாண்டில் உலகம் மிகவும் சுருங்கி, குறிப்பாகத் தமிழர்கள், அதிலும் இலங்கைத் தமிழர்கள் உலகெங்கும் பரந்து வாழுகின்ற இன்றைய காலக்கட்டத்தில் எமது உணவுப் பழக்கங்கள், உலகின் ஏனைய சமூகத்தினரையும் கவர்ந்திருக்கின்றது என்பதையிட்டு நாம் மகிழ்ச்சி கொள்ளாமல் இருக்க முடியாது.

எமது நாளாந்த உணவு வகையறாக்களில் இடியப்பம் மிக முக்கிய இடத்தை பிடித்திருக்கின்றது. எமது மூதாதையர்களின் மிக உன்னதமான சிந்தனையின் விளைவே இந்த இடியப்பம் கண்டுபிடிப்பு.

இதன் சிறப்பு அம்சங்களாவன, இலகுவான செய்முறை, காலை மாலை என்றில்லாமல் எவ்வேளைகளிலும் உட்கொள்ளக் கூடிய ஒன்று, குழந்தைகளுக்கு கூட மிகவும் இலகுவாக சீரணமடையக்கூடிய உணவு.

இது எமது சொத்து என்பதுடன் எமது உணவுப் பாரம்பரியத்தின் ஓர் அங்கமுமாகும்.

இடியப்பத்தை தயாரிக்கின்ற முறையானது சாதாரண பூவரசம் மரக்கட்டையிலிருந்து செய்யப்பட்ட மர உரல் தொடக்கம் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக பல இடியப்ப இயந்திரங்கள் தற்சமயம் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால், இங்கு படத்தில் காட்சியளிக்கின்ற இடியப்ப இயந்திரமானது அதி நவீன தொழில்நுட்ப ரீதியில் உருவாக்கப்பட்டிருப்பதுடன், காத்திரமான துருப்பிடிக்காத உருக்கினாலானதும் (Stainless steel) குறைந்தளவு மின்சாரத்தில் இயங்கக்கூடியதும், எவராலும் இயக்குவதற்கு ஏற்ற வகையில் சென்சரினால் தன்னிச்சையாகவும் இயங்கக் கூடிய வகையில் வடிவமைத்து உருவாக்கப்படடிருப்பது இதனது சிறப்பு அம்சமாகும்.

இவ்வியந்திரம் பிரித்தானிய, ஐரோப்பிய, உலகளாவிய (CE) சகல சட்ட திட்டங்கள் அனைத்திற்கும் உட்பட நிர்மாணிக்கப்பட்டிருப்பதுடன், மூன்று (25,50,100) எண்ணிக்கைகளை கொண்ட இடியப்பங்களை தயாரிக்க கூடிய வகையில் வெவ்வேறு அளவிலான கொள்கலன்களை கொண்டதாகவும் உருவாக்கப்பட்டிருக்கின்றது. தற்சமயம் பாவனையில் உள்ளதுடன் இல்லத்தரசிகளின் ஏகோபித்த நன்மதிப்பையும் பெற்றுள்ளது இதன் சிறப்பு அம்சமாகும்.

நம்மவரினால் ஆக்கம் பெற்றுள்ள தரமான கண்டுபிடிப்புக்கு ஊக்கம் தர வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

தொடர்புகளுக்கு நவா நவரட்ணம் : 0208 949 3945
email: snnava@yahoo.co.uk
– சிவபரிமேலழகர்

உயர்வாசற் குன்று முருகன் கோயில்

(HIGHGATEHILL MURUGAN TEMPLE, 200 A, ARCHWAY ROAD, LONDON N6 5BA)

மூன்றாவது புனராவர்த்தன மகாகும்பாபிசேகத்தின்

6வது மகோற்சவ விழா

இலண்டனில் மூத்த கோயிலாக அமைந்த உயர்வாசற்குன்று முருகன் கோயில் (ஆச்வே) மகோற்சவ விழா 15.06.2015 திங்கட்கிழமை (மன்மத ஆண்டு ஆனி 1ம் திகதி) கொடியேற்றத்துடன் தொடங்கி 14ம் நாள் 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 15ம் நாள் 29.06.2015 தீர்த்த உற்சவமும் நடைபெற்று, 30.06.2015 திருக்கல்யாண உற்சவத்துடன் நிறைவுறத் திருவருள் கூடியுள்ளது.

The Highgate hill Murugan Temple, also known as Archway Murugan Temple is the Oldest established Saiva (Hindu) Temple in London serving Hindus in General and the Tamil Saiva community in particular from 1974.

Apart from the Temple on the top floor, the Temple complex comprises of two halls, the larger one for weddings and religious functions, and the middle one used by devotees and also for weddings

The Temple complex can be reached from either the Highgate tube or Archway tube station and by 134, 263 & 43 busses from these stations.

மகோற்சவ நிகழ்வுகள்				
14.06.2015	ஞாயிறு	காலை	09.30 மணி	கணபதி ஓமம்
15.06.2015	திங்கள்	காலை	11.30 மணி	கொடியேற்ற வைபவம், மாலை திருவிழா
22.06.2015	திங்கள்	மாலை	08.00 மணி	கைலாயவாகனம்
23.06.2015	செவ்வாய்	மாலை	05.15 மணி	மாம்பழத்திருவிழா
24.06.2015	புதன்	காலை	05.00 மணி	ஆனி உத்தரம், இரவு 08.00 மணி மஞ்சம்
26.06.2015	வெள்ளி	மாலை	05.00 மணி	வேட்டைத் திருவிழா
27.06.2015	சனி	மாலை	08.00 மணி	சப்பறம்
28.06.2015	ஞாயிறு	காலை	11.00 மணி	சுவாமி தேரேறி வீதி உலா வருதல்
29.06.2015	திங்கள்	காலை	10.00 மணி	தீர்த்த உற்சவம், மாலை 08.00 கொடி இறக்கம்
30.06.2015	செவ்வாய்	மாலை	07.00 மணி	திருக்கல்யாண விழா - பொது உபயம்
01.07.2015	புதன்	மாலை	07.00 மணி	வைரவர் மடை

சைவ அன்பர்கள், அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து வழிபாட்டில் கலந்து, புண்ணிய பேறு பெறுவதுடன், தாயகத்தில் சமாதானமும் சாந்தியும் அமைதியும் ஏற்படவும், சமூகத்தில் எல்லா நலனும் பெற்று, நல்வாழ்வு வாழவும் வழிபாடு செய்வோமாக.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST

ESTABLISHED 1974 REGISTERED CHARITY NO: 269067

Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

e-mail : admin@highgatehillmurugan.org | Web: www.highgatehillmurugan.org

டாக்டர் எம்.கே.முருகானந்தன்

செயற்கை இனிப்புகளை பாவிக்கலாமா?

செயற்கை இனிப்புகளை உபயோகிக்கலாமா? அவை ஆபத்தற்றவையா? அருகில் இருந்தவர்கள் இவரை ஆச்சரியமாகப் பார்த்தார்கள். தொழில்சார் அமைப்பின் செயற்பாட்டுக் குழுக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது.

பெரும்பாலானவர்கள் சீனி போடாமல் தேநீர் குடித்தார்கள். ஒரு சிலர் ஒரு கரண்டி மட்டும் போட்டார்கள். இவர் மட்டும் மூன்று கரண்டி சீனி போட்டு நாக்கைச் சப்புக் கொட்டினார்.

Sugar is an addiction என்பதற்கு இவர் ஒரு உதாரணம். இப்படிச் சீனி குடிப்பவருக்கு நீரிழிவு வந்தால் என்னவாகும். இனிப்பே சாப்பிடாமல் மாய்ந்து போவாரா?

செயற்கை இனிப்புக்கள் கிடைக்கின்றனவே! அவற்றைச் சேர்த்துக்கொள்ளலாமா?

அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்துகளுக்கான அதிகார சபையானது acesulfame potassium, aspartame, saccrharin, sucralose, neotame and advantame ஆகிய செயற்கை இனிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவற்றில் பல இலங்கையிலும் கிடைக்கின்றன.

நீரிழிவாளர்களுக்கும், உடல் எடை அதிகரித்தவர்களுக்கும் நல்லதல்ல, காரணம் அதில் கலோரி வலு அதிகம். குருதிச் சீனியின் அளவையும் உடல் கொழுப்பையும் எடையையும் அதிகரிக்கும். அத்தகைய இனிப்புப் பிரியர்களின் தேவைகளை ஈடுசெய்யவே, கலோரி வலுக் குறைந்த இனிப்புகளான செயற்கை இனிப்புகள் சந்தைக்கு வந்தன. இவற்றின் நன்மை என்னவெனில் கலோரி வலு குறைவாக இருக்கும். அதேவேளை அவற்றின் இனிப்புச் சுவையானது சீனியை விடப் பல மடங்கு அதிகமாகும். உதாரணமாக 30 மிகி அளவேயான aspartame 5 கிராம் அளவு சீனியின் இனிப்புச் சுவையைக் கொடுக்க வல்லது.

எனவே பல நோயாளர்கள் தாங்களாகவே அல்லது மருத்துவரின் ஆலோசனையுடன் அத்தகைய செயற்கை இனிப்புகளை உணவு மற்றும் நீராகாரம் போன்றவற்றில் சேர்த்துக் கொள்கிறார்கள். ஒரு கல்லில் இரு மாங்காய்கள், இனிப்புச் சுவையை உண்ண முடிகிறது. ஆனால், அதேநேரத்தில் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிக்காது. நீரிழிவு கட்டுப்பாட்டில் இருக்கும்.

இந்த செயற்கை இனிப்புகள் பாதுகாப்பானவையா என்பதுதான் பலரின் மனத்தை அரிக்கும் சந்தேகமாகும்.

சில காலத்திற்கு முன் வந்த சில ஆய்வுகள் சிகப்பு சமிக்ஞை காட்டின.

கர்ப்பமாயிருக்கும் பெண்களுக்கு இது ஆபத்தாக முடியலாம் என்றது ஒரு ஆய்வு. காலத்துக்கு முந்திய மகப்பேறு நிகழலாம் எனவும் அஞ்சப்பட்டது.

பிரான்சில் செய்யப்பட்ட அந்த ஆய்வானது எடை அதிகரிப்பதற்கோ அல்லது எடை குறைப்பிற்கோ செயற்கை இனிப்புகள் காரணம் அல்ல என்கின்றது.

சுண்டெலிகளில் செய்யப்பட்ட மற்றொரு ஆய்வானது அதிகளவில் செயற்கை இனிப்புகளை உண்பதால் சுண்டெலிகளில் புற்றுநோய் தோன்றுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்பதுடன் நீரிழிவு தோன்றுவதற்கான சாத்தியமும் அதிகம் என்றது. ஆயினும் இந்த ஆய்வுகள் மனிதர்களில் இதுவரை செய்து நிரூபிக்கப்படவில்லை.

இந்த நிலையில் சந்தேகங்களைத் தெளிவிப்பதற்காக ஐரோப்பிய உணவு பாதுகாப்பு அதிகார சபையானது (European Food Safety Authority) அத்தகைய இனிப்புகளின் பாதுகாப்புத் தன்மை பற்றிய ஒரு மீள் ஆய்வை ஆரம்பித்தது.

அதன் பலனாக சிகப்பு ஒளி மங்கத் தொடங்கியது. மேற்படி மீள்ஆய்வு இன்னமும் தொடர்கிறது என்றபோதும் அஸ்பார்டேம் (aspartame) என்ற செயற்கை இனிப்புப் பற்றிய அறிக்கை 2015 ஜனவரியில் வெளியிடப்பட்டுள்ளது. 40 மிகி அளவைத் தாண்டாத அஸ்பார்டேம் இனிப்பை உட்கொள்வதால் ஆபத்துகள் ஏதும் இல்லை என அது முடிவு கூறியுள்ளது.

பிரான்சில் செய்யப்பட்ட மற்றொரு (Agency for Food. Environment and Occupational Health & Safety) ஆய்வும் பச்சை விளக்குக் காட்டின.

செயற்கை இனிப்புகளை உட்கொள்வதால், இனிப்புச் சுவைக்கு பழக்கப்பட்டு அதனால் மேலும் மேலும் இனிப்புப் பண்டங்களை தேடி உண்ணும் பழக்கம் ஏற்படுவதும் இல்லை என்கிறது. அதாவது இனிப்பு சுவைக்கு அடிமையாவது (addiction) இல்லையாம். செயற்கை இனிப்புகளை குழந்தைப் பருவத்தில் உண்பவர்கள் வளரும்போதும் அதையே நாடுவார்கள் என்ற பரவலான கருத்துக்கு ஆதாரம் இல்லை என்று மேலும் சொல்கிறது.

எடையைக் குறைப்பதற்கு கலோரி வலுக் குறைந்த இத்தகைய செயற்கை இனிப்புகள் உதவும் எனப் பலரும் நம்புகிறார்கள். அதே நேரம் இவற்றைப் பயன்படுத்துபவர்களுக்கு எடை அதிகரிக்கும் என்கின்றன சில ஆய்வுகள்.

பிரான்சில் செய்யப்பட்ட அந்த ஆய்வானது எடை அதிகரிப்பதற்கோ அல்லது எடை குறைப்பிற்கோ செயற்கை இனிப்புகள் காரணம் அல்ல என்கின்றது.

இந்தச் செயற்கை இனிப்புகள் குருதியில் குளுக்கோசின் அளவை அதிகரித்து அதன் காரணமாக உடலில் இன்சுலின் சுரப்பதையும் அதிகரிக்கும் என்றொரு நம்பிக்கை இருக்கிறது. அதன் காரணமாக நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியத்தை செயற்கை இனிப்புகள் அதிகரிக்கின்றன என்கிறார்கள். ஆனால், அது தவறு என்கிறது பிரான்ஸ் நாட்டின் மேற்கூறிய ஆய்வு. இந்தச் செயற்கை இனிப்புகள் நீரிழிவு ஏற்படுவதற்கு காரணமாக இருக்காது என்பது தெளிவாகிறது.

கர்ப்பிணிகள் இவற்றை பாவிப்பதால் கருப்பையில் வளரும் சிசு குறை மாதத்தில் பிறப்பதற்கு அல்லது வேறு ஆபத்துகளை ஏற்படுத்துவதற்கான ஆதாரம் இல்லை.

செயற்கை இனிப்புகள் நிணநீர் தொகுதியில் lymphoma எனப்படும் ஒருவகைப் புற்று நோயை ஏற்படுத்தலாம் என முன்னர் ஒரு ஆய்வு கூறியது. ஆயினும் பிரான்ஸ் நாட்டின் மேற்கூறிய ஆய்வானது புற்றுநோயை ஏற்படுத்துவதற்கான ஆதாரம் இல்லை எனச் சொல்கிறது. இருந்தபோதும் இது பற்றி மேலும் ஆய்வு செய்வது நல்லது என்கிறது அதே பிரான்ஸ் அறிக்கை.

செயற்கை இனிப்புகளை உட்கொள்வதால் குறிப்பிடக்கூடிய நன்மைகள் இல்லை என்பதும் அதே நேரம் அவற்றால் ஆபத்தான விளைவுகள் ஏற்படவும் வாய்ப்பு இல்லை என்பதே ஐரோப்பிய மற்றும் பிரான்ஸ் அதிகார சபைகளின் பொதுவான சிபாரிசாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. எனவே இது தொடர்பாக இரண்டு முக்கிய விடயங்களைக் கூறலாம்.

1. எவரும் தயக்கமின்றிப் பாவிக்கக் கூடியளவு ஆரோக்கியமான உணவு என்று செயற்கை இனிப்புகளைச் சிபாரிசு செய்வது இன்றைய நிலையில் முடியாது. ஏனெனில் அவற்றினால் ஆரோக்கியம் மேம்படும் என்று சொல்வதற்கு ஆதாரங்கள் இல்லை.

2. இருந்தபோதும் அதிகளவு மென்பானங்களை அல்லது பழச் சாறுகளை அருந்துபவர்கள் அவற்றைக் கைவிட்டு, பதிலாக வெறும் நீரை மட்டும் உட்கொள்ள முடியாத நிலையில் இருந்தால், அதற்கு மாற்றீடாக செயற்கை இனிப்புகள் அமையும். முக்கியமாக நீரிழிவாளர்களுக்கு இது கூடியளவு பொருத்தமாக இருக்கும். அவர்கள் சீனி அதிகம் உள்ள பானங்களை அருந்துவதைத் தவிர்த்து இத்தகைய செயற்கை இனிப்புகளை தமது உணவிலும் நீராகாரங்களிலும் சேர்த்துக் கொள்வதில் தவறு இல்லை.

நீரிழிவு நோயற்ற ஏனையவர்கள் இவற்றை உபயோகிப்பதில் எந்தவித நன்மையும் இருப்பதாக இதுவரை அறியப்படவில்லை. எனவே அதிகளவு சீனி சேர்த்துக் கொள்வதைத் தவிர்ப்பது நல்லது. அதே நேரம் செயற்கை இனிப்புகளை மாற்றீடு செய்வதில் எந்த நன்மையும் இருப்பதாகவும் தெரியவில்லை.

- நன்றி கனடா தமிழர் தகவல்

என்ன உலகமடா?

Doctor ஸ்ரீதரன்

அறிவாளிகள்

இலண்டனில் பொறியியலாளராகப் பணி புரியும் விமலின் தாயார் பரமேஸ்வரிக்கு வயது ஐம்பது. இலங்கை பல்கலைக்கழகத்தில் கடந்த இருபது வருடங்களாக பேராசிரியையாக கடமையாற்றுகிறாள். பேராசிரியையின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் அந்தப் பல்கலைக்கழகமே தலைவணங்கும்.

பரமேஸ்வரி எப்பொழுதுமே - எதிலுமே யாருடைய அபிப்பிராயத்தையும் கேட்பதில்லை - எதிர்பார்ப்பதுமில்லை - அவள் கணவன் - பிள்ளைகள் உட்பட. தன்னுடைய பார்வையில் - கணிப்பில் - முடிவுகளில் அசைக்க முடியாத நம்பிக்கை அவளுக்கு. பேராசிரியை அல்லவா!

தனது ஒரு மாத விடுமுறையைக் கழிப்பதற்காக இப்பொழுது முதல் முறையாக இலண்டன் வந்திருக்கிறாள் பரமேஸ்வரி. வந்து இரண்டே நாட்கள் தான் ஆனாலும் - இலண்டனைப் பற்றிய தனது கருத்துக்களை - தனது முடிவுகளை - பந்து வருடங்களாக இலண்டனிலேயே வாழும் தன் மகன் விமலிடம் அள்ளி இறைத்த வண்ணமிருக்கிறாள்.

அன்று காலை கூட உணவருந்தும்போது பரமேஸ்வரி கூறுகிறாள்:

எங்களுடைய நாட்டில் - எமது இனத்திற்குள் ஒற்றுமையே கிடையாது. ஒரு பரந்த மனப்பான்மை கிடையாது. அவற்றைப் பார்ப்பதென்றால் இந்த நாட்டிற்குத்தான் வரவேண்டும். நானும் தான் பார்க்கிறேன் - இந்த வெள்ளைக்காரப் பெட்டைகள் எவ்வளவு ஒற்றுமையாக - அன்பாக - கறுப்பு இன ஆப்பிரிக்கர்களுடன் பழகுகிறார்கள். எங்களுடைய நாட்டில் இப்படி ஒன்றை நினைத்துப்பார்க்கக்கூட முடியாது.

விமல் இதற்கு எதுவுமே கூறவில்லை.

இவர்கள் ஏன் - எதற்காக- எதை எதிர்பார்த்து - அவர்களுடன் பழகுகிறார்கள் என்று விமலுக்குத் தெரியும். அதையெல்லாம் எப்படி வெட்கத்தை விட்டு தாயாரிடம் கூறுவது?

ஒன்று மட்டும் விமலுக்கு நிச்சயமாக தெரியும்.

இலங்கை திரும்பியதும் - இலண்டனில் இன ஒற்றுமை - என்ற தலைப்பில் அம்மா பல்கலைக்கழகத்தில் ஒரு உரை நிகழ்த்துவாள். அம்மாவின் அறிவையும் ஆற்றலையும் கண்டு அந்த பல்கலைக்கழகமே பிரமித்துப் போகும்!

பேராசிரியை அல்லவா!

கோழிச்சண்டை

கடந்த வருடம் கோடை விடுமுறையைக் கழிப்பதற்காக இலண்டனில் வாழும் நானும் எனது நண்பனும் இந்தியா சென்றிருந்தோம். மூன்று கடல்கள் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் கடலின் நடுவேயுள்ள ஒரு பிரமாண்டமான பாறையில் அமைக்கப்பட்டிருக்கும் அந்த அற்புதமான விவேகாநந்தர் ஆலயத்திற்கு செல்வதற்காக திருச்சியிலிருந்து கன்னியாகுமரி நோக்கி காரில் சென்று கொண்டிருந்தோம். வழியில் ஒரு கிராமம். கிராமத்திற்கு ஒதுக்குப்புறமாக அமைந்துள்ள அந்த மைதானத்தில் ஒரு சிறு கூட்டம். காரை ஓரமாக நிறுத்தி விட்டு இறங்கிப் பார்த்தபோது நாம் அங்கு பார்த்து - கிராமத்தவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு மாபெரும் கோழிச்சண்டை.

இதற்கெனவே வளர்க்கப்பட்டு - விஷேட பயிற்சியளிக்கப்பட்ட இரண்டு பெரிய சேவல்கள் ஆக்ரோஷமாக ஒன்றுடன் ஒன்று சண்டை இட்டுக்கொண்டிருந்தன. நன்றாக அவதானித்தபோது அவற்றின் கால்களில் சிறிய கத்திகள் வேறு கட்டப்படிருந்தன. ஒன்றை ஒன்று கொல்லாமல் விடுவதில்லை என்ற தோரணையில் பறந்து பறந்து ஒன்றை ஒன்று தாக்கிய வண்ணமிருந்தன. சுற்றியிருந்த கிராமத்தவர்கள் இரண்டு குழுக்களாக பிரிந்து அவற்றிற்கு ஆதரவு தெரிவித்து கூக்குரல் எழுப்பிக்கொண்டிருந்தார்கள்.

வெகு விரைவில் இரண்டில் ஒன்று மரணத்தை தழுவப்போகிறது என்று தெளிவாக தெரிந்தது. இதை தொடர்ந்து பார்க்காமல் நான் நண்பனை காருக்கு அழைத்தவாறே மெதுவாக கூறினேன்:

பாவம் இந்த பறவைகள்! எதற்காக சண்டை போடுகிறோம்? யாருக்காக சண்டை போடுகிறோம்? சண்டையிடுவதால் நமக்கு என்ன லாபம்? இதன் முடிவு என்ன? என்று எதுவுமே புரியாமல் யாரோ ஏவி விட்டதற்காக வீணாக ஒன்றை ஒன்று அடித்து யாருக்காகவோ அடிபட்டு கடைசியில் தமது உயிரை இழக்கப்போகின்றன.

எதுவுமே பேசாத எனது நண்பன் சில நிமிடங்களின் பின்னர் கூறினான்:

இந்தக் கோழிகளுக்கும் பகுத்தறிவு படைத்த மனிதர்கள் நாங்கள் என்று கூறித் திரியும் நமக்கும் பெரிதாக வித்தியாசம் ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. யாரோ ஏவி விட்டதால் மட்டுமே சிந்திக்கத் தெரியாத இந்த பறவைகள் தமக்குள் சண்டை இட்டுக்கொள்கின்றன. ஆனால், சிந்திக்கத் தெரிந்த நாங்கள் - யாருமே ஏவி விடாமல் - நாமாகவே நம்மை இன்னொருவர் மீது ஏவி விட்டுக்கொண்டு நமது வாழ்க்கையை ஒரு நரகமாக்கியிருக்கிறோம். இங்கு நமக்கு என்ன வேண்டும் என்று நமக்கே தெரியாது. ஏனெனில் நாம் ஒரு பொழுதும் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டதேயில்லை. நாம் எதற்காக படிக்கிறோம்? - எதற்காக உழைக்கிறோம்? எதற்காக திருமணம் செய்து கொள்கிறோம்?- எதற்காக குழந்தைகள் பெற்றுக்கொள்கிறோம்? என்று நம்மில் யாருக்குமே ஒழுங்காக தெரியாது. நாம் எல்லோரும் இதை ஏன் செய்கிறோம் என்றால் மற்றவர்கள் எல்லோரும் இதையே செய்கிறார்கள். அதனால் நாமும் செய்கிறோம். அவர்கள் செய்வதைவிட அதிகமாக என்னால் செய்ய முடிந்தால் எனக்கு அளவிலாப் பெருமை. இல்லாவிடில் செய்பவர்கள் மீது பொறாமை. பிறந்ததிலிருந்து இறக்கும் வரை இங்கு நம்மை இயக்குவிக்கும் உணர்வுகள் போட்டி- பொறாமை - எரிச்சல் - அந்தரம். நமக்கு வேண்டியவர்களுடன் போட்டி - நம்மைச் சுற்றிருப்பவர்கள் மீது பொறாமை - உறவினர்களின் மீது எரிச்சல் - நண்பர்களுடன் அந்தரம்.

மனிதர்களின் வாழ்க்கை ஒரு அந்தரங்க கோழிச்சண்டை ■

வம்ச விருத்தி

அன்று வெள்ளிக்கிழமை. நேரம் மாலை ஆறு மணி. தலைமை கணக்காளர் சிவாவும் ஆபீஸ் முகாமையாளர் குமாரும் அமெரிக்காவிலிருந்து வரவிருக்கும் ஒரு முக்கிய தொலைபேசி செய்தியை எதிர்பார்த்து அலுவலகத்தில் காத்திருக்கிறார்கள்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் குமாரிடம் கேட்கும் ஒரு கேள்வியை இன்றும் சிவா கேட்கத் தவறவில்லை.

குமார்! திருமணமாகியும் எதற்காக பிள்ளைகளே தேவையில்லை என்று நீ வாழ்க்கை நடத்துகிறாய்?

எத்தனை முறை கேட்டும் ஒரு சிரிப்பை மட்டுமே பதிலாகப் பெற்ற சிவாவுக்கு இன்று ஒரு நீண்ட பேச்சுக்கு தன்னை தயார்படுத்தும் குமாரின் அங்க அசைவுகளைப் பார்த்ததும் ஆச்சரியம் தாங்கவில்லை.

சிவா! சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கை என்பது ஒரு தெரிவு. அது ஒரு கட்டாயமல்ல. புரியவில்லையா? நமது பிறப்பு - நமக்கு வரும் சில நோய்கள் - நாம் சந்திக்கும் சில விபத்துக்கள் - நமது இறப்பு - இவை போன்ற சில கட்டுப்பாடற்ற கட்டாயங்களைத் தவிர - பெரும்பாலான மற்றவை நமது கட்டுப்பாட்டிற்குட்பட்ட தெரிவுகளே.

நமது வாழ்க்கைக்கு அர்த்தம் சொல்லும் சில முட்டாள்களின் தலையீட்டால் நமக்கு தெரிவுகளுக்கும் கட்டாயங்களுக்கும் வித்தியாசமே தெரியாமல் போய்விட்டது.

ஆண்டவன் கொடுத்த பிள்ளைச் செல்வங்கள் என்று இங்கு பெற்றுக் குவித்திருப்பவர்களிடம் - எதற்காகப் பெற்றீர்கள் - என்று கேட்டால் - இது என்ன ஒரு கண்டறியாத கேள்வி - என்று கேட்டவனையே பெரும்பாலானவர்கள் கேள்வி கேட்பார்களேயொழிய உருப்படியான பதில் எதுவும் கிடைக்காது. ஏனெனில் பெற வேண்டும் என்பது அவர்களுக்கு ஒரு கட்டாயம்.

பிள்ளைகளே வேண்டாமென்றிருப்பது சுயநலமெனில் - எதற்கு பெறுகிறோம் - எதற்காக பெறுகிறோம் - என்று தெரியாமல் பெற்றுக்குவிப்பது அதை விட சுயநலம்.

எனது இப்போதைய வாழ்க்கை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது - அது எப்படி இருக்கிறதோ அப்படியே அதை எனக்கு பிடித்திருக்கிறது. அதில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. ஒரு பிள்ளையோ - இரண்டு பிள்ளைகளோ - மீண்டும் திருப்ப முடியாத நிரந்தர மாற்றங்களை நான் உருவாக்க விரும்பவில்லை. அது எனது தெரிவு.

இப்படியே எல்லோரும் சிந்திக்க ஆரம்பித்தால் மனிதவம்சத்தின் கதி!

மடையா! பசு புல்லை தின்னாமல் விட்டால் உலகம் பூராவும் புல்வெளியாகிவிடாது! ■

லண்டனில் நாவலருக்கு பெருவிழா

இலண்டன் இலக்கிய சங்கமம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கு லண்டனில் பெருவிழா எடுக்கிறது. ALPERATION COMMUNITY SCHOOL மண்டபத்தில் 20.06.2015 சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் 11 மணி வரை விழா நடைபெறும். 16வது சைவத்திருக்கோயில் ஒன்றியத்தின் 2ம் நாள் மாநாடு வெற்றிகரமாக நடந்த அதே மண்டபத்தில்தான் இவ்விழா நடக்கிறது.

தமிழ்ப் பற்றும், சமயப் பற்றும், கலைப் பற்றும் என்பது ஒரு தவமாகக் கொண்டு தமிழ் உணர்வாளர் சிவ தணிகாசலத்தினால் ஆரம்பிக்கப்பட்டு, நடாத்தப்பட்டுவரும், இலண்டன் இலக்கிய சங்கமம் இதுவரை பாரதிதாசன், யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகள், தவில் பிரம்மா இணுவில் தட்சணாமூர்த்தி, தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், நவாலியூர் சோமசுந்தரப்புலவர் ஆகியோருக்கு லண்டனில் நினைவு விழாக்களை வெற்றிகரமாகக் கொண்டாடியுள்ளது.

"ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் பொற்காலமான 19வது நூற்றாண்டு நாயகனும், அந்நியர் ஆட்சியிலிருந்து நம் தமிழையும், சமயத்தையும் பாதுகாத்த பாதுகாவலனும், ஈழ மண்டலத்தின் அறிவுக் கண்ணாய், சமுதாய அறிவியலின் மேம்பாட்டுக்காக நூற்பதிப்புச் செய்தவர் நமது நாவலர்.

"கற்றுணர் புலவருட்களிக்கும்
முற்று முணராறு முக நாவலர்"

என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் போற்றப்படும் ஐந்தாம் சமயக் குரவர் ஆறுமுக நாவலருக்கு பெருவிழா எடுக்கும் முயற்சியில் என்னோடு கைகோர்த்துள்ள அறிஞர்களையும் ஆதரவு வழங்குகின்ற அன்பர்களையும் நெஞ்சத்தில் நிறைத்து வைத்துக்கொண்டு, இப்பணியைத் தொடருகின்றேன்" என்கிறார் இலண்டன் இலக்கிய சங்கமம் அமைப்பாளர் சிவ தணிகாசலம்.

இந்நிகழ்விலே மலையளவு சொல்லுறுதியும், வானளவு சொற்பெருக்கும் கொண்ட ஆறு இளைஞர்கள் பங்குகொள்ளும் இளைஞர் இலக்கிய சங்கமத்தின் பட்டிமன்றம், "பண்டார வன்னியன்" என்னும் நாடகம், அறிஞர் பெருமக்களின் பேருரைகள் இடம்பெறும். ■

இலவச சேவை
கல்யாணமாலை
மணமகள், மணமகன் அறிமுகம்
தொடர்புகளுக்கு
kalyanamalaiuk@yahoo.co.uk
தொலைபேசி 07466846911

31வது நாள் நினைவு அஞ்சலி

பிறப்பு 27.06.1931
இறப்பு 30.04.2015

திருமதி பரமேஸ்வரி ஆறுமுகம்

காலஞ்சென்ற காரை நகர் முத்துவேலு ஆறுமுகம் (பிரதம கணக்காளர், பொலிஸ் திணைக்களம்) அவர்களின் துணைவியாரான யாழ்.வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி ஆறுமுகம் அவர்களின் 31வது நாள் நினைவுகளை கண்ணீர் அஞ்சலியுடன் பகிர்ந்து கொள்கிறார்கள்.

பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், மேற்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

அன்னார் ஆத்ம சாந்திக்காக 14.06.2015 வில்பிள்டன் பிள்ளையார் கோயிலில் நடக்கும் பகல் பூசையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: குடும்பத்தினர்

'மானிடத்தின் சாதகம்' நூல் வெளியீடு

ஆய்வாளர் தா.தேச இலங்கை மன்னனின் 'சர்வதேச மனித உரிமைச் சாசனம் -1948: மானிடத்தின் சாதகம்' என்ற நூல் வெளியீட்டு விழா சமீபத்தில் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஜரோப்பிய யூனியன் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி டேவிட் டாலி 'எல்லா மனிதர்களும் சமமான சுதந்திரங்களோடும், கௌரவங்களோடும் உரிமைகளோடும் பிறந்தவர்கள்' என்ற மனித உரிமையின் சிறப்பைத் தெளிவாக எடுத்துரைத்தார். ஜரோப்பா, கனடா, மலேஷியா, இந்தியா போன்ற நாடுகளில் இந்நூல் வெளியிடப்படவிருப்பதாக நூலாசிரியர் தெரிவித்தார்.

OM KANAKA DURGA AMMAN
AYURVEDIC & ASTROLOGY CENTRE
Pandith: Mani Kantan Guru Ji
Indian Astrologer & Herbal Ayurvedic Specialist

பிரபல மந்திரிமார்களுக்கும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகொண்டு இருக்கிறது நடக்கப் போறது சொல்லுவார்.

குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
வாகன மனைப்பொருத்தங்கள், வீசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஸ்டி.
நாக தோசம், உங்களுக்கு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

He is expert in giving Ayurvedic medicines for all diseases with out any side effects.
We can care the following diseases:
* Asthma * Diabetes *Joint Pains * Childless Couple * Sexual Problems * Allergy * Gastrics * Over Weight * Migraine * Paralysis * Ladies Problems etc.

Any problems cleared within 5 days
Famous through 7 Generations
Office Hours: 7 Days a week 10.00 AM- 7.00 PM

0740 4911 909
0740 4930 052
241-243 High Road
Illford, Essex
(Next to Macdonald)
IG1 1NE, UK

Standing Committee of Tamil Speaking People (SCOT)
Presents
Dr Lakshmi Ramaswamy
Leading Bharatanatyam dancer from India
in concert
Bhavan centre
4a Castletown Road, London W14 9HE
(Nearest Tube: West Kensington - District line)
Sunday 28 June 2015
5.30pm
(Doors open 5.00pm)

Donations:
Special row £50.00
Front stall £25.00
Rear Stall £20.00
Balcony £10.00

For further enqiry, contact:
Dr S Navaratnam: 01277 223 981
Mr Vijay Indran: 07860 416 978
Miss Vasuki Sankaralingam: 020 8579 3256
Mr Bernard Alphonsus: 07714 227 779
Bhavan centre: 020 7381 3086/4608

Please book seats early
No tickets sale at gate
SCOT chanty No 274499

Net proceeds to fund livelihood projects for war affected families in Tamil areas of Srilanka

நிராகரிக்க முடியாத பாலியல் பிரச்சினை!

உண்மையில் 'செக்ஸ்' ஒரு சிக்கலான பிரச்சனைதான். மனிதர்களுக்கான பாலியல் தேவை என்பது உடலில் ஆரோக்கியம் இருக்கும்வரை நிராகரிக்க முடியாதது! ஆனால், மனித பாலியல் உணர்வுகளுக்கு என்று ஒரு வரையறையை ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். அல்லது பாலியல் தொடர்பான ஒரு கொந்தளிப்பு சமூகத்தில் ஏற்பட்டுவிடும். அது பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

இதே நேரம் நாம் பெரியவர்கள், மதகுருமார்கள் என்று மதிக்கப்படுகிறவர்கள் செய்யும் பாலியல் தொடர்பான செயல்கள் நாட்டில், ஏன் உலகளாவிய ரீதியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தி விடுகின்றன.

நூற்றுக்குமதிகமான சிறுவர் மீதான பாலியல் குற்றச்சாட்டு தொடர்பாகக் கத்தோலிக்கப் பாதிரிமாரை விசாரிக்க வேண்டியிருக்கிறது என்ற விடயத்தையும் வத்திக்கானே ஒப்புக் கொண்டிருக்கிறது!

புதிய பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட பாதிரியார்கள் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலேயே இருப்பதுதான் வத்திகானுக்கு பெரும் கவலை. ஆசிய நாடுகளில் உள்ள கத்தோலிக்க பாதிரிமார்

மதிப்பு மிக்கவர்களாக இருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் கன்னியாஸ்திரி ஒருவரைப் பாலியல் ரீதியாகப் பயன்படுத்தினார் என்று பாதிரியார் கைது செய்யப்பட்டிருக்கிற சம்பவம் நடந்திருக்கிறது.

ஆனாலும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் ஐரோப்பிய, அமெரிக்க பாதிரிமாரிடம்தான் அதிகரித்து காணப்படுகிறது. இது ரோமன் கத்தோலிக்கத்தைப் பின்பற்றுகிறவர்கள் மத்தியில் பெரும் தலைவலியாக மாறிவிட்டது.

மற்றைய புரட்டஸ்தாந்து, அங்கிலிக்கன் திருச்சபைகளை பின்பற்றுகின்ற பாதிரிமார் கலியாணம் முடிக்கலாம். அங்கு அவர்களுக்கான 'செக்ஸ்' பிரச்சினையாகத் தலைதூக்குவது திருமணத்தின் மூலம் தடுக்கப்படுகிறது.

அதனால், ரோமன் கத்தோலிக்கப் பாதிரிமார்களை செக்ஸ் சகிப்புத்தன்மை இல்லாதவர்களாக இங்கு மீடியாக்கள் சுட்டிக்காட்டுகின்றன. முக்கிய உலக ஊடகங்களில் ரோமன் கத்தோலிக்கப் பாதிரிமாரின் செக்ஸ் குற்றங்கள் தொடர்ந்தும் காண்பிக்கப்படுகின்றன. ஆனால், பிரித்தானியாவில் உள்ள அங்கிலிக்கன் திருச்சபை ஒருபால் திருமணத்துக்கான அங்கீகாரம் அளித்தமை மற்றும் பெண்கள் பாதிரியாகலாம் என்று ஒப்புதல் கொடுத்தமை என்பன சமூக ரீதியில்

தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களில் இப்பொழுதும் ஒரு சோற்றுப் பார்சலுக்காக செக்ஸ் செய்ய பெண்கள் வருவார்கள். ஏன் ரஷ்யாவிலும் அப்படித்தான்!

அங்கிலிக்கன் பரந்த அங்கீகாரத்தைப் பெறுவதற்கான கவர்ச்சிகரமான முன்மாதிரியாகக் கொள்ளப்படுகிறது.

ஆனால், இன்னும் பழமை பேணும் றோமன் கத்தோலிக்கத்தை ஆட்டிப் படைக்கும் செக்ஸ் குற்றங்கள் ஒரு பாரிய தலைவலியாக வத்திக்கானுக்கு இருக்கிறது. பாதிரியார்களைத் தண்டிக்கலாம். ஆனால், இன்னும் மூடிய அறைக்குள் நடக்கும் செக்ஸ் குற்றங்களை என்ன செய்வது?

சமூகரீதியான பாலியல் குற்றங்கள் தொடர்பாக இப்பொழுது இலங்கையில் பேசப்பட்டு வருகிறது. பாலியல் தொடர்பான குற்றங்களோடு சம்பந்தப்பட்ட

பெண்களின் புகைப்படங்களைப் பத்திரிகைகளில் பிரசுரிக்குமாறு மகளிர் மற்றும் சிறுவர் பிரிவு பொலிஸார் ஊடகங்களிடம் சொல்லி இருந்தனர். அதை ஒரு சில பத்திரிகைகள் உடனடியாகவே பிரசுரித்திருந்தன. பல பத்திரிகைகள் மறுத்துவிட்டன. பாராட்டுகள்.

ஆனால், அவர்களில் 80 பேர் பெண்கள். ஏன் இவர்கள் இந்தத் தொழிலுக்கு சென்றார்கள்? அவர்களின் தேவை என்ன? அவர்களின் குடும்பப் பின்னணி என்ன? அவர்கள் விரும்பிப் போனார்களா? அல்லது கடத்தப்பட்டுப் பாலியல் தொழிலுக்குக் கொண்டு செல்லப்பட்டார்களா? என்று ஆராய்ந்து அவர்களுக்குப் புனர் வாழ்வளிக்க வேண்டிய மகளிர் மற்றும் சிறுவர் பிரிவு பொலிஸார் ஏன் இப்படி நடந்து கொண்டார்கள்? இங்கு வெளிநாடுகளில் செக்ஸ் ஒரு தொழிலாகவே செய்யப்படுகிறது. ஆனால், இலங்கை, இந்தியா போன்ற இடங்களில் பெண்கள் கடத்தல்காரர்கள், பாதாள உலக கோஷ்டிகளின்

• இளைய அப்துல்லாஹ்

கைகளில் அகப்பட்டுச் சின்னாபின்னமாகிப் போகின்றனர். மீள முடியாத துன்பத்துக்குள் தள்ளப்படும் அவர்கள் பாலியல் வியாபார முகவர்களிடம் கொண்டுவந்து விற்கப்படுகிறார்கள்.

இங்கே ஐரோப்பிய நாடுகளில் வீதியில் நின்று கொண்டு ஆழ்ந்த முத்தங்களைப் பரிமாறும் காதலர்களைப் பார்க்கிறோம். ஆனால், இலங்கையில் காதலனும் காதலியும் ஒன்றாக இருந்து பேசிக்கொண்டிருந்தால் பொலிஸ் பிடித்துக் கொண்டு போய்விடுகிறது. அது மட்டுமல்ல காதலர்களுக்குத் தனிப் பூங்கா வேறு கட்டப் போகிறார்களாம். இது மனித உணர்வுகளுக்கு மனிதன் கொடுக்கும் அதீத விலை. ஆனால், எங்கே தப்பு நடக்கிறது. யார் யார் எல்லாம் இந்தப் பாலியல் கணப்பு இடங்களை வைத்து நடத்துகிறார்கள் என்று ஒரு தொடர் கயிற்றைப் பிடித்துக் கொண்டு போனால் ஒரு அரசியல்வாதியில் அல்லது செல்வாக்கான அமைச்சரிடம்தான் அந்தக் கயிற்றின் தொங்கல் வந்து நிற்கும்.

பாலியல் குற்றங்களைத் தடுப்பது என்பது பெண்களின் படங்களைப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதோடு மட்டும் முடிந்து விடும் ஒரு விடயமல்ல. மிகவும் பொறுப்புடன் சமூகரீதியாக நோக்கப்பட வேண்டிய விடயம்.

இலங்கை போகும் போக்குக்குப் பாலியல் மூலம் பணம் சம்பாதிக்க முயலும் பெண்களை ஆச்சரியமாகப் பார்க்க முடியாது. ஒரு றாத்தல் பாணின் விலை, தேங்காயின் விலை, மிளகாய் தூளின் விலை என்ன? எப்படி ஏழை ஒருவன் வீட்டில் அடுப்பு எரியும்? நான்குபேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு 1000 ரூபா ஒரு நாளைக்குப் போதுமா, கொழும்பில் வாழ முடியுமா? எவ்வாறு அவர்கள் சீவிப்பது?

தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களில் இப்பொழுதும் ஒரு சோற்றுப் பார்சலுக்காக செக்ஸ் செய்ய பெண்கள் வருவார்கள். ஏன் ரஷ்யாவிலும் அப்படித்தான்! பொருளாதார ரீதியாக வாழ முடியாமல் தவிக்கும் மனிதனின் வயிற்றுப்பசியை போக்க முதலில் ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும். வேலை வாய்ப்பு இல்லை, பிள்ளைகள் பட்டினி, வாழ வழியில்லை, ஒரு பெண் என்ன செய்வாள்? அதற்கான விடையை அரசு சொல்ல வேண்டும். அதை விடுத்துப் பெண்களைத் துன்புறுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுவது பாலியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது. அரசியல் செல்வாக்குள்ளவர்கள் இன்னும் பாலியல் தொழிலை பொலிஸாரின் அனுமதியுடன் கொழும்பில் செய்து கொண்டிருக்கிறார்கள். ரஷ்ய, தாய்லாந்து, சின பெண்கள் கொழும்பில் பாலியல் தொழிலுக்காக அழைத்து வந்து செய்கிறார்கள். அதை பொலிஸார் காணமாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்கு ஒரு தொகை பணம் போகிறது.

அப்பாவி சிங்களப் பெண்களின் புகைப்படங்களைப் பத்திரிகையில் போட்டால் மட்டும் பாலியல் தொடர்பான விழிப்புணர்ச்சி இலங்கைக்கு வரவே வராது. அதற்கப்பால் தான் பல விடயங்கள் செய்ய வேண்டும். ■

வவுனியூர் இரா.உதயணன்



இன்னும் அவனுக்காக...

பனிமூட்டம் இருளை அனைத்துப் பரவியிருந்தது. கண்களுக்கு எட்டிய தூரம் வரை வீதியில் வாகனப்போக்குவரத்து ஒன்றையும் காணவில்லை. நீண்ட பரந்த நிலப்பரப்பில் அந்தக் கட்டிடம் சிறியதாய் எடுப்பாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்தது. அது ஒரு பேக்கரி. விதம் விதமான பாண் வகைகள், கேக் போன்ற பலவகை உணவுப் பொருட்களை தயாரிக்கும் இடம்தான் அது. அங்கு இருபத்தி நான்கு மணித்தியாலங்களும் இயந்திரங்கள் இயங்கிக் கொண்டுதானிருக்கும். பிரதாப் அங்கு கடந்த எட்டு ஆண்டுகளாக வேலை செய்து வருகிறான். அண்மையில்தான் அவனுக்கு மானேஜராக பதவியுயர்வும் கிடைத்தது. கேக் வகைகள் தயாரிக்கும் பகுதிக்கு அவன்தான் இப்பொழுது பொறுப்பு.

பல வருடங்கள் இரவில் வேலை செய்தவன் மானேஜராக பதவியுயர்வு கிடைத்த பின்பு அவனை பகல் வேலைக்கு மாற்றியிருந்தார்கள்.

காலை ஆறு மணிக்கு வேலை தொடங்கியவன் அங்கு இயங்கும் இயந்திரங்களைப் போன்று தானும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தான்.

அப்பொழுதுதான் அந்த பேக்கரியின் பொது முகாமையாளர் அவனைத் தேடி வந்து ஒரு கடிதத்தை அவனிடம் நீட்டினார்.

"வீட்டு விலாசத்தைக் கொடுக்கலாமே. ஏன் இந்த பேக்கரி விலாசத்துக்குத்தான் உமக்கு கடிதங்கள் வருகுது..."

பொது முகாமையாளர் கேட்க,

"வீட்டு விலாசத்துக்கு வரவேண்டிய கடிதங்கள் எனக்கு தொலைஞ்சு போகுது, அதுதான் பேக்கரி விலாசத்தை கொடுத்தனான்". பொது முகாமையாளர் ஒன்றும் சொல்லாமல் திரும்பி தனது அலுவலகத்தை நோக்கி நடந்தார்.

பிரதாப்புக்கு எங்கிருந்து கடிதம் வந்திருக்கிறது என்று நன்றாகவே தெரியும். சிற்றுண்டி இடைவேளையின்போது, கடிதத்தைப் பிரித்தான். அருந்ததியின் அழகான அச்சுப் போன்ற எழுத்துக்கள் பளிச்சென கண்ணில் பட்டன.

அவளது எழுத்துக்களைப் போன்று அருந்ததியும் மிகவும் அழகானவள்தான்.

கடிதம் இரண்டு வாரங்களுக்கு முன்புதான் அருந்ததியால் எழுதப்பட்டிருந்தது.

அன்புள்ள ஆசை அத்தான், தினமும் உங்களின் நினைவுதான் என்னை வாட்டுகிறது. நான் எழுதும் கடிதங்களுக்கு ஏன் பதில் போடவில்லை. அங்கு உங்களுக்கு அவ்வளவு வேலையா. எங்களுக்காக மிகவும் கஷ்டப்பட்டு உழைக்கிறீங்களா...? இங்கு அகல்யா சுகமாக இருக்கிறாள். இப்பொழுது அவளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக பேச்சு வரத் தொடங்கிவிட்டது. எங்கள் திருமணப் படத்தில் உங்களைக் காட்டி "அப்பா... அப்பா...." என்று சொல்லிக் கொடுத்திருக்கிறன். அவளும் இப்ப அடிக்கடி அப்பா அப்பா என்று மழலைத் தமிழில் சொல்லுகிறாள்.

நீங்கள் நான்கு மாதங்களுக்கு முன்பு உண்டியலுக்கூடாக அனுப்பிய பணத்தில் இன்னும் மிச்சம் இருக்கிறது. இன்னும் இரண்டு மாதங்களுக்கு மேல் மிகுதிப் பணத்தை வைத்து சமாளிக்க முடியும். அதிகம் கஷ்டப்பட்டு வேலை செய்யாதேங்கோ. உடம்பை அதிகம் வருத்த வேண்டாம். பணத்தைவிட நீங்களும் உங்கள் ஆராக்கியமும்தான் எனக்கு முக்கியம். அப்பாவும் மருமகன் எப்படியிருக்கிறார் என்று அடிக்கடி விசாரிக்கிறார். கடிதம் எழுத நேரம் கிடைக்காவிட்டாலும் தொலைபேசியிலாவது எங்களுடன் கதைக்கலாமே. உங்கள் குரலைக் கேட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. முடியுமானால் நேரம் கிடைக்கும்போது போன் பண்ணுங்கள். நானும் உங்களோடு அருகில் இருந்திருந்தால் நேரத்துக்கு நேரம் சமைத்து உணவு பரிமாறி மகிழ்ந்திருப்பேன். என்ன செய்வது... நீங்களே சமைத்து சாப்பிட்டு வேலைக்குப் போய் இயந்திரமாக வேலை செய்து எங்களுக்காக உழைப்பதை நினைக்கும்போது ஒரு பக்கம் சந்தோஷமாகவும் மறுபக்கம் நான் உங்கள் அருகில் இல்லையே என்ற கவலையும் என்னை வாட்டுகிறது. என்னையும் அகல்யாவையும் எவ்வளவு கெதியில் கூப்பிட முடியுமோ, அவ்வளவு கெதியில் கூப்பிட்டு விடுங்கள். அத்தான்! உங்கள் அருகில் உங்களுடன் இருக்க ஆசைப்படுகிறன். எத்தனை இரவுகள்தான் உங்களை நினைத்த வண்ணம் தூங்குவது. கடிதம் கண்டதும் போன் பண்ணுங்கள். என்றும் உங்களுக்காக அன்புடன் காத்திருக்கும் அருந்ததி.

கடிதத்தை மடித்து சட்டைப் பையில் வைத்து விட்டு மீண்டும் வேலையைத் தொடங்கினான் பிரதாப். வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. அருந்ததி அவன் மனக்கண் முன் வந்தாள்.

இரண்டரை வருடங்களுக்கு முன்பு தாயகம் சென்ற போதுதான் ஒருநாள் அவளை சந்திக்கும் சந்தர்ப்பம் அவனுக்குக் கிடைத்தது.

அவனது பழைய பாடசாலை நண்பன் வாசன் நடத்திக்கொண்டிருந்த சிறிய கடையில் சாமான்கள் வாங்க அருந்ததி வந்திருந்தாள். அழகான மெல்லிய கொடி இடையாளைக் கண்டதும் பிரதாப்பின் மனம் அலைபாயத் தொடங்கியது. அவனுடைய பாடசாலை நண்பன் அவள் பெயர் அருந்ததி என்றும் போரால் பாதிக்கப்பட்டு தற்பொழுது ஒரு சிறிய தகரக் குடிசையில் தந்தையுடன் வாழ்ந்து வருவதாகவும் வரலாற்றைச் சொல்லி முடித்தான்.

பிரதாப்பை நீண்ட காலத்தின் பின் சந்தித்த பழைய பாடசாலை நண்பன் சபேசன் பிரதாப்பின் வெளிநாட்டு வாழ்க்கை பற்றி முழுமையாக அறிந்திருக்கவில்லை.

பிரதாப் நீயும் இன்னும் தனி மனிதனாக இருக்கிறாய். இந்தப் பிள்ளைக்கு வாழ்வு கொடுக்கலாமே. அழகானவள் அமைதியானவள். இங்குதான் சாமான்கள் வாங்க வருவாள். அதிகம் பேசமாட்டாள். பல கண்கள் அவளைப்பார்த்து தங்கள் மனைவியாக்க ஆசைப்படுகின்றன.

சபேசன் அப்படிச் சொன்ன பின்புதான் பிரதாப்பின் மனதிலும் புதிய எண்ணங்கள் தோன்றின. அவளைத் திருமணம் முடித்தால் என்ன என்று யோசித்தான். தான் செய்வது நியாயமான செயலா என்றுகூட அவன் நினைக்கவில்லை.

சபேசனைக் கொண்டு அருந்ததியின் தந்தையிடம் பெண் கேட்டான். வெளிநாட்டு மாப்பிள்ளைத் தாகம் இன்னும் தாயகத்தில் பல பெற்றோர்களுக்கு முழுமையாக சிந்தித்து மாப்பிள்ளை பற்றி முழுமையாக அறிந்து கொள்ளாமல் முடிவெடுக்கத் தூண்டுதலாக இருப்பதும் பிரதாப்பிற்கு தெரியும்.

சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது அதைப் பயன்படுத்த வேண்டும் என்ற நியாயமற்ற கொள்கையைக் கொண்டவன் பிரதாப்.

அருந்ததியின் தந்தையின் மகளுக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை கிடைக்கப் போகிறார் என்ற சந்தோஷமும், மகளின் வாழ்க்கை போரின் வடுக்களை மறந்து சந்தோஷமாக வாழ வழி சமைக்கும் என்ற உள் உணர்வுடனும் பிரதாப்பிற்கு அருந்ததியை கட்டிக்கொடுக்க சம்மதித்தார். தகரக் குடிசையில் வாழும் மகளுக்கு சிறந்ததொரு வாழ்க்கை காத்திருக்கிறது என்று நினைத்து நிம்மதியாகத் தூங்கினார்.

பிரதாப் இலங்கைக்கு வந்து ஒன்றரை மாத காலத்திற்குள்ளேயே வன்னியில் ஒரு சிலர் திருமணத்திற்கு வந்திருக்க அமைதியான முறையில் திருமணம் நடந்தேறியது.

பிரதாப் அருந்ததியை இரண்டு மாதங்கள் இலங்கையில் இடங்கள் காட்டுவதாகச் சொல்லி வெவ்வேறு இடங்களுக்கு கூட்டிச் சென்றான். அவளை முழுமையாக அனுபவித்து கர்ப்பவதியாக்கினான். பின்பு ஒரு மாதத்தில் விரைவில் திரும்பி வந்து கூட்டிச் செல்வதாகக் கூறி அருந்ததியை அவளது தந்தையிடம் ஒப்படைத்து விட்டு நாடு திரும்பினான்.

இப்பொழுது அவன் நாட்டுக்குப் போய் ஏறக்குறைய இரண்டரை வருடங்கள் ஆகிவிட்டன. அருந்ததியோ கையில் ஒரு பிள்ளையுடன் பிரதாப்பின் வரவுக்காக எதிர்காலக் கனவுகளுடன் காத்திருக்கிறாள்.

வேலையை முடித்துக் கொண்டு ஆறு மணிக்கு வீட்டிற்குச் சென்ற பிரதாப் உடுப்புகளைக் கழற்றி ஹாங்கரில் போட்டுவிட்டு குளித்துவிட்டு திரும்பி அறைக்குள் நுழைந்தான். அங்கே எட்டு வயது மகன் அனேஷ் சேட்டுப் பையிலிருந்து நிலத்தில் விழுந்து கிடந்த அருந்ததியின் கடிதத்தை கையில் எடுத்து வைத்துக் கொண்டு "டடி, ப்ளோர் இல் கிடந்த லெட்டர்" என்று சொல்லிக் கொண்டு கடிதத்தை பிரதாப்பிடம் நீட்ட அதை இழுத்துப் பறிப்பவன் போல் பறித்து பல சிறிய துண்டுகளாகக் கிழித்தான் பிரதாப்.

சமையலறையிலிருந்து "அப்பா பசியோட வந்திருப்பியள் சாப்பிட வாங்கோ" என்று மைதிலி அழைக்கும் குரல் கேட்க மகன் அனேஷின் கையைப் பிடித்த வண்ணம் சமையலறையை நோக்கி நடந்தான் பிரதாப்.

அங்கே தாயகத்தில் இவனது நினைவுகளுடன் அகல்யாவை தோளில் சுமந்த வண்ணம் தனது கணவன் விரைவில் வருவார் என்று எதிர்பார்த்த வண்ணம் அருந்ததி, வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு திருமணம் முடித்துக் கொடுத்த நிம்மதியுடன் அருந்ததியின் தந்தை.

பிரதாப்பிற்கோ இனித் தாயகம் பக்கம் போகும் நோக்கமில்லை. கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்துவதுதான் அவனது எண்ணம். கடைசியாக அவனுக்கு கிடைத்தது அருந்ததிதான். ■

3ம் பக்கத்தின் தொடர்ச்சி

பலாத்காரம்,' பாலியல் வல்லுறவு, பெண்கள் படுகொலை என்பது இதுதான் தமிழ் மண்ணில் முதன்முறையன்று.

1996ம் ஆண்டு செம்மணியில் சுண்டுக்குளி பாடசாலை மாணவி கிரிசாந்திக்கு (19) என்ன நடந்தது? இதில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினருக்கு இதுவரை தண்டனை வழங்கப்பட்டதா? "செம்மணி புகழ் அம்மணி" என்று ஜனாதிபதி சந்திரிகா மீது தாயக கவிஞர் புதுவை எழுதிய வரிகள் கிரிசாந்திக்கான கல்வெட்டு அன்றோ!

2009 முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின்போது பாலியல் பலாத்காரத்தின் பின் எத்தனை இசைப்பிரியாக்கள் கொல்லப்பட்டனர்.

மூன்று மாதத்துக்கு முன்னர் வன்னியில் பாலியல் வல்லுறவுக்குப் பின்னர் பெற்றோரில்லாத சிறுமி, ஒரு மனநோயாளி என்று குற்றச்சாட்டுச் சொல்லி படையினர் மூடி மறைக்கவில்லையா?

இத்தனைக்கும் பின்னர் வித்தியா படுகொலையில் அரச படையினர் மேற்கொள்ளும் விசாரணையை மக்கள் நம்பத் தயாரில்லை என்று எண்ணுவதில் என்ன தவறு?

சட்டத்தரணிகள் எவரும் கைதானவர்களுக்காக ஆஜராகக் கூடாது என்ற மக்களின் கோரிக்கையை மீறி, கொழும்பிலிருந்து யாழ் வந்த சட்டப்பீடாதிபதி ஒருவர் மீது மக்கள் கொதித்தெழுந்ததில் நியாயம் இல்லாமலில்லை.

இப்போது இக்கொலை விசாரணையை திசை திருப்பும் முயற்சிகளும் இடம்பெறுகின்றன.

உணர்வுபூர்வமாகக் கொதித்தெழுந்த மக்களின் ஆர்ப்பாட்டத்தில் நுழைந்து வன்செயல்களில் ஈடுபட்டு எல்லாவற்றையும் குழப்பியடித்த குழுவினரை மக்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

"யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் ஆர்ப்பாட்டம் புலிகளின் பாணியிலானது" என்று மஹிந்த இராஜபக்ச கிளப்பிய இனவாத முயற்சிக்கு, இலங்கையின் நீதியமைச்சர் விஜேதாச பதிலடி கொடுத்துள்ளார்.

மகளிர் - சிறுவர் விவகார அமைச்சர் ரோஸி சேனநாயக்காவின் ஏற்பாட்டில் சகல இன மக்களும் பங்கேற்ற ஒரு அஞ்சலி நிகழ்வு கடந்த மாதம் 24ம் திகதி கொழும்பில் நடைபெற்றது. இவ்வகையான ஒரு விஷயத்தில் இலங்கை அரசே முன்னின்று நடத்திய முதலாவது அஞ்சலி நிகழ்ச்சி இது.

வித்தியாவின் கொலைக்கு விரைவில் நீதி நிலைநாட்டப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார். இதனை நிரூபிப்பதுபோல யாழ்ப்பாணத்தின் சில பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கைதான ஒன்பது பேரும் யாழ்ப்பாண சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். நீதி கேட்டு ஆர்ப்பாட்டம் செய்த 127 பேர் அனுராதபுரம் சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இனவாத அரசாங்கத்திலும் அவர்களின் ஏவற்படைகளான ஆயுத தரப்பிலும் முற்றாக நம்பிக்கை இழந்துள்ள தமிழ் மக்கள் அவர்களிடமே வித்தியாவின் படுகொலைக்கு நீதியை எதிர்பார்க்கலாமா?

"தாமதிக்கப்படும் நீதி, மறுக்கப்படும் நீதி" எனப்படுவது வித்தியாவின் படுகொலையிலும் நிரூபிக்கப்படுமா?

அப்படியாயின், வித்தியா... ஒரு தொடர்கதைதானா?

வாழும்போதே வாழ்த்துவோம்

சுவிசில் சிவராம் நினைவு விருது விழா

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க சுவிஸ் கிளை, சுவிற்சர்லாந்து சிவராம் நினைவுப் பணிமன்றத்துடன் இணைந்து ஊடகர்களுக்கான விருது விழா ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது. அமரர் மாமனிதர் சிவராம் அவர்களின் பத்தாவது நினைவு தினத்தை இட்டு சிவராம் நினைவு விருது விழா என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு யூன் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுவிஸ் தலைநகர் பெர்லினில் நடைபெறும்.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் ஊடகக் குழுமத்தின் தலைவருமான ஈ.சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக அமரர் சிவராம் அவர்களின் பாரியார் யோகரஞ்சினி சிவராம் கலந்துகொள்வார்.

விருது விழாவிலே சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசன் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவார். எழுத்து, வானொலி மற்றும் காணொளித் துறைகளில் சாதனை படைத்த 9 பேர் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவர். சிறப்பு விருதுகளை ஊடக சாதனையாளர்களான எஸ்.திருச்செல்வம், ஈ.கே.ராஜகோபால், ஞா.குகநாதன், பி.விக்னேஸ்வரன், விமல் சொக்கநாதன், வி.என்.மதியழகன், இளையபாரதி, இளையதம்பி தயானந்தா, பூபாலரத்தினம் சீவகன் ஆகியோர் பெற்றுக்கொள்வர்.

சமூகத்திற்கும், தேசியத்துக்கும் உழைத்த ஊடகவியலாளர்கள் வாழும்போதே கௌரவிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்விலே சகோதர மொழி ஊடகவியலாளர்கள் மூவரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளனர். தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்காகவும், அரசியல் உரிமைகளுக்காகவும் அயராது உழைக்கும் சிரேஷ்ட ஊடகவியலாளர்களான சுனந்த தேஷப்பிரிய, பாஷண அபேவர்தன மற்றும் சந்தன கீர்த்தி பண்டார ஆகியோர் இந்தக் கௌரவத்தைப் பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

முதலாம் பக்கத்தின் தொடர்ச்சி

நீதிமன்றின் மீது தாக்குதல் நடந்த அன்று, ஹெல்மட் அணிந்தவாறு கைகளில் பொல்லுகள், தடிகளோடு வன்முறைக் கும்பல் ஒன்று ஊர்வலமாக சென்றுள்ளது. அவர்களுக்கு போலீசும் பாதுகாப்பு வழங்கியது

ஆகவே வன்முறையற்ற வகையில் மக்கள் மேற்கொண்ட போராட்டங்களை திசை திருப்ப அல்லது முறியடிக்க இக்கும்பலை இராணுவப் புலனாய்வாளர்களே பயன்படுத்தி இருக்க வேண்டும்.

யாழ்.குடாவை ஒரு வன்முறைப் பிரதேசமாகக் காட்டுவதன் மூலம், இராணுவத்தின் பிரசன்னத்தை நியாயப்படுத்தும் நோக்கமும் இதனுள் மறைந்து கிடக்கிறது.

ஆகவே இச் சமூக விரோத கும்பல்களின் அடாவடித்தனம் நிறுத்தப்பட வேண்டுமாயின், குறைந்த பட்சம் புலனாய்வாளர்களின் தலையீட்ற சிவில் நிர்வாகம் ஏற்பட வேண்டும். முதலில் வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்.

செவ்வாயன்று யாழ்.நகருக்கு விஜயம் செய்த மைத்திரிபால சிறிசேன, கொலையாளிகளைத் தண்டிப்போம் என்று வாக்குறுதி அளித்திருப்பதன் மூலம் இக்கொலைகள் நிறுத்தப்படப் போவதில்லை.

நோயின் மூலத்தை அறிந்து அதற்கு சத்திர சிகிச்சை செய்வதுதான் ஒரே வழி.

இன்னமும் மகிந்தர் மற்றும் கோத்தபாயா கும்பலின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் இராணுவ புலனாய்வுப் பிரிவினர், அதற்கு இடம் கொடுப்பார்களா?. ■

CROYDON PERFORMING ARTS FESTIVAL

முதல் பரிசு சகி பத்மநாதன்

முதல் பரிசு சாரங்கி மனோகரசிங்கம்

இரண்டாம் பரிசு கருதி கண்ணன்

குழு நடனத்தில் முதல் பரிசு

ஆடல், பாடல், நாடகம், பேச்சு என்ற பல்வேறு அம்சங்களைக் கொண்டு ஆண்டுதோறும் நடக்கும் CROYDON PERFORMING ARTS FESTIVAL நிகழ்வில் பங்கு பற்றிய லண்டன் பிரபல நடன நிறுவனமான "நாட்டியாலயா" ராகினி ராஜகோபால், ஷர்மினி கண்ணன் ஆகியோரின் மாணவிகள் இவ்வாண்டு நடனப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

"கம்யூனிஸ்ட்" வைத்தி நூற்றாண்டுவிழா

யாழ்ப்பாணத்தில் 'வைத்தி' என்றால், கல்விமானான கம்யூனிஸ்ட் அ.வைத்திலிங்கத் தைத்தான் குறிக்கும். பீட்டர் கௌமன், எஸ்.ஏ.விக்கிரமசிங்கா போன்றவர்களோடு கைகோர்த்து செயல்பட்ட அவர் கடைசி வரை இடதுசாரிக் கொள்கைகளோடு வாழ்ந்து, மறைந்தார்.

வட்டுக் கோட்டை, சுராலியில் ஒரு நிலப்பிரபுத்துவ குடும்பத்தில் 1915 இல் பிறந்த இவர் புலமைப் பரிசில் பெற்று லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கணிதப் பட்டதாரியாகப் பட்டம் பெற்றார்.

வடக்கு கிழக்கு மாகாணம் தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாக வாழும் பிரதேசம் என்பதை வலியுறுத்தினார். யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் வரவேண்டும் என்பதற்காகப் பெரும்பாடுபட்டார்.

1950களில் யாழ், இந்துக் கல்லூரி கணித ஆசிரியராக கடமை புரிந்தார். கணிதத் துறையில் பல மாணவர்கள் சிறப்புப் பட்டம் பெற உதவினார். பின், உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபராகி, இக்கல்லூரி முன்னேற்றத்துக்காக உழைத்தார்.

சிறந்த கல்விமான், நேர்மையான தொழிற்சங்கவாதி, பொதுவுடமைத் தத்துவங்களை உணர்ந்து வாழ்ந்த அரசியல் ஞானி, சிறந்த அதிபர், நிர்வாகி என்ற பல சிறப்புகளைப் பெற்ற இவரின் நூறாவது பிறந்த நாளை 12.9.2015 அன்று லண்டனில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள், உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள், முற்போக்கு எண்ணம் கொண்டவர்களின் கூட்டு முயற்சியாக இந்த ஏற்பாடுகள் வெற்றி பெற உதவுமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

ரீ.குகதாஸ் : 020 8868 5588
என்.சச்சிதானந்தன் : 07788 196426
(e-mail: nsatchi@hotmail.com)
என்.ஜெயபாலன் : 020 842 29183

லண்டனில் பல்லாயிர மக்கள் எழுச்சி!

முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் ஆறாம் ஆண்டு !!

பிரித்தானிய தமிழர் பேரவையின் ஒருங்கமைப்பில் நடைபெற்ற மே18 நினைவேந்தல் நிகழ்வு 18.05.2015 அன்று நண்பகல் 1 மணியளவில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனுக்கு மகஜர் கையளிப்போடு ஆரம்பித்தது. இலங்கையில் காணாமல் போனவர்கள் கண்டறியப்பட வேண்டும், இனப்படுகொலைக்கு நீதி வழங்கப்பட வேண்டும், அங்கு நடந்தவை தொடர்பான சர்வதேச விசாரணை துரிதப்படுத்தப்பட வேண்டும் போன்ற 11 அம்சங்கள் அடங்கிய கோரிக்கை மகஜர் பிரித்தானிய தமிழர் பேரவை சார்பாக செயல்பாட்டாளர்கள் திருக்குமார், மனோகரன் ஜெயபாலன், குணசேகரன், மதனரூபன், நடனசபாபதி சுகந்தன் ஆகியோர்களால் கையளிக்கப்பட்டது.

அதன்பின் எம்பாக்மென் தொடருந்து நிலையத்திற்கு முன்பாக ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடினர். பிற்பகல் 3 மணியளவில் அங்கிருந்து பேரணி ஆரம்பமானது. இப்பேரணியினை முன்னாள் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரும், ஈழத் தமிழர்களுக்காக இன்று வரையும் பிரித்தானியாவில் குரல் கொடுத்து வருபவருமான மதிப்பிற்குரிய சைமன் ஹீத் ஆரம்பித்து வைத்தார்.

அங்கிருந்து பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனின் வாசஸ்தலம் அமைந்துள்ள நம்பர் 10 டவுனிங் வீதிக்கு ஊர்வலமாக மக்கள் சென்றனர். ஈழத்தில் நடந்த இனப்படுகொலையை வெளிப்படுத்தும் விதமான நடன வடிவிலான காட்சியமைப்புகள், பதாதைகள், இலங்கை அரசினால் காணாமல் போனவர்கள் எங்கே என்ற தொனியிலான கட் அவுட்கள், ஈழத்தில் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு நீதி கிடைக்க வேண்டும், இலங்கையினை சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் போன்ற வாசகங்களைத் தாங்கிய சுலோக அட்டைகளினையும் மக்கள் ஏந்தியிருந்தனர். பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோசங்களையும் எழுப்பியவாறு பேரணி சீராக பிரதான நிகழ்வு நடைபெறும் நம்பர் 10 டவுனிங் வீதியில் அமைந்திருந்த மேடைக்கு வந்து சேர்ந்தது.

பிரித்தானிய தமிழர் பேரவையின் தொண்டர்களும், பிரித்தானிய காவல் துறையினரும் இணைந்து பேரணியினை ஒழுங்கு குலையாதவாறு மிகவும் நேர்த்தியாக வழிநடத்தினர்.

பிரதான நிகழ்வுகள் மாலை 5 மணியளவில் போரில் உயிர் நீத்த உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்தலுடன் ஆரம்பமானது, அதனைத் தொடர்ந்து ஈழச்சுடரினை இறுதி யுத்தம் நடந்துகொண்டிருந்த நெருக்கடியான தருணங்களிலும் இறுதிவரை ஈழத்தில் மருத்துவப் பணியாற்றிய வைத்திய கலாநிதி வரதராஜா கள மருத்துவப்போராளி வாமன் மற்றும் உயர்ச்சி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதேவேளை தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும், அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட மண்

அவர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படவேண்டும், உலக நீதிக்கு புறம்பான வகையில் தமிழினம் வஞ்சிக்கப்பட்டுள்ளதை நாம் கண்கூடாக காண்கின்றோம், இலங்கையில் அவர்களுக்கு நீதி மறுக்கப்படுகின்றது,போர்க்காலத்தில் காணாமல் போகடிக்கப்பட்டவர்களின் தற்போதைய நிலை என்ன? என்பது போன்ற கருத்துக்களை இவ் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களும், ஏனைய முக்கியஸ்தர்களும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் பிரித்தானியாவின் Croydon Central பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ Gavin Barwel, Mitcham and Morden பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ Siobhain MC Donagh, Carshalton and Wallington பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ.Richard Harrington, Ilford North பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ. Wes Streeting Enfield North பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ Joan Ryan, Bassetlaw பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ James Berry மற்றும் கௌரவ Roger Evans (London Assembly) ஆகியோர் கலந்து சிறப்பித்ததோடு தம் கருத்துக்களையும் மேலான ஆதரவினையும் வழங்கினர். Lee Scott (Ambassador for justice of Tamils) இன் பதிவு செய்யப்பட்ட உரை போடப்பட்டது.

அத்துடன்,மே18, 2009ல் இலங்கையில் தமிழர்கள் மீது நடாத்தப்பட்ட இன அழிப்பு தொடர்பான

விழிப்புணர்வினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதமாகவும் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்ற விடயத்தை வழியுறுத்தும் விதமாகவும் இலட்சனை பிரித்தானிய தமிழர் பேரவையினால் அறிமுகப்படுத்தப்பட்டது. அவற்றை மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்டுவைத்தனர். இதன் மூலம் ஈழத்தில் எம் இனம் பட்ட அவலத்தினை அனைவரும் அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுவதோடு நீதிக்கான பயணத்தில் நாம் அனைவரும் ஒன்றிணையும் வாய்ப்பினையும் வழங்கும். மே மாதம் முடியும் வரை நாம் எமது அங்கிகளில் அணிய வேண்டும்.

பிரித்தானிய தமிழர் பேரவை செயல் வடிவம் கொடுத்த 'ARE THEY ALIVE' எனும் போரில் காணாமல் போகடிக்கப்பட்டவர்களை தேடியறிதல் மற்றும் அவர்களின் இன்றைய நிலை என்ன என்பதை வெளிப்படுத்தக் கோரும் செயல்திட்டத்தின். அவசியத் தன்மை பற்றியும் அந்த செயல்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தி அதன் மூலம் காணாமல் போக செய்யப்பட்டவர்கள் விடயத்தில் ஒரு ஆக்கபூர்வமான முடிவினை வழங்குமாறு இலங்கையை நிர்ப்பந்திக்கமுடியும் என்றும் அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வினை பெற்றுக்கொடுக்க "ARE THEY ALIVE" செயல்திட்டத்தை மக்கள் ஆதரித்து அச்செயல்திட்டத்தோடு கரம் கோர்த்து எதிர்கால நீதிகேள் செயற்பாடுகளை வலுப்படுத்தவேண்டும் என்று பிரித்தானியாவின் பரிஸ்டரும் பெண்கள் நலன் தொடர்பான சமூக செயற்பாட்டாளருமான மதிப்புக்குறிய திருமதி மார்கரெட் ஓவன் தனது உரையில் வலியுறுத்தினார். இச் செயல் திட்டத்தினை தமிழீழ விடுதலை புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராகவிருந்த திரு.நடேசன் அவர்களின் மகன் பிரபாத் ஆரம்பித்து வைத்தார்.

மாறி வரும் உலக ஒழுங்கில் தமிழ் மக்கள் போராட்டம் அன்னியப்படுத்தப்படாமல் முன்னேறிச் செல்லும் மூலோபாயத்தினை வலியுறுத்தி பிரித்தானிய தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் ரவி குமார் உரையாற்றினார்.

தொடர்ச்சியாக எம் அவலங்களை, எம் வலிகளை எடுத்துச் சொல்லும் விதமான நடனங்களும் அரங்க நிகழ்வுகளும் இடம்பெற்றன. இரவு 8 மணியளவில் உணர்வுபூர்வமான உறுதியேற்பு வைபவத்தோடு நிகழ்வு நிறைவடைந்தது.

வேலை நாளாக இருந்த போதும் அவற்றை புறம்தள்ளி எம் தேசத்தின் விடிவில் பற்று வைத்துள்ள ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றியிருந்தனர். ■

உருத்திரபுரம் கோகிலாம்பாள் கொலை வழக்கு

ப.வை.ஜெயசீலன்

சில சங்கதிகள் கால ஓட்டத்திலும் மறையாத வலுவைப் பெற்று விடுகின்றன. அவற்றில் மனதை விட்டு அகலாத முக்கியமான ஒன்று-

பண்பாட்டுக்குப் பெயர் போன யாழ்ப்பாணத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கோயில் ஐயர் கொலை வழக்கு மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. உருத்திரபுரம் கோகிலாம்பாள் எனப் பெயர் பெற்ற வழக்கு.

அந்த நாட்களில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கிய முதலாவது, தமிழ் தினசரியான 'ஈழநாடு' கோகிலாம்பாள் கொலை வழக்கு மூலம் மேலும் வட மாகாண மக்கள் மத்தியில் பிரபலமானதை நினைத்துப் பார்க்கிறேன். யாழ் உயர் நீதிமன்றத்தில் நடந்த இந்தக் கொலை வழக்கு விசாரணைகளை வாசித்தறிவதற்காக மறு நாள் காலையிலேயே 'ஈழ நாடு' பத்திரிகையைத் தேடி வாங்கினார்கள்.

உருத்திரபுரம் பிள்ளையார் கோயில் ஐயரான காசிலிங்க சர்மாவைத் தன் கள்ளக் காதலன் துணையோடு அவர் மனைவி கோகிலாம்பாள் கொலை செய்த வழக்குத்தான் அது. அந்தக் கோயில் இன்றும் பெருவளர்ச்சி பெற்று இயங்குகிறது. அந்த ஐயர் குடும்பத்துக்கு வழங்கப்பட்ட குடியேற்ற திட்ட வீடு கைமாறி உருமாறி இருக்கிறது. ஆனாலும் அந்த கதை இன்றும் எங்கும் பேசப்படும் ஒன்றாக இருக்கிறது. உருத்திரபுரம் திருமண வழிமூலம் எனக்கு சொந்தமான ஊரும் கூட!

உருத்திரபுரம் நெல் விவசாய குடியேற்ற திட்டம், 1948ம் ஆண்டு இரணை மடுக்குளம் நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் காடு அழித்து களனி கண்ட ஊர். மூன்று ஏக்கர் வீடு, ஐந்து ஏக்கர் வயல் நிலம் என பத்தாம் வாய்க்காலை மையப்படுத்தி உதயமான ஊர். நெடுந்தீவு, அனலை தீவு போன்ற யாழ்குடா நாட்டை ஒட்டிய பத்துத் தீவையும் சேர்ந்தவர்களே இங்கு குடியேற்றப்பட்டவர்களில் பெரும்பான்மையினர். இவர்களில் பொதுசேவை ஆர்வம் கொண்ட குட்டியார் பசுபதி, ச.மு. மார்கண்டர் என சிலர் ஊருக்கு கோயில் வேண்டும் என நாட்டம் கொண்டனர். ஆலயத்துக்கு நிலமும் ஐயருக்கும் ஒரு குடியேற்றர்காணியும் பெற்றுக்கொண்டனர். நெடுந்தீவில் மதிப்புக்குரிய பூசகராக இருந்த மாட்டு ஐயரின் மகன் காசிலிங்க சர்மாவை கோயில் நிலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பிள்ளையார் கோயில் பூசகர் ஆக்கினர். மாட்டு ஐயரும் மகனுக்கு துணையாக வந்து போவார். கறுத்த பருத்த தோற்றமும் மாட்டு வண்டிப் பயணிப்பும் மக்கள் மத்தியில் அவரை அன்பான "மாட்டு ஐயர்" என்ற பெயருக்கு உரியவராக்கிவிட்டன. காசிலிங்க சர்மா இந்தியாவுக்கு குருக்கள் படிப்புக்கு போனார். படிப்பு முடிய தமிழ் நாட்டை சேர்ந்த கோகிலாம்பாளையும் திருமணம் செய்து உருத்திரபுரத்துக்கு கூட்டி வந்தார். கோகிலாம்பாள் வெள்ளை நிறமும் பருமனான தோற்றமும் நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டுமாக ஐயரின் அழகான, அன்பான மனைவியாக ஊரார்ின் சுக துக்கங்களில் பங்கேற்கும் நல்ல அம்மாவாகத்தான் இருந்தார். இல்லறம் நல்லறமாக தொடர்ந்தது. மூத்த பிள்ளை பெண், பின் தொடராக ஆண் என்று மூன்று பிள்ளைகள். அன்பான அந்த குடும்பத்தில் அதன்பின்தான் தூறாவளி சுழன்று வீசியது.

ஐயருக்கு சொந்தமான ஐந்து ஏக்கர் வயற்காணி மற்றும் வீட்டுக்காணிக்குள் கமச்செய்கைக்கு உதவியாக வேலுப்பிள்ளை, பசுபதி என்ற இருவர் நிலையான வேலையாள் ஆனார்கள். இதில் வேலுப்பிள்ளை தனி ஆள். ஐயர் வீட்டு வளவில் ஒரு பகுதி கொட்டிலில்தான் அவர் குடியிருப்பு. வேலுப்பிள்ளைக்கும் அம்மா கோகிலாம்பாளுக்கும் 'தொடர்பு' என்ற கதை எழும்ப, உடனே உறவினர்கள் வேலுப்பிள்ளைக்கு வட்டக்கச்சி பெண்ணை பேசி திருணம் செய்து வைத்தார்கள். ஐயர் வளவில்தான் அவர்களின் இருப்பு. அடிக்கடி சண்டை. புதுப் பொண்டாட்டி வேலுப்பிள்ளையின் அடி தாங்க முடியாமல் பிறந்த வீடே தஞ்சமாகி விட்டாள்.

ஒருநாள் காலை கோயில் ஐயரை காணவில்லை. விறாந்தையை கழுவிக் கொண்டிருந்த தாயிடம் 12 வயதான மூத்த மகள், "எங்கே அப்பா?" என கேட்டுள்ளாள். அவர் அதிகாலை 4 மணி குறிகட்டுவான் பஸ்சில் ஊருக்கு போயுள்ளார் என்பது தாயின் பதில். ஊர் என்பது நெடுந்தீவு. 2, 3 நாட்களில் ஐயர் ஊருக்கும் வரவில்லை என்ற செய்தி வந்தது. ஒரே குழப்பம். ஊரே ஐயரை தேடியது. பொலீசிலும் பதிவானது. கிட்டதட்ட ஒரு மாதம் ஆகிவிட்டது. தகப்பன் 'மாட்டு ஐயர்' ஊராலே வந்தார். பிள்ளையார் தன் கனவில் வந்து 'மகன் எருவுக்குள் கிடக்கிறான்' என்று சொன்னதாக கோயிலை சார்ந்தவர்களுக்கு சொன்னார். விவசாய ஊர் என்பதால் ஒவ்வொரு வீட்டிலும் மாட்டுப் பட்டி. அவற்றின் சாணம் வளவில் ஒரு பக்கம் தினமும் சேகரித்து கொட்டப்பட்டு பெரும் ஒரு கும்பியாக இருக்கும்.

மாட்டு ஐயரோடு வந்த ஊர்க்காரர்கள் எருவைப் பிரித்தார்கள். உள்ளே சாக்கில் கட்டப்பட்ட நிலையில் அழுகி ஒழுகியபடி ஐயரின் சடலம் வெளிப்பட்டது. ஊராருக்கு சந்தேகம். வேலுப்பிள்ளையை காணவில்லை. பசுபதி பிடிபட்டான். ஊரார்ின் தர்ம அடி தாங்காமல் பசுபதி முழு உண்மையையும் கக்கிவிட்டான். கள்ளக்காதல் கசிய ஐயரும் மனைவியை கண்டித்திருக்கிறார். ஐயரை முடித்து விட்டால் வயலுக்கும், அம்மா குடும்பத்துக்கும் உதவி என்ற பெயரில் காலத்தை ஓட்டலாம் என கோகிலாம்பாளும், வேலுப்பிள்ளையும் திட்டம் போட்டார்கள். பசுபதியும் உதவியாக கூட்டு சேர்ந்தான். ஐயர் வெளி விறாந்தை கட்டிலில் ஆழ்ந்த நித்திரை. அம்மா விளக்கு பிடிக்க, பசுபதி ஆள் திமிறாமல் கைகளை இறுக்கி மடக்க, வேலுப்பிள்ளை கொடுவாக்கத்தியால் ஒரு வெட்டுவிட, ஐயர் கழுத்து நரம்பு வெட்டுண்டு சாய்ந்தார்.

வீட்டுக்கு முன்புறம் பிரதான வீதிக்கு அப்பால் எள்ளுக்காடு என்ற பற்றை பிரதேசம். அதில் முன்பாகவே ஐயரை தாழ்க்க கிடங்கு வெட்டி இருந்தார்கள். பிணத்தை கிடங்குக்கு கொண்டு செல்ல பல முறை முயன்றார்கள். மாட்டு வண்டியில் வருவதுபோல, ஒரு கிழவி பொல்லுடன் வீதியில் நடந்து வருவதுபோல ஒவ்வொரு முறையும் தடைகள். அதிகாலை ஆகிவிட்டதால் எருவுக்குள் தாழ்க்க முடிவு செய்தார்கள்.

கதையை கேட்டு ஊரே கொதித்தது. "ஐயரை எருவுக்குள்ளாலை எடுத்ததாம்" என்ற கதை பரவ, உருத்திரம் பள்ளியும், விட்டுவிட ஒரே சனக் கூட்டம். அங்கும்,. இங்கும் தேடி வேலுப்பிள்ளையையும் அடித்து இழுத்து வந்தார்கள். பொலீஸ் சார்ஜன்ட் ஆறு அடி பொன்னுத்துரை தலைமையில் உடன் விசாரணை முடிந்தது. அழுகி ஒழுகிய ஐயரின் உடலை வேலுப்பிள்ளை தலையில் தூக்கி வந்து வீதியில் நின்ற வண்டியில் ஏற்றினான். அந்த இரண்டு மாட்டு வண்டியை ஒரு புறம் வேலுப்பிள்ளையும் மறுபுறம் பசுபதியும் மாடுகளாக இழுக்க ஐயரின் இறதி

ஊர்வலம் உருத்திரபுரம் மயானத்துக்கு நகர்ந்தது.

நீதிமன்றத்தில் கொலை வழக்கு பரபரப்பாக தொடர்ந்தது. பசுபதி அரசதரப்பு சாட்சியாக மாற, மூத்த மகள் தாயார், இரத்தத்தை கழுவியது உட்பட்ட சங்கதிகளை சொல்ல குற்றம் நிரூபணமானது. கோகிலாம்பாளுக்கும் வேலுப்பிள்ளைக்கும் ஆயுள் சிறைத்தண்டனை, பசுபதிக்கும் ஐந்து ஆண்டு சிறைத்தண்டனை.

விடுமுறை நாட்கள் என்று கழிவுபோக வேலுப்பிள்ளை விடுதலையாகி ஒருவரின் கண்ணிலும்படாது வாழ்ந்து காலமாகிவிட்டார். சுமார் பத்து ஆண்டுகளில் கோகிலாம்பாளுக்கும் விடுதலை. கோகிலாம்பாளுக்கு என்று இலங்கையில் உறவுகளே இல்லை. இந்தியா தொடர்புகளும் திருமணத்துடன் மறந்து போய்விட்டது. "அவளுக்கு ஆதரவுக்கு யாரும் இல்லையே" என்று வருத்தப்பட்டவர்; தன் மகனையே அவளின் காமவெறிக்கு பலி கொடுத்த மாட்டு ஐயர்தான். ஊரார்ின் எதிர்ப்பையும் மீறி தன் தள்ளாத வயதில் மருமகளை அழைத்து வந்து நெடுந்தீவில் தன்னுடன் இருத்தி பராமரித்தார். கட்டிய கணவனையே கூட்டாக வெட்டிக் கொன்ற அந்தப் பெண்ணுக்கு மன்னிப்பு தந்தது மாமன் 'மாட்டு' ஐயரின் மனம். இதைத்தான் 'மனிதம்' என்பதோ? ■

ச.சிறீரங்கன்

சிதம்பரம் ஆலய குடமுழுக்கு

காணக் கண் கோடி வேண்டும்!

எமிரேட்ஸ் அடுக்குமாடி விமானம் ஊடாக, இந்தியா போவதற்காக ஏறி அமர்ந்தோம். அருகே இருந்தவர் கையில் 'சிவசங்கரி'யின் புத்தகம், 'சிவசங்கரியின் எழுத்துக்கள் எனக்கு மிகவும் பிடிக்கும்...!' என்று தொடங்கி, என்னையும் எனது மனைவியையும் அறிமுகம் செய்தேன். எனது பெயரைக் கூறியவுடன், 'எனது பெயர் நடராசன். சொந்த ஊர் சிதம்பரம். 28 வருடங்களுக்குப்பின் நடைபெறும் கும்பாபிஷேகம் காண்பதே எனது பயணத்தின் நோக்கம். லண்டனில் I.T ஆலோசகராகத் தொழில் செய்கிறேன்...' என்று அவர் கூறியதுமே, மிக ஆச்சரியப்பட்டேன். கும்பிடப்போகவிருந்த, சிதம்பர நடராசப் பெருமானே அருகில் வந்து இருப்பதாக, மட்டற்ற மகிழ்வு. 'நாங்களும் அதே நோக்கத்திற்காகவே, இந்தப்பயணம்...' என்றதும், அவரும் ஆச்சரியப்பட்டார். அதுமட்டுமல்ல, மேலும் இன்னொரு ஆச்சரியம் எமக்கு ஏற்பட்டது.

'குடமுழுக்கைக் காண பத்து லட்சம் பேர்கள்வரை வரஷள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. அங்கே ஹோட்டல், இடவசதிகள் மிக நெருக்கடி. இந்தாங்க இதை வைத்திருங்கள்' என்று தனது வீட்டு முகவரி, மொபைல், வீட்டு தொலைபேசி எண்கள் எல்லா விபரங்களையும் எழுதித்தந்தார். விமானம் துபாயைச் சேர்ந்ததும், 'மறக்க வேண்டாம். தொடர்பு கொள்ளுங்கள்...' என்று கூறிவிட்டு, 'இந்தியா நோக்கிய அடுத்த விமானத்தில் பார்க்கலாம்' என்று கூறினார்.

காலை தமிழ்நாட்டைச் சேரும்வரை, அந்த அற்புத மனிதரின் உரையாடல், மனதில் சிறகடித்துக்கொண்டேயிருந்தது. சென்னையை அடைந்ததும், வாசலில் நண்பர் சிவானந்தசோதி, வண்டியுடன் காத்திருந்தார். கும்பாபிடேகத்துக்கு நான்கு நாட்கள் முன்னதாகவே சிதம்பரம் சென்று, காலையும், மாலையும் நடைபெற்ற யாகங்கள், கிரியைகளைக் கண்டுகளிப்படைந்தோம். தேவார பாராயணம் இசைப்பவர்கள் ஒருபக்கம், நால்வகை வேதங்களைக் கூறி, ஒலியெழுப்பிய தில்லை வாழ் அந்தணர்களாகிய தீட்சிதர்கள் ஒரு பக்கம், மங்கள இசை வழங்கிய வித்துவான்கள் ஒருபக்கம், எப்படியாவது தரிசித்து விடலாம் என்று யாகசாலைகளைக் குழுமியிருந்த பக்தர்கள் ஒருபக்கம் என்று நோக்கியபோது, 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால், சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒரு பால்...' என்ற திருவாசக அடிகள்தான் நினைவுக்கு வந்தது. ஒவ்வொரு கிரியைகள் முற்றுப்பெறும்போதும், நடைபெற்ற 'பூர்ண ஆகுர்தி' கண்கொள்ளாக் காட்சி! அது ஓர் அற்புதக்காட்சி!! 38 யாககுண்டலங்கள். கொழுந்துவிட்டெரிந்த தீச்சுவாலைக் குண்டலங்களில், அடியவர்கள் எடுத்து வந்த பொருட்களை வாங்கி யாக குண்டலங்களில் தீட்சிதர்கள் சேர்ப்பித்தனர். யாகசாலையைச் சூழ்ந்துகொண்டு, நூற்றுக்கணக்கான தீட்சிதர்கள் நால் வேதங்களையும் கூறிக்கொண்டிருந்தனர்.

சிதம்பரத்தை தரிசிக்க வந்த லண்டன் அடியார்களுடன் கட்டுரையாளர்

ஒவ்வொரு நாள் யாகங்கள் நிறைவுறும்போது, ஒவ்வொரு கலைஞர்கள், தத்தம் இசை மூலமாக நாதம் எழுப்பினர். அவர்களில் ஒருவர் உமையாள்புரம் சிவராமன். தனது 80 வயதிலும், வாலிப மிடுக்குடன் நிமிர்ந்திருந்து, மிருதங்கம் இசைத்தார்.

ஒவ்வொரு நாளும் கன்னிப்பெண்கள் பூசை, சுமங்கலிப் பூசை, கோமாதா பூசை என்று பலதரப்பட்ட பூசைகள், யாகசாலையின் பிரதானவாசலில் நடைபெற்றன. இறுதிப்பூசைக்கு முன்பதாக ஓதுவார்கள் பண்இசை பொழிந்தனர். அடியார்கள் மெய்மறந்து சுவைத்தனர். இசையால் வசமாகா இதயம் ஏது?

குடமுழுக்குத் தினமான முதலாம் திகதியன்று அடியவர்கள் கூட்டம், பெருக்கெடும் ஆறாகக் கூடிக்கொண்டேயிருந்தது. பலவருடங்களின் பின்னர் நடைபெறும் கும்பாபிசேகத்தைப் பார்க்க, உள்நுழையும் பக்தர்களுக்கு வாசல் தடுப்புகளைப்போட்டு, பொலிசார் பாதுகாப்பு வழங்கிக் கொண்டேயிருந்தனர்.

யாகத்தில் பங்குகொள்ளும் பாக்கியம் பெற்ற பக்த கோடிகளில் ஒரு பகுதி

ஒவ்வொரு பக்தர்களின் 'பாஸ்' (Pass) பொலிசாரால் சோதிக்கப்பட்டது. பிரதான வாசல்களில் ஒன்றான கிழக்கின் உட்புறம் நின்று, இதனை அடியேன் அவதானித்துக்கொண்டிருந்தேன். சில பொலிசாரின் நடவடிக்கை அருவருப்பாகக்கூட இருந்தது. முதியோரைத்தள்ளிவிட்டது, ஏற்கக்கூடியதல்ல.

நாற்கோபுர, நான்கு வாசல்கள் வழியாகவும் உள்ளேவர அனுமதிக்கப்பட்டனர். நான்கு நாயன்மார்களும் வந்து வழிபட்டதலமாகச் சிதம்பரம் சிறப்புற்று விளங்குகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வோர் வாசலாக வந்து, நடராஜப்பெருமானை வணங்கிச் சென்றுள்ளனர். பிரதான வாசலான கிழக்குவாசல் ஊடாக, மாணிக்கவாசகர் உள்ளே வந்ததாக, கிழக்குக் கோபுரவாசலில் பொறிக்கப்பட்டிருக்கிறது. சைவசமயத்தோர் வாழ்க்கையில், ஓர்முறையாவது சிதம்பரத்தை தரிசிக்க வேண்டும். காரணம் **தரிசிக்க முத்திசிதம்பரம்** என்று பலசமயச்சான்றுகள் உள்ளன.

திருவாரூரில் பிறக்க முத்தி!
காசியில் இறக்க முத்தி!
திருவண்ணாமலையை நினைக்க முத்தி!
சிதம்பரம் தரிசிக்க முத்தி!

எமது நாவலர் இங்கேயிருந்து பலபணிகளை ஆற்றியிருக்கிறார். பரம்பொருளாகியசிதம்பரமூர்த்தியின் இயக்கம், இதயத்தாமரையாகிய நடராஜப்பெருமானின் தாண்டவத்தில் அமைந்திருக்கிறது. முழு உலகமே சிதம்பரம் நடராஜனின் தாண்டவத்தில் அடக்கம் பெறுகிறது. 'ஏறத்தாழ 40 ஏக்கர் நிலப்பரப்பில் கோயில் கொண்ட தில்லைக்கூத்தனை வணங்குகிறோம், அவனின் குடமுழுக்கைப் பார்க்கிறோம்' என்று உணர்வுபூர்வயப்படுகிறோம்.

அதிகாலை, சரியாக 7.45 மணி அளவில் நான்கு கோபுரங்களுக்கும் குடமுழுக்கு நடைபெற்றது. வசதியான இடத்திலிருந்து குடமுழுக்கைக் கண்டுகளித்தோம். அக்காட்சியை எழுத்தில் எழுத இயலாது. அந்த வகையில் அது ஓர் அற்புதக்காட்சி! இனியொருமுறை தில்லைச்சிற்றம்பலக் கூத்தனின் குடமுழுக்கைப் பார்க்க, நாங்கள் இருப்போமா என்ற கேள்வி என்னுள்ளத்தில் விசுவரூபம் எடுத்தது.

'உலகெலாம்...' என்று இறைவனார், சேக்கிழாருக்கு அடியெடுத்துக் கொடுத்த தலத்தில் குடமுழுக்கைக் கண்டமை, குதூகலமாக இருந்தது. இங்குள்ள ஆயிரங்கால் மண்டபத்தில்தான் கம்ப இராமாயணம் அரங்கேற்றம் செய்யப்பட்டதாகச் செய்திக் குறிப்பொன்று காணப்படுகிறது. மணிவாசகர் தில்லையில் இறையோடு கலந்ததும் இங்கேதான். இத்தகைய சிறப்பு வாய்ந்த சிதம்பரத்தில், தில்லைவாழ் அந்தணர்கள் நான்கு இராஜகோபுரங்கள் உட்பட பல கோபுரங்களில் நின்று, கலசங்களில் அபிடேக குடமுழுக்கைச் செய்த காட்சி, நெஞ்சில் ஈரக் கசிவையும், கண்களில் ஆனந்தக் கண்ணீரையும் ஏற்படுத்திற்று.

கடந்த 18 – வருடங்களாக சிதம்பரத்தை தரிசிக்கும் அவுஸ்திரேலியா ALAN BROOKER இன் பக்திப் பரவசம் மெய் சிலிர்க்க வைக்கிறது.

எமது தாயகம் உட்பட, வெள்ளை இனத்தவர் சிலரும் குடமுழுக்குக் காட்சியில் கலந்து அருள் பெற்றனர். அவர்களில் ஒருவர், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ALANBROOKER எனப்படும் பக்தருடன் உரையாடியபோது 87ம் ஆண்டிலிருந்து, 18 வருடங்களாக சிதம்பர ஆருத்தரா தரிசனத்தில் ஈடுபாடுகொண்டு, அருள்பெற்று வருவதாகக் குறிப்பிட்டபோது மெய் சிலிர்த்தது.

"இதற்கு எந்த வகையில் உங்களுக்கு ஈடுபாடு ஏற்பட்டது" என்று கேட்டபோது, "அவரே பொருள்" என்று மணிவாசகர் கூறியவாறு, நடராஜர் பெருமானை சுட்டிக் காட்டியபோது, எனக்குள் பேருவகை பொங்கியது. அவனருளாலே அவன்தாள் வணங்கி என்பது பொய்யாகவில்லை.

குடமுழுக்கைத் தொடர்ந்து மறுநாள் நடைபெற்ற ஐந்து பெரிய தேர்கள் தெருவுலா வந்தன. இதனைத்தொடர்ந்து, ஆயிரங்கால் மண்டபத்தே அதிகாலை, மகா அபிடேகமும் நடைபெற்றது. இவை பற்றி இன்னொரு கட்டுரையில் விரிவாக எழுதவுள்ளேன். ■

லண்டன் கனகதுர்க்கை அரங்கம் நிறைந்த

எம்.ரி.செல்வராஜாவின் 4 நூல்கள் வெளியீடு

தமிழ்த் தொண்டன் வி.ஆர்.இராமநாதன் தலைமை உரை: மேடையில் உரையாளர்கள்.

ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில், உரும்பிராய் எம்.ரி.செல்வராஜாவின் நான்கு நூல்களின் வெளியீட்டு விழா (17.5.2015) ஆரம்பித்த போது, மாலை நான்கு மணி அப்போதே அரங்கம் நிறைந்திருந்தது.

"வாடகை வீடு", உண்மை தெரியாமல் வைத்த நட்பு, (சிறுகதைகள்) ஊற்றெடுத்த உணர்வுகள் (கவிதைகள்), ரஷ்யாவின் ரஷ்புட்டீன் ஆகிய இந்த நான்கு நூல்களின் வெளியீட்டு விழா நிகழ்வுக்கு சைவ முன்னேற்றச் சங்கத்தின் தமிழ்த் தொண்டன் வி.ஆர்.ராமநாதன் தலைமை வகித்தார். "இங்குள்ள எழுத்தாளர்கள் தமது நூல்களை தாம் பிறந்த ஊருக்கு, அங்குள்ள உறவுகள் வாசிக்கக் கூடியதாக நூறு பிரதிகளையாவது அனுப்பி வைக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார். பதினெட்டு பேர்கள் இங்கு பேச இருக்கிறார்கள். ஒருவர் ஐந்து நிமிடத்துக்கு மேல் பேசாவிட்டால், விழாவைக் குறிப்பிட்ட நேரத்தில் முடித்து விடலாம் என்ற தலைவரின் கட்டுப்பாட்டுக்கு அனைவரும் தலை வணங்கினார்கள். இதனால் தானென்னவோ, விழா இரவு எட்டு மணிக்கு சில நிமிட நேரங்கள் முன்னதாக முடிந்து விட்டது. முழுக்க முழுக்க நூல்கள் தொடர்பான உரைகளுடன், முடிகிற போது மட்டும் சில நிமிட நேர நடன நிகழ்வோடு "போரடிக்காத", அறுவை இல்லாத ஒரு ஜனரஞ்சக விழா போன்று சுகமான நூல் வெளியீடாக அமைந்தது. பல்துறை சார்ந்தவர்கள் உரை நிகழ்த்தியும், பங்கு கொண்டும் விழாவைச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்க அம்சம்.

சுவிஸ்சர்லாந்து நாட்டிலிருந்து இந்நூல் வெளியீட்டு விழாவுக்காக வந்திருந்த எழுத்தாளர் டாக்டர் கல்லாறு சதீஸ், நூலாசிரியர் செல்வராஜாவை மிகச் சிறந்த எழுத்தாளர், கல்விமான், மிக உயர்ந்த பண்பு கொண்ட மனிதம் பேணும் மனிதார்த்மா என்று குறிப்பிட்டார். காலம் கருதி அவர் ஆற்றிய சிறிய உரை அரங்கத்தை அவர் பால் ஈர்த்தது.

"ரஷ்ய வரலாற்றில் இன்னும் மாயப்புதிராக திகழும் ரஸ்புட்டீனின் வாழ்க்கை வரலாற்றை இனிய நடையில், நுணுக்க விபரங்களோடு உரும்பிராய் எம்.ரி.செல்வராஜா அவர்கள் எழுதிய நூல் தமிழுக்கு வந்து சேர்ந்திருக்கும் சிறந்த படைப்பாகும்" என்று யாழ் பல்கலைக்கழக

தமிழில் கணனி : சிவா பிள்ளை

தொழில் அதிபர் தர்மகுலசிங்கம்

சுவிஸிலிருந்து வந்த டாக்டர் கல்லாறு சதீஸ்

முத்தமிழ் அறிஞர் ஏ.எஸ். தாசீசியஸ்

நூலகவியலாளர் ஜமுனா தர்மேந்திரா

தொகுப்பு : ஆனந்தராணி

முன்னாள் விரிவுரையாளர் மு.நித்தியானந்தன் தமது உரையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், சோவியத்தின் வீழ்ச்சியையடுத்து ரஷ்யாவின் ரகசியமாக வைக்கப்பட்டிருந்த ஆவணக் காப்பகங்கள், வரலாற்று அறிஞர்களின் பார்வைக்கு உட்படுத்தப்பட்டு ரஸ்புட்டீன் பற்றிய நூல்கள் மிக அண்மைக் காலத்தில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன.

நூலாசிரியர் எம்.ரி. செல்வராஜா உரை. மாதவி, நித்தி, கல்லாறு துணை மேயர் போல் ஆகியோர்.

ரஸ்புட்டீன் வரலாற்றை அறிய விரும்பும் எவருக்கும் எம்.ரி.செல்வராஜாவின் இந்த நூல் மிகச் சிறந்த விருந்தாக அமைய வல்லது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இலக்கிய ஆய்வாளர் மாதவி உரையாற்றும் போது "நூலாசிரியர் எம்.ரி.செல்வராஜா ரஸ்புட்டீனை தீயவர் என்றோ புனிதர் என்றோ ஒரு பக்கத்தில் நின்று மதிப்பிடாமல் சகல கோணங்களிலிருந்தும், நடுநிலைமையில் நின்றும் எழுதியிருப்பது பாராட்டத்தக்கதாகும். விறுவிறுப்பாக இந்த நாவலை எழுதிச் செல்வதில் நூலாசிரியர் வெற்றி பெற்றிருக்கிறார்" என்று குறிப்பிட்டார்.

அரங்கத்தை நிறைத்த தமிழ் உணர்வாளர்களில் ஒரு பகுதியினர்.

"எம்.ரி.செல்வராஜாவின் சிறுகதைகள் இனிமையான நடையில், எளிமையான தமிழில் எழுதப்பட்டவை ஆகும். ஈழத்துத் தமிழரின் வாழ்க்கை இயல்புகளைத் தெளிவாக உணர்த்தும் வகையில் எழுதப்பட்ட இந்தக் கதைகளை லண்டனில் தமிழ் பயிலும் மாணவர்களுக்குப் பாடத்திட்டத்தில் சேர்ப்பது பயன்மிக்கதாக அமையும்" என்று சைவப்புலவர் திருமதி விஜி ஜோதிநாதன் "உண்மை தெரியாத நட்பு" என்ற எம்.ரி.செல்வராஜாவின் சிறுகதைகளை விமர்சிக்கும்போது தெரிவித்தார்.

"ஈழத்துத் தமிழரின் வாழ்வுக் கோலங்களை மிகுந்த அவதானத்துடன் சிறுகதைகளாக வார்த்திருக்கும் தமிழ்ப்பணிக்கு தமிழ்கூறும் நல்லுலகம் கடமைப்பட்டிருக்கிறது" என்று நாடகப் பேராசான் தாசீசியஸ் தெரிவித்தார்.

"எமது சமூகத்தின் வாழ்வின் பதிவுகளை ஆவணப்படுத்த வேண்டியது அவசியம்" என்றார் நியூஹாம் துணை மேயர் போல் சத்தியநேசன்.

ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய தலைவர் சட்டத்தரணி இரத்தினசிங்கம் பேசுகையில், நூலாசிரியரின் எழுத்தாற்றலைப் பாராட்டினார். ஆலய செயலாளர் க.கேசவனும், தன்னார்வரான நூலாசிரியரை உயர்வாகப் பேசினார்.

உயர்வாசற்குன்று முருகன் ஆலய தலைவர் கு.நித்தியானந்தன், செல்வராஜாவிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்து விட்டால் போதும், அவர் செய்து முடித்து விடுவார் என்று நம்பலாம் என்று குறிப்பிட்டார்.

"ஈழத்து எழுத்தாளர்கள் பற்றிய விழிப்புணர்வு தமிழகத்தில் பரவலாக இடம் பெற்று வருகிறது. இந்திரா பார்த்தசாரதி, சுஜாதா போன்றவர்களை நேரில் சந்தித்தபோது என்னிடம் ஈழத்து எழுத்தாளர்களை விசாரித்திருக்கிறார்கள்"

– தொடர்ச்சி 30ம் பக்கத்தில்

துர்க்கை ஆலய தலைவர் இரத்தின சிங்கம்

துர்க்கை செயலாளர் கேசவன்

துர்க்கை ஆலய அர்ச்சகர்

ஆய்வாளர் மாதவி சிவலீலன்

படங்கள்: மயூரன்

லண்டனில் நடந்த மு.நித்தியானந்தனின்

'கூலித் தமிழ்' நூல் வெளியீட்டு விழா

தலைமையுரை: எஸ்.ராமலிங்கம்

அழகான ஆய்வு: மாதவி சிவலீலன்

மனித நேயம்: தோழர் வேலு

வெளியீட்டுரை: 'நாழிகை' மாலி

"மு.நித்தியானந்தனின் 'கூலித்தமிழ்' என்ற நூல் வெறுமனே மலையகத்தவரின் அவல வரலாற்றைச் சொல்கின்ற நூல் அன்று. அது, கற்க வழியற்றுக் கிடந்த தோட்டத் தமிழரின் போர்க் குணத்தையும், இலக்கியப் படைப்புக்களையும் புலப்படுத்துகின்ற நூல். மலையகத் தமிழரின் அவலம் பற்றி ஈழத் தமிழர்களும் கேட்டும், கேளாதவர்கள் போலவே இருந்து விட்டார்கள். அன்றைய ஈழத்தமிழரின் செயலுக்காக வெட்கப்பட்டு, வேதனைப்படுகிறேன்" என்று தமிழறிஞரும், வழக்கறிஞருமான செ.சிறீக்கந்தராசா கூறினார்.

லண்டன் 'சொறாஸ்ட்ரியன்' மண்டபத்தில் சமீபத்தில் நடந்த பிரபல விமர்சகரும், ஆய்வாளருமான மு. நித்தியானந்தனின் நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புரை நிகழ்த்துகையிலேயே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

மண்டபம் நிறைந்த இந்நிகழ்வுக்கு எஸ்.ராமலிங்கம் தலைமை வகித்தார். அவர் தமது தலைமை உரையில், "இலங்கையை வளம் கொழிக்கும் நாடாக மாற்றிய மலையகத் தமிழர்கள், அடையாளமற்றவர்களாக, தாங்கள் உழைத்து மாண்டதற்கான ஆதாரங்களேயற்றவர்களாக, உழைக்கவும், சாகவுமே சலுகை வழங்கப்பட்ட இனமாக மலையகத் தமிழினம் உழல்கிறது. நூறு ஆண்டு கால ஒடுக்குமுறையிலிருந்து இனச் சமத்துவம் கோரியும், பிறருக்குள்ள மரியாதை தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் மலையகத் தமிழர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டத்தில மலையக அறிவு ஜீவிகளும் பங்குபற்றுகின்றனர். இவர்களில் பிரபல ஆய்வாளர் மு.நித்தியானந்தன் முன்னணி வகிக்கிறார். அவரின் 'கூலித்தமிழ்' என்ற ஆய்வு நூல் மலையகத்தாயின் கழுத்தை அலங்கரிக்கும் மலர் மாலையாகும்" என்றார்.



'தமிழ் வெறியர்' செ.சிறீக்கந்தராசா

'மற்றவை நேரில்' இளைய அப்துல்லாஹ்

நன்றியுரை : எஸ்.பி.ஜோகரட்ணம்

"மொழிவழி நுணுக்கங்களும், அகராதியில் அனுபவமும், வரலாற்று ஞானமும், விமர்சன ஆற்றலும் கொண்ட நித்தியானந்தனின் 'கூலித்தமிழ்' நூலில் இடம் பெற்றுள்ள ஏழு கட்டுரைகளும் ஏழு முத்துக்களாகும். ஆதாரங்களைத் தேடி ஆவணப்படுத்தும் இந்நூல் தேர்ந்த வரலாற்று ஆசிரியனின் சீரிய பணியை வெளிப்படுத்துகிறது. லண்டன் மேடைகளில் நூல் விமர்சனங்களின்போது அவர் வெளிப்படுத்தும் திறனாய்வு ஆற்றல்

திருமதி நித்தியும் செல்வங்களும்

'கூலித்தமிழ்' நூலுக்குப் பெரும் கனதியைச் சேர்த்திருக்கிறது" என்று இலக்கிய ஆய்வாளர் மாதவி சிவலீலன் தனது உரையில் தெரிவித்தார்.

"ஆற்றலும் அறிவும் தேடலும் மிகுந்த மு.நித்தியானந்தனின் இந்த நூல் ஆய்வாளர்களுக்கு மட்டுமல்ல, சாதாரண வாசகர்களும் வாசித்து, மலையகம் பற்றிய புரிதலை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் சுவையாக எழுதப்பட்டுள்ளது இந்நூல்" என்று ஊடகவியலாளர் இளைய அப்துல்லாஹ் தெரிவித்தார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழக ஆவணப்பட இயக்குனரும், எழுத்தாளருமான அம்ஷன் குமார் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர், அம்ஷன் குமார் பேசுகிறார்

நிகழ்த்தினார். செல்வி சிவபாலன் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார்.

'யாழ்ப்பாணத்தில் 'வைகறை' வெளியீட்டின்மூலம் தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம்.ராமையா, சி.வி. வேலுப்பிள்ளை ஆகிய எழுத்தாளர்களின் நூல்களை வெளிக் கொணர்ந்ததன் மூலம் மலையக இலக்கிய வளர்ச்சிக்கு நித்தியானந்தன் அரும்பணியாற்றியுள்ளார். இலக்கியம், விமர்சனம், நாடகம், பதிப்புத்துறை என்று அவரது ஈடுபாடு விரிந்ததாகும். ஆயினும், தனது ஆக்கங்களை நூலுருவில் கொண்டுவருவதற்கான கரிசனை அவரிடத்தில் இல்லை என்பதை அவருக்கு எடுத்துணர்த்தி, இந்த நூலை வெளிக்கொணர்வதில் அவருக்கு நான் பெரும் உற்சாகம் கொடுத்திருக்கிறேன்" என்று பதிப்பாளர் பத்மநாப ஐயர் பேசுகையில் குறிப்பிட்டார்.

"க்ரியா"வின் வெளியீடாக வெளிவந்துள்ள 'கூலித்தமிழ்' என்ற இந்த நூல் நூலாசிரியர், நூலடக்கம், நூல் வடிவம், நூல் பிரசுரம் என்ற இவை அனைத்திலும் ஒரு நூல் எப்படி அமையவேண்டும் என்பதற்கான எளிமையான - இலக்கியமான இலக்கணம். நூலாசிரியருக்கு என்று ஓர் இலக்கணம் எழுதப்பட்டிருந்தால், அதற்கு அப்படியே அமைவான நூல் ஆசிரியராக நித்தியானந்தன் திகழ்கின்றார். அவருக்கு வயது எதுவாக இருந்தாலும் அவருடைய வாழ்வின் வசந்தம் இப்போதுதான வீசுகிறது. அந்த வசந்தத்தில் பூத்த மலர்கள் போன்ற இரண்டு குழந்தைச் செல்வங்களைத் தொடர்ந்து பூத்த மலராக இந்த நூலும் அமைகிறது. வசந்தம் இனிப்பூத்துச் சொரியும்" என்று நாழிகை ஆசிரியர் மாலி எஸ்.மகாலிங்க சிவம் நூலை வெளியிட்டுப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"இந்த வெளியீட்டு விழாவில் திரண்டிருக்கும் மக்களை நோக்கும்போது எனக்குப் புதிய உற்சாகம் பிறந்திருக்கிறது. நூல் வெளியான சில மாதங்களிலேயே மறு பதிப்பை வேண்டி நிற்பது மேலும் உத்வேகத்தைத் தருவதாய் அமைந்திருக்கிறது" என்று நூலாசிரியர் மு.நித்தியானந்தன் தனது ஏற்புரையில் தெரிவித்தார்.

தோழர் வேலு, சட்டத் தரணி எஸ்.பி.ஜோகரட்னம் ஆகியோரும் பேசினர். ■

'கூலித் தமிழ்' தந்த மு.நித்தியானந்தன்

மண்டபத்தை நிறைத்திருந்த ஆர்வலர்கள்

படங்கள்: சாந்தன்

சக்தி சக்திதாசன்

பலவீனமே பலமாகும் வாழ்க்கை ரகசியம்!

எம் எல்லோரிடமும் பலமும் உண்டு, பலவீனமும் உண்டு. ஆனால், எது பலமாக உள்ளது? எது பலவீனமாக உள்ளது? என்பதைப் பொறுத்தே ஒவ்வொருவரும் தம்மைப் பற்றிய தமது தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறார்கள்!

எதற்காக இப்போது என் மனம் இதை அலசுகிறது என்று கேட்கிறீர்களா? எமது பலவீனம் என்று பலர் அதை பிரயோகித்து, எமை வீழ்த்தி விடலாம் எனும் கனவில் வாழும்போது, அதே பலவீனம் எமக்குப் பலமாக அமைந்து விட்டால்...

அழகாகத் திட்டம் தீட்டியவர்களின் திட்டம் தவிடுபொடிதானே!

வாழ்க்கையில் எத்தனையோ இடிகளையும், அடிகளையும் தாங்கித்தான் வாழ்வுப் பயணம் நடைபெறுகிறது. இது அனைவருக்கும் பொதுவானது!

ஆனால், அவ்வடிகளும், இடிகளும் எமக்குக் கொடுத்த அனுபவப்பாடங்களின் வலிமையை உணர்வதற்கு நாளாகிறது.

செருப்பில்லாத காலுக்குத்தான் முள் தைக்கும் வலி புரியும் என்பார்கள். ஆனால், தொடர்ந்து கல்லும், முள்ளும் குத்துவதால் ஏற்படும் வலிகளைத் தாங்கித் தாங்கி அக்கால் ஒருவிதமான விரக்தியை அடைந்து விடுகிறது.

அதை ஒருவகை ஞானம் என்று கூடச் சொல்லலாம்!

என் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து எது எனது பலவீனம் என்று எண்ணி அதை உபயோகித்து வாழ்க்கையில் தமக்கு தேவையானதைச் சாதித்துக் கொண்டு விட்டோம் என்று எண்ணியவர்கள் இருந்தார்கள்; இருக்கிறார்கள்; இருப்பார்கள்!

ஆனால், அவர்களால் பலவீனம் என்று எண்ணப்பட்டதன் அடிப்படையில் நானடைந்த அனுபவத்தினால் நான் பெற்ற தெளிவே எனக்கு எதையும் தாங்கும் சக்தியைக் கொடுக்கும் பலம் என்பது எனக்கு மட்டுமே புரியும்.

காலச் சக்கரத்தின் சுழற்சியில் அனைவருமே சிக்குப்படுகின்றோம்; சில சமயங்களில் அச்சக்கரம் எமை மேல்நோக்கிக் கொண்டு செல்கிறது; சில சமயங்களில் அது எம்மைக் கீழே தள்ளி விடுகிறது!

ஆனால், மேலே சென்றவர்கள் எப்போதும் மேலேயே நின்று கொள்வார்கள் என்று எண்ணுவதோ, அன்றிக் கீழே தள்ளப்பட்டவர்கள் எப்போதும் கீழேயே இருப்பார்கள் என்று எண்ணுவதோ மடமைத்தனமாகும்!

மேலே கொண்டு சென்ற அதே காலச் சக்கரம், கீழேயும் கொண்டு வரலாம்; கீழே தள்ளிய அதே காலச்சக்கரம் மேலேயும் கொண்டு செல்லலாம்!

இதுதான் வாழ்க்கை ரகசியம். இதை என்று நாம் தெளிவுற உணர்ந்து கொள்கிறோமோ, அப்போதுதான் வாழ்க்கையின் சூட்சுமத்தை உணர்ந்தவர்களாகிறோம்.

சமீபத்தில் நான் தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்தேன். ஆப்கானிஸ்தான் போரில் ஈடுபட்ட இங்கிலாந்து படைவீரர் ஒருவர்



போரில் ஏற்பட்ட விபத்தினால், இரு கால்களையும் இழந்திருந்தார்.

விளையாட்டுகளில் மிகுந்த ஈடுபாடுடைய அவ்வீரர் தன்னுடைய இழப்பினைத் தனது பலவீனமாகக் கருதவில்லை என்று கூறினார்.

சக்கர நாற்காலியில் இருந்து கொண்டே கூடைப் பந்துப் போட்டியில் பயிற்சி பெற்றார். தனது விடாமுயற்சியினால் அங்கவீனர்கள் பங்குகொள்ளும் கூடைப்பந்து விளையாட்டு அணியில் இடம்பிடித்துக் கொண்டார்.

எம்மீது திணிக்கப்படுபவை அனைத்துமே சவால்களே! அவைகளைச் சமாளிக்கும் திறமைகள் எம்முள்ளே உறைந்து கிடக்கிறது.

அவரது உத்வேகத்தையும் தனது பலவீனம் என்று கருதப்பட்டதையே தமது பலமாக மாற்றிய அவ்வீரரின் மனத்திரத்தையும் கண்டு நான் மெய்சிலிர்த்தேன்.

அப்போது நான் படித்த ஜென் கதை ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

ஒரு சிறுவன் விபத்து ஒன்றில் தனது இடது கையை இழந்திருந்தான். சிறுவயது முதலே குத்துச் சண்டைப் பயிற்சியில் ஆர்வமுற்றிருந்த அவனைப் பார்த்துப் பலரும், நீ எப்படி இனிக்குத்துச் சண்டை வீரனாகப் போகிறாய் என்று கேட்டார்கள்.

அவனோ மனம் தளரவில்லை 'குத்துச் சண்டை பயிற்றுவிக்கும் ஒரு ஜென் குருவிடம் சென்று நான் குத்துச் சண்டை பயிலப் போகிறேன்' என்று சொன்னான்.

'ஒரு கையுடன் எப்படி குத்துச் சண்டை பயிலப் போகிறாய்?' என்று அந்தக் குரு கேட்கவில்லை. வலது கையினால், பிரயோகிக்கும் ஒரே ஒரு குத்தை மட்டும் கற்றுக் கொடுத்தார்.

ஒவ்வொரு நாளும் அவன் பயிற்சிக்கு வரும்போதும், அதே ஒரு குத்தைத்தான் பயிற்றுவித்தார்.

அச்சிறுவனோ என்ன இது என்று கொஞ்சம் விசனப்பட்டாலும், குருவின் மீது கொண்டிருந்த அதீத நம்பிக்கையால் தொடர்ந்து பயிற்சி செய்தான்.

சிறிது காலத்திற்குப் பின்னால் நீ இனி போட்டிக்குத் தயார் என்று அவனைக் குத்துச் சண்டைப் போட்டிக்கு அனுப்பி வைத்தார்.

அவனும் போட்டியில் அவர் கற்றுக் கொடுத்த அந்த ஒரேயொரு வலது கைக் குத்தின் மூலம் அனைவரையும் வெற்றி பெற்று வீரன் எனப் பரிசு வாங்கினான்.

பின் அவன் தனது குருவிடம் "குருவே இந்த ஒரேயொரு குத்தின் மூலம் எப்படி என்னால் வெற்றி பெற முடிந்தது?" எனக் கேட்டான். அதற்கு அந்தக் குருவோ, "அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது நீ கற்றுக்கொண்ட அந்த குத்துத்தான் குத்துச் சண்டையிலேயே மிகவும் மகத்தானது. இரண்டாவது அதைத் தடுப்பதற்கு உனது எதிரி உனது இடது கையை மடக்கிப் பிடிக்க வேண்டும். ஆனால் உனக்குத்தான் இடது கை இல்லையே" என்றார்.

அச்சிறுவனின் மனோதிடத்தைப் புரிந்துகொண்டு அவனது பலவீனம் என்று கருதப்பட்ட ஒன்றையே அவனது பலமாக்கிய அக்குருவின் ஞானம் எல்லையற்றது.

வாழ்க்கை எம்மீது எப்போது எவ்வகையான சவால்களைத் திணிக்கும் என்று எம்மால் முன்பே தெரிந்துகொள்ள முடியாது.

எம்மீது திணிக்கப்படுபவை அனைத்துமே சவால்களே! அவைகளைச் சமாளிக்கும் திறமைகள் எம்முள்ளே உறைந்து கிடக்கிறது. அதனைச் சரியான முறையில் உருக்கி எடுத்து சிக்கல் எனும் பூட்டைத் திறக்கும் அறிவுச் சாவியாக உபயோகிப்பதே எமது நோக்கமாக இருக்க வேண்டும்.

இலைகளை அசைக்கும்போது எம்முன்னே அசைவது காற்று என்று புரிகிறது. ஆனால், அது எமது கண்ணுக்குத் தெரிகிறதா?

ஆனால், கையினால் பிடிக்க முடியாத கண்ணுக்குப் புலப்படாத காற்றைக் கொண்டு எத்தனையோ கருவிகளை இயக்கும் ஆற்றல் மனிதர்களிடம் இருக்கவில்லையா?

தொட்டால் சுடும் நெருப்பினால் எத்தனை உபயோகமான காரியங்களைச் சாதிக்கக் கூடிய வல்லமை மனிதர்களிடம் குடி கொண்டிருந்திருக்கின்றன.

எம் அனைவரின் மனங்களிலேயும் திறமை எனும் கொள்கலன் உண்டு. அது ஒவ்வொருவரிடத்திலும் அளவில் வேறுபடலாம். வகையில் வேறுபடலாம். ஆனால், அனைவருக்கும் தாரக மந்திரம் ஒன்றேயொன்றுதான்!

பலவீனங்களைப் பலமாக மாற்றிக்கொண்டால் எத்தனை பெரும் சிரமங்களும் பனித் துளிக்குள் அடங்கும் பனை மரம் போலவே! ■

விரிவுரையாளர்கள் தேவை

தமிழ் / ஆங்கிலம், தமிழ் விரிவுரையாளர்:
பி.ஏ., (தமிழ்) மாணவர்களைத் தயார்படுத்துவதற்கு, தமிழில் ஆர்வமும், தேர்ச்சியுமுள்ள விரிவுரையாளர்கள் தேவை.

ஆங்கில ஆசிரியர்
B.A., (தமிழ்) முதலாண்டுக்கு ஆங்கில LITERATURE கற்பிப்பதற்கு ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் தேவை.

மேலதிக விபரங்களுக்கு:
ரகு : 07956586 655/ 07958 408 280
e-mail: rajupathy@gmail.com

காசியில் முள்ளிவாய்க்காலில் நீத்தார் வழிபாடு; பிரியாகம்!

பிரித்தானியா சைவ ஒன்றியத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்த யாகம் கூனம்பட்டி மகாலிங்க சுவாமிகளின் தலைமையில் நடைபெற்றது.

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த அத்தனை ஆத்மாக்களுக்கும் 108 பிண்டங்கள் வைத்து வழிபாடு செய்யப்பட்டு இப்பிண்டங்கள் கங்கையில் கரைக்கப்பட்டன.

அகில இந்திய இந்து மக்கள் கட்சித் தலைவர் திரு.அருண்சம்பந்த இவ்வழிபாட்டில் கலந்துகொண்டு இவ்வழிபாட்டின் தாற்பரியத்தை இந்திய பிரதமருக்கு எழுத்து மூலமாக சமர்ப்பித்தார்.

தாய் நாட்டிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனும் மந்தை பிரதேச தலைவர் திரு.செந்தூரனும் கலந்துகொண்டார்கள்.

இவ்வழிபாட்டின் முக்கிய அம்சங்கள்:

இவ்வழிபாட்டின் மூலம் இறந்த தேதி, திதி தெரியாதவர்களுக்கும், ஒட்டுமொத்தமாக குடும்பத்துடன் இறந்தவர்களுக்கும் காணாமல் போனோர்கள் என்று உறவினர்கள் நினைத்து கொண்டிருக்கும் வேளையில் உயிர் நீத்தவர்களுக்கும், எமது தாய்க்குலத்துக்கும், தமிழ் விடுதலைக்கு தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் தியாகம் செய்த எமது தளபதிகளுக்கும்,

மூத்த தலைவர்களுக்கும்

சாதி சமய வேறுபாடின்றி ஆத்ம சாந்திப் பூஜையும், வழிபாடும் நடாத்தி

இவ் ஆத்மாக்களுக்கு முக்தி வேண்டி பிரார்த்தித்து பிரித்தானிய சைவத் திருக்கோயில்

ஒன்றியம் மிகுந்த திருப்தியடைகின்றது. ■

171 Tooting High Street, Tooting, London SW17 0SZ
020 8672 5551, 020 8672 2010

வாரத்தில் 7 நாட்களும் எமது முழுமையான சேவை
We Serve all 7 Days in a week
உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான விலையில் விமானச் சீட்டுக்களை உடன் பெற்றிட நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம்

ABTA 6495 PROTECTED

Worldwide Travel Agent

Special Rates for (Subject to availability)
Colombo £210 + tax,
Madras £235 + tax, (with British Airways)
Canada £?? + tax, (with Sri Lankan Airlines)

For Special Family Discount and Emergency Ticket Only.
Please Contact Wimal on 07956 206 709

SriLankan Emirates Singapore Airlines Etihad Qatar Airways British Airways

For special offers please listen to Sooriyoothayam Radio on 1035MW Mon - Fri 10 to 11 pm

Indian Visa services available

உங்கள் சகல பிரயாணத் தேவைகளுக்கும் அழையுங்கள்...
020 8672 5551
020 8672 2010

அவசர உடன் டிக்கட்களுக்கு அழையுங்கள் : 07956 206 709
விமல் / விஜி 07957 121 696
Wimal / Viji

Email: wimal@a-lankatravel.co.uk | Web: www.a-lankatravel.co.uk

27 ம் பக்கத்தின் தொடர்ச்சி

என்று லண்டன் இலக்கிய சங்கமம் அமைப்பாளர் சிவ தணிகாசலம் கூறினார்.

இசைப்பித்தன் பதஞ்சலி நவேந்திரன் பேசுகையில், அண்ணனாக, நண்பனாக, நீண்ட பல ஆண்டுகளாக பழகிய நினைவுகளை மீட்டார்.

ஒரே வகுப்பில், ஒரே வாங்கில், உரும்பிராய் இந்துக் கல்லூரியில் படித்து லண்டனுக்கு முதலில் படிக்க வந்து, பின் 40 ஆண்டுகளுக்கு முன் நூலாசிரியரை லண்டனுக்கு அழைத்த நண்பனாக தன் உணர்வுகளை வெளிப்படுத்தினார். தொழில் அதிபர் க. தர்மகுல சிங்கம்.

"லண்டனுக்கு வந்த பின்னர் எனது நண்பன் செல்வராஜா படித்துப் பட்டம் பெற்று சிவில் என்ஜினியராகி, தமிழ் பாடசாலை எழுத்து என்று ஒரு திக்கில் சென்றார். நான் படித்து, தொழில் துறையில் ஈடுபட்டேன். உரும்பிராய் இந்துக் கல்லூரியை இருவருமே இன்று வரை மறக்காது, நண்பர்களாக வாழ்கிறோம்" என்றார். நிகழ்ச்சிகளை ஆனந்தராணி பாலேந்திரா தொகுத்து அளிக்க, நூலகவியலாளர் யமுனா தர்மேந்திரன், பிறேமினி விமலதாசா, சிவா பிள்ளை, பிரேம் சங்கர், ஷேக் தாவூது, செல்வேந்திரன் ஆகியோரும் பேசினார்கள். கவிஞர் பாலரவி கவிதையால் நூலாசிரியருக்கு புகழ் மாலை செலுத்தினார். நூலாசிரியர் எம்.ரி.செல்வராஜா நன்றி சொன்னார். நடன ஆசிரியை துஷ்யந்தி ஜெயானந்தனின் மாணவிகளின் நடன நிகழ்ச்சியுடன், இரவு விருந்துபசாரமும் அளிக்கப்பட்டது. ■

ஞாபகம் வருதே!



லண்டனில் பிரபலமான வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.நவரத்தினம் எழுதும் நினைவுகள் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

உண்மைக்குப் புறம்பானது

கடந்த "புதினம்" இதழில், ப.வை.ஜெயபாலன் எழுதியுள்ள "மரணித்துக் கொண்டிருக்கிற யாழ்ப்பாணத்து சாதி வெறி" என்ற கட்டுரை படித்தேன். தீண்டாமை வெகு ஜனப் போராட்டத்தில் திருவாளர்கள் பாலா தம்பு, எட்மன் சமரக்கொடி ஆகியோர் முன்னின்று நடத்தியதாகத் தவறான தகவல் தரப்பட்டுள்ளது. இது உண்மைக்குப் புறம்பான செய்தி. உண்மையில், தோழர்கள் என்.சண்முகதாசன், எஸ்.டி.பண்டாரநாயக்கா ஆகியோரே முன்னின்று நடத்தினார்கள் என்பதை அறியத் தருகிறேன்.

- ஜெயபாலன், GreenFord

வாழ்த்துவோம்

தமிழா தமிழா எழுந்து நீ... தமிழா எழுந்து நீ! என்ற தலைப்பைப் பார்த்ததும், தமிழீழ விடுதலை உணர்வுக் கட்டுரை என்று நினைத்துப் படிக்க ஆரம்பித்தேன். பின் தான் படங்களையும் பார்த்தேன். நமக்காக ஒரு தொலைக்காட்சி வருவதை அறிந்து மகிழ்ந்தேன். அந்த டி.வி.யை உடனேயே பார்க்க வேண்டும் என்ற ஆவலை அந்த எழுத்துக்கள் ஏற்படுத்திவிட்டன. பெருங்குறையைத் தீர்க்க முன் வந்துள்ள நல்ல உள்ளங்களை நாமும் வாழ்த்துவோம்!

- க. சிவனேசன், HAYES

லண்டனில் ஹோமியோபதி

லண்டனில் ஹோமியோபதி வைத்தியத்தை தமிழர்கள் மத்தியில் பிரபலமாக்கிய பெருமை "புதினம்" இதழுக்குத்தான் உண்டு. டாக்டர் தியாகராஜன் என்ற ஹோமியோபதி வைத்திய நிபுணர் மூலம் அந்த மருத்துவத்தின் மகிமையை கடந்த பத்தாண்டுகளுக்குள் அறிய வைத்து விட்டீர்கள்.

- சோ. பாஸ்கரன், Sowthall

வித்தகர்

டாக்டர் ஸ்ரீதரன் தொடர்ந்து எழுதி வரும் ஆக்கங்கள் அருமை! சிலருக்குச் சாட்டையடி! பலருக்கு வாசிக்க வாசிக்க சிந்திக்க வைக்கிறது. அவரது "நிர்வாணம்" புத்தகத்தை "புதினம்" வெளியிட்டு இருப்பதை அறிந்து உங்களிடம் கடிதம் எழுதிப் பெற்றுக் கொண்டேன். ஈழத்தில் பிறந்த அவர் எழுதுவதில் ஒரு வித்தகர்!

அ.ராசலிங்கம், Newmalden

கே.ஜி. மகாதேவா எங்கே?

"புதினம்" இதழில் இப்போது எல்லாம் தமிழக செய்தியாளரின் கட்டுரைகளைக் காணவில்லையே! அவரது தமிழக கட்டுரைகளை விரும்பிப் படிப்பேன். நீண்ட கால பத்திரிகையாளர் என்பதால், இலகுவாகப் புரியும்படி எழுதுவார். நடக்கப் போவதை முன் கூட்டியே சொல்லியும் விடுவார். ஜெயலலிதா சிறைத்தண்டனை விதித்துத்தீர்ப்பு வெளியான சமயம், அவர் மீள்வார் என்று உறுதியாகச் செய்தி எழுதிய அவரது கட்டுரையைத் தொடர்ந்து வெளியிடுங்கள்!

- செ.சிவப்பிரகாசம், Wembley

பாராட்டு

லண்டனில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டியது.

- கு.அரச ரத்தினம், CROYDON

LycaFly

CALL 24X7
0207 132 32 32
www.LycaFly.com

PRICE MATCH GUARANTEED

COLOMBO From £390 Incl Taxes

PLUS

£20 FREE

LYCAMOBILE TOP-UP WHEN YOU BOOK WITH US

*T&Cs Apply - Top-up offer excludes on selected airlines

Hurry! Offer ends 31st May 2015

Any Airline... Any Destination... Lowest fare Guaranteed

BANGKOK	from £363	BEIJING	from £328	SINGAPORE	from £391	KUALA LUMPUR	from £376
DELHI	from £385	DUBAI	from £264	MELBOURNE	from £690	TORONTO	from £343
KOCHI	from £385	CHENNAI	from £395	HONG KONG	from £465	NEW YORK	from £440

Attractive stop over deals!

Dubai ★★★★★

From £32 per person

2 nights / 3 days stay
4 Star on Twin Sharing - Room Only
Validity May/June/July 2015
Ticket stop over charge may apply

Abu Dhabi ★★★★★

From £34 per person

2 nights / 3 days stay
4 Star on Twin Sharing - Room Only
Validity May/June/July 2015
Ticket stop over charge may apply

Sri Lanka ★★★★★

From £53 per person

2 nights / 3 days stay
4 Star on Twin Sharing - Room Only
Validity May/June/July 2015
Ticket stop over charge may apply

Doha ★★★★★

From £56 per person

2 nights / 3 days stay
4 Star on Twin Sharing - Room Only
Validity May/June/July 2015
Ticket stop over charge may apply

Many more amazing holiday deals. Hurry! Book Now

CANARY WHARF
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100

EAST HAM
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

WEMBLEY
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

COLOMBO
No. 08, Kinross Avenue, Colombo 04.
Sri Lanka · 0117 623 232

IATA

9624 PROTECTED

Lycamobile

Call the world for less

WIN £10,000 CASH !

THE 2015 VIDEO COMPETITION

Make a video promoting our

'No Roaming Charges'

offer and you could win £10,000 cash!

More info and t&c at www.lycamobile.co.uk/video2015

No Roaming Charges

when you use your Lycamobile abroad in 17 destinations

For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322

Top-up your SIM online or where you see the following signs:

top-up · BP · epay · TESCO · Sainsbury's · ASDA · WHSmith · Martin McColl

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Special International rates for UK Plans customers offer ("the offer") is valid for calls from the UK to standard international landline and mobile numbers only and for customers with UK PLAN 7.5 or more. (Except UK plan 5). Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. These rates are valid until 31-05-2015. Lycamobile UK Plan ("the offer") inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. 4G availability is subject to handset model and location. The offer is valid from 01.01.2015. Customers must buy a bundle or top-up for no roaming costs on calls and texts. Customers must buy a specific data bundle for no roaming costs on data – full details at lycamobile.co.uk. Free Lycamobile to Lycamobile calls when roaming are restricted to a total of 100 minutes (applicable to both inbound and outbound calls). No roaming costs are only available for a continuous period of 59 days.

Lycamobile

Call the world for less